
www.tamilarangam.net


# சுவடுகள்




உள்ளே இலவச இணைப்பு
நோர்வேத் தமிழன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**SUVADUGAL**
A TAMIL MONTHLY FROM NORWAY
**Estd:** Sept` 1988
**Bank account:** 16075213062
Sparebanken NOR

**ISSN:** 0804-5712
**Editorial Group:** Thuruapalagar
**Issue number:** 77 January 1997

**Price:** 25NKr.
**Subscription:** 300NKr/ 12 issues

**Published by:** Norway Tamil Cultural Centre
**Address:** Suvadugal,
Herslebs gt43,0578 Oslo,
NORWAY
Dato: Januar 97

**சுவடுகள்** தமிழ் மாத இதழ்
**ஸ்தாபிதம்:** புரட்டாதி 1988
**வங்கிக்கணக்கிலக்கம்:** 16075213062

**ஆசிரியர் குழு:** துருவபாலகர்கள்.

**தனிப்பிரதி விலை:** 25 குரோணர்கள்
**சந்தா:** பன்னிரு இதழ்களுக்கு 300 குரோணர்கள்
**வெளியீடு:** நோர்வே கலாச்சார மையம்
**முகவரி:** சுவடுகள்
Herslebs gt43, 0578 Oslo,
NORWAY

# நோர்வே அரசே கொலைக்களத்திற்கு தமிழர்களைத் திருப்பி அனுப்பாதே!



\- சுவடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

-ராஜன்-

# தமிழ்மாறனுடன் ஒரு சந்திப்பு

**திரு. வி. ரி. தமிழ்மாறன் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டபீட முதுநிலை விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார். இவர் இலங்கையின் முக்கிய அரசியல் விமர்சகராகவும், சட்டவியல் ஆய்வாளராகவும் கருதப்படுகிறார். மனித உரிமைகள், சர்வதேசச்சட்டம், சர்வதேச உறவுகள் தொடர்பாக பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.**



சுவடுகள்: நீங்கள் நோர்வே வந்திருப்பதன் நோக்கம் என்ன? இதுதான் உங்கள் முதலாவது ஐரோப்பிய விஜயமா?

தமிழ்மாறன்: இங்கு ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் நடைபெறும் கோடைகால வகுப்பில் கலந்துகொள்ள வந்திருக்கிறேன். இம்முறை, உள்நாட்டு மோதல்களுக்குத் தீர்வுகாணல், சமாதானப் பேச்சுவார்த்தை என்பன பற்றியும், முரண்பாடுகளுக்கான காரணங்கள் பற்றியும் போதனைகள் நடைபெற இருந்ததால் நான் விருப்புடன் கலந்துகொண்டுள்ளேன்.

ஐரோப்பாவில் இலண்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளுக்குப் பல தடவைகள் வந்து சென்றுள்ளேன்.

செய்யும். போராட்ட அணுகுமுறையில் ஏற்படும் கருத்து மோதல்கள் போராட்டத்தைப் பலவீனப்படுத்தாதபடிக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும். எமக்கு நம்பகத் தன்மை இருக்க வேண்டியது மிக அவசியம். பேரினவாத அரசியல்வாதிகள் லாபமடையும் வகையில் எமது செயற்பாடுகள் இருக்கக்கூடாது. தேசியவாதம் மற்றவர்களால் இனவாதம் என்று குற்றஞ் சாட்டப்படுவது எனக்குக் கவலையளிக்கிறது. எமது அணுகுமுறைகளில் மாற்றம் அவசியம். இது எமது கோரிக்கைகளுக்குத் தார்மீகப் பலத்தை அளிக்கும்.

கெடுபிடிப் போருக்குப் பிந்திய உலகின் நிலைப்பாட்டை நாம் இன்னும் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

சுவடுகள்: மனித உரிமைகள் சட்ட அறிஞர் என்ற வகையிலும் அரசியல் விமர்சகர் என்ற வகையிலும் நன்கு அறியப்பட்டவர் நீங்கள். அந்தளவில் மனித உரிமைகளுக்கும் எமது விடுதலைப் போராட்டத்துக்குமான உறவு பற்றி ஏதாவது கூறவிரும்புகிறீர்களா?

தமிழ்மாறன்: மனித உரிமைகள் பற்றி அதிகமாகவே பேசலாம். ஆனாலும் விடுதலைப் போராட்டம் என்றளவில் பார்ப்பின் மனித உரிமைகளின் மறுப்பே விடுதலைப் போராட்டங்களை உற்பத்தியாக்குகின்றன எனலாம். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும்போது தங்களது போராட்டத்தை [illegible]

சுவடுகள்: சுயநிர்ணய உரிமை பற்றி அண்மையில் இங்கு கருத்தரங்கில் பேசினீர்கள். தமிழ் மக்களுக்கு இதற்கான உரிமையுள்ளதா என்பதை வாசகர்களுக்கு விளக்குவீர்களா?

தமிழ்மாறன்: சுயநிர்ணய உரிமை என்பது இன்று உலகளாவிய ரீதியில் பலமாக விவாதிக்கப்பட்டு வரும் ஒரு விடயம். இதில் அரசறிவியலும் சர்வதேசச் சட்டமும் நேரடியாகவே சம்பந்தப்படுகின்றன. அரசறிவியல் என்ற வகையில் பார்த்தால் இலங்கையில் தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இனம் என்பது முதலில் நிறுவப்பட வேண்டும். அங்ஙனம் நிறுவிய பின்னர் அந்த இனத்துக்குச் சுயநிர்ணய உரிமை உண்டென வாதிடலாம். எம்மைப் [illegible] இது இரண்டுஞ் சாத்தியமே. ஆனால் இந்த

தமிழ்த்தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வகையில் கடந்த காலத்தில் நாம் கூடிய கவனஞ் செலுத்தியிருக்கவில்லை. அன்றாட நிகழ்வுகள், வெற்றி தோல்விகளை வைத்தே எமது நிலைப்பாட்டை விளக்க முயன்று வந்திருக்கிறோம். இன்று மேற்கொண்டு விளக்கமுடியாத சிக்கலான நிலை தோன்றியுள்ளதுடன், எமது போராட்டத்தின் நோக்கம், தன்மை என்பனவும் கேள்விக்குள்ளாகின்றன.

தேசிய இனம் என்பதன் வரைவிலக்கணம் என்ன என்பது தொடர்பாக ஏராளமான நூல்களும் கட்டுரைகளும் வந்துள்ளன. நானும் சில கட்டுரைகளை இது விடயத்தில் எழுதியிருக்கிறேன். இலங்கைக்கு வெளியில் வாழ்கின்ற தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் அந்தோனி ஸ்மித் (Anthony Smith) என்பவரது கட்டுரைகளைப் பார்த்தல் நன்று. ஒரு முடிவில்லாத சுற்றுவட்டம் போன்று இந்த விவாதம் நீடிக்கின்றது.

தேசிய இனம் என்பது அங்கீகரிக்கப்பட்டால் - பின்னர் சுயநிர்ணய உரிமைக்கான வாதம் சர்வதேசச் சட்டப்படி முன்வைக்கப்படலாம். "People" என்ற சொல்லுக்கு இச்சட்டத்தில் குடியேற்றவாதத்திற்கு உட்பட்ட "மக்கள்" என்றளவிலேயே 70களின் பிற்பகுதிவரை பொருள் விளக்கம் கொடுக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிந்திய காலத்தில் சில அறிஞர்கள், "அடக்கப்படும் மக்கள் பிரிவினர்" எவரும் இந்த வரைவிலக்கணத்துக்குள் வரலாம் என்றும், மனித உரிமைகளின் மொத்தத் தொகுப்பே சுயநிர்ணய உரிமை என்றும், உரிமை மறுப்புகள் சுயநிர்ணய உரிமைப் பிரயோகத்துக்கு வித்திடலாம் என்றும் வாதிட்டு வருகின்றனர். நான் கலந்துகொள்ளும் எல்லா மாநாடுகளிலும் இந்த இரண்டாவது கருத்தை மிகத் தீவிரமாக வலியுறுத்தி வருகிறேன்.

அதிர்ஷ்வசமாக, 1989இன் பின்பு, மேற்கு நாடுகள் இந்தப் போக்கினைப் பலமாக எதிர்க்காத ஒரு நிலைப்பாட்டினை எடுத்துள்ளன. இந்தப் போக்கினால் புதிய நாடுகள் உருவாகும்போது தமது நலன்கள் பாதிக்கப்படப் போவதில்லை என்று இப்போது அவைக்குத் தெரியும். அதனால் எதிர்ப்புக் காட்ட வேண்டும் என்ற அவசியம் அவைக்கு இல்லை.

ஆனால், மேற்குலக நாடுகள் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் ஒன்றைக் கட்டாயமாக ஆதரிக்க வேண்டும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. ஆதரிக்க வைப்பதற்கான முயற்சிகளைச் சம்பந்தப்பட்டவர்களே மேற்கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் தனியான ஒரு தேசிய இனம் என்பது முறையாக எடுத்துச் சொல்லப்பட்டு சுயநிர்ணய உரிமைப் பிரயோகத்துக்கான ஆதரவை நாமே வலிந்து தேடவேண்டும். ஆனால் இதனைச் செயற்படுத்துவதில் இன்று சில தடைகள் எதிர்கொள்ளப்படுகின்றன.

தேசிய இனம் என்பதை அங்கீகரித்தல், சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்றவாறாகப் பேசும்பொழுது - ஏதோ ஒரு நீதிமன்று அல்லது அரசாங்கம் இதனை எழுத்தில் வழங்கப் போகின்றது என்று பொருளல்ல. உண்மையில் இது ஒரு பிரச்சார யுத்தமே. இதில் சாம, பேத, தான, தண்டம் எல்லாவற்றுக்குமே இடமிருக்கும் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஏனைய அரசுகளின் செயற்பாட்டிலிருந்தே இந்த அங்கீகாரம் வழங்கப்படுகின்றமையை ஊகிக்க வேண்டும். உண்மையில், சர்வதேசச் சட்டம் என்பதே மற்றவர்களின் நடத்தையை அடிப்படையாகக் கொண்டதே.

சுவடுகள்: சரி, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டால், தமிழ்மக்கள் திருப்திப்பட்டு விடுவார்களா? அதாவது அதன்கீழான தீர்வு திருப்தியானதாகுமா?

தமிழ்மாறன்: நிச்சயமாக ஆம் என்றே கூறலாம். ஏற்கனவே கூறியதைப் போல இந்த அங்கீகாரம் ஏனைய நாடுகளின் நடத்தையிலிருந்து நாம் ஊகிப்பதாகும். இவ்வகையில், இலங்கை அரசாங்கம் முன்வைக்கும் எந்த ஒரு தீர்வையும் - அது சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்வதான தீர்வாகுமா என்று எடைபோட்டுப் பார்ப்பதில் சர்வதேச சமூகம் நமக்கு நன்கு உதவமுடியும். எனவே திருப்தியான தீர்வுக்கான கதவுகள் என்றும் திறந்தே இருக்கவேண்டும். இதில் இராஜதந்திர அணுகுமுறை மிக அவசியம்.

சுயநிர்ணய உரிமையின் கீழான தீர்வுகள் என்ன? என வினாவின், தனித்துவம் பேணப்படல் என்று சுருக்கமாகக் கூறலாம். தன்னைத்தானே ஆளுதல், தலைவிதியைத் தானே நிர்ணயித்தல் என்று பொதுவாகப் பேசப்படும். தன்னைத்தானே ஆளுதல் என்பதில் இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று, மறுக்கப்பட முடியாத ஜனநாயக ஆட்சிமுறை, மற்றையது தனித்துவம் பற்றிய அச்சமின்மை. இந்த இரண்டையும் உத்தரவாதப் படுத்துவதற்குச் சில வழிமுறைகள் உள்ளன. கூட்டாட்சி, Consociation எனப்படும் கூட்டுறவாடல், Confederations எனப்படும் கூட்டிணைவுகள், இறுதியாகப் பிரிவினை என்று வரிசைப்படுத்தலாம்.

ஒரு தேசிய இனம் மேற்சொன்ன தீர்வுகளில் எது தனக்கு ஜனநாயக ஆட்சி முறையையும், தனித்துவம் பற்றிய அச்சமின்மையையும் உத்தரவாதப் படுத்துகிறதோ அந்தத் தீர்வைப் பெற விரும்பலாம். குறிப்பிட்ட இனத்தின் போராட்ட வரலாறும், வடந்த கால அனுபவங்களும் இங்கு தீர்மானமெடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

உதாரணமாக இன்று ஈராக், ஈரான், துருக்கி என்ற முக்கூட்டுப் பகுதியில் நடைபெற்றுவரும் குர்தியர் போராட்டத்தில் அவர்கள் தாங்கள் தனியான குர்திய நாட்டுக்காகப் போராடுவதக இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. சுயாட்சிக்காகப் போராடுவதாகவே கூறுகிறார்கள். அதாவது, தங்களைத் தாங்களே ஆளவேண்டும் என்ற விருப்பு. ஆனால் அப்பகுதிகளில் விஜயஞ் செய்துவிட்டு வந்த பத்திரிகையாளர் ஒருவர் அப்போராட்டம் பற்றி

www.tamilarangam.net

எழுதியுள்ள நூலொன்றில் – "இவ்வளவு இழப்பீடுகளுக்குப் பின்பும் அவர்கள் சுயாட்சியோடு திருப்திப்படுவர் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?" என வினாத் தொடுத்துள்ளார். எனவே தீர்வு என்பது கடந்த கால அனுபவங்களில் இருந்து தன்னை அந்நியப்படுத்தியதாக இருக்க முடியாது. எனவேதான் வீண்மோதல்கள் தீர்வினை மேலுஞ் சிக்கலாக்கிவிடும் என்று எம்மைப் பொறுத்தளவிலும் நாம் கவலைப்பட வேண்டியுள்ளது.

சுவடுகள்: தீர்வு, மக்கள் அதனை ஏற்றல் என்றெல்லாம் கூறுகிறீர்கள். எமது மக்கள் அதற்காகத் தயார்ப்படுத்தப் படுகின்றனரா? தீர்வு வெளியிலிருந்து திணிக்கப்பட முடியாது. சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்தே வரவேண்டும்; அல்லது அது தீர்வாகாது. ஜனநாயகம் பற்றிய சரியான விளக்கம் இல்லாவிட்டால் தீர்வு மக்களிடமிருந்து வமுடியாது. இலங்கையின் அரசியல் கடந்த காலங்களில் **Politics of exclusion** என்றவாறாக இருந்து வந்துள்ளது. இது **Politics of inclusion** என இருந்திருக்க வேண்டும். இனிப் புதிதாக ஆரம்பித்தல் என்பது கடினமே. பன்மைத்துவச் சமுதாய அமைப்பில் ஒவ்வொரு நபரும் மட்டுமன்றி ஒவ்வொரு சமூகப் பிரிவும் ஆட்சியில் பங்குபற்றுவதாக உணரவேண்டும். இதற்கு மறுதலையே அப்பிரிவுகளை ஆட்சியில் பங்குபற்றாது தடுப்பதாகும். இலங்கையில் 1948ல் கொண்டுவரப்பட்ட பிரசாவுரிமைச் சட்டத்திலிருந்து இந்த **Exclusion** ஆரம்பமாகியது.

பொதுஜன முன்னணி (P A) அரசாங்கம் பதவிக்கு வந்தபோது இந்தப் போக்கு மாற்றமடையும் என எதிர்பார்க்கப்பட்டது. நிறையவே ஆயத்தங்கள் செய்யப்பட்டன. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மூலம் பன்மைத்துவ அமைப்பினை வலியுறுத்தும் வாய்ப்புகள் என் போன்றோர்க்கும் வழங்கப்பட்டன. ஆனால், துரதிர்ஷ்ட வசமாக, 1995 ஏப்ரல் 19உடன் இந்த வாய்ப்புகள் அற்றுப் போய்விட்டன. யுத்தப் பிரசாரஞ் செய்யவே அரச, தனியார் ஊடகங்கள் பயன்படுத்தப் படுகின்றன. மக்களை யுத்தத்துக்குத் தயார்படுத்தவே முன்னுரிமை வழங்கப்படுகிறது.

இதனைத்தானே புலிகளும் செய்கிறார்கள் என்று வாசகர்கள் கேட்கக்கூடும். உண்மைதான். ஆனாலும் வித்தியாசமும் உள்ளது. அரசியலமைப்புச் சட்டப்படி அரசு மட்டுமே வன்முறையைப் பாவிக்க அதிகாரமுடையது. (இது கைது செய்வதிலிருந்து மரணதண்டனை வழங்குவது வரை பொருத்தமுடையது) எனவே அது வன்முறையைப் பிரச்சாரஞ் செய்யக்கூடாது.

சுவடுகள்: சர்வதேச சமூகத்தின் அங்கீகாரம், ஏற்பு என்று பார்க்கும்போது இந்தியா அதனுள் அடக்கப்படத்தானே வேண்டும். இந்தியாவுடனான எமது புரிந்துணர்வு எப்படியுள்ளது?

தமிழ்மாறன்: நிச்சயமாகத் திருப்திகரமாக இல்லை. ஒரு காலத்தில் தாய் சேய் உறவு என்று வர்ணிக்கப்பட்டது. இன்று நிச்சயமாக அந்தளவில் இல்லை. இந்தியாவும் பன்மைத்துவ சமுதாய அமைப்புக் கொண்ட ஒரு நாடு. அத்தோடு அண்டைய நாடுகளுடன் அதற்குத் தனிப்பட்ட சில பிரச்சனைகள் உள்ளன. அப்பிரச்சனைகள் தனது பன்மைத்துவத் தன்மையுடன் சம்பந்தப்பட்டதாக இல்லாதவரை இந்தியா அவற்றுக்கு முகங்கொடுக்க முடியும். ஆனால் அதனது பன்மைத்துவ அமைப்போடு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் என்று இரண்டுதான் ஏற்பட்டுள்ளன. ஒன்று பங்களாதேஷ், மற்றது இலங்கை. தனது பன்மைத்துவ அமைப்புக்கு உத்தரவாதம் உள்ளதை உறுதி செய்தபின் இந்தியா பங்களாதேஷ் பிரச்சனையில் உதவியது. ஆனால் இலங்கைப் பிரச்சனை வித்தியாசமானது. இங்கு இந்தியா தலையிட்டால், அத்தலையீடே அதனது பன்மைத்துவப் பிரச்சனைக்கு அச்சுறுத்தலாகிவிடும் என்ற அபிப்பிராயம் கொள்கை வகுப்பாளர் மத்தியில் நிலவுகிறது. எமது கண்ணோக்கில் இது ஓர் அர்த்தமற்ற அச்சம் என்று நாம் கூறலாம். ஆனால் அவர்களின் நிலையிலிருந்து பார்ப்பின் அச்சந் தவிர்க்கப்பட முடியாததே.

எனவே இந்தியாவுக்குச் சில சொந்த மட்டுப்பாடுகள் உள்ளன. அத்துடன், அது அண்டை நாடு என்றளவில் இம்மட்டுப்பாடுகளின் பரிமாணமும் வித்தியாசமானது. இந்த மட்டுப்பாடுகளுக்குள் நின்றே இந்தியா செயற்பட முடியும்.

JUSTISDEPARTEMENTET

**Avvikling av kommersielt oppstilte utbetalingsautomater**

**Ny forskrift gjelder fra 2. januar 1997**

Justisdepartementet har fastsatt at alle tillatelser til oppstilling av kommersielle utbetalingsautomater (tidligere kalt ferdighetsautomater) skal falle bort senest 1. april 1997.
Dette gjelder utbetalingsautomater der overskuddet av lotteridriften ikke går til et lotteriverdig formål.

Rundskriv G-1/97 (96/2067 A-AT) og mer informasjon om avviklingen kan du få hos 1. juridiske kontor, Sivilavdelingen, Justisdepartementet, telefon 22 24 54 51, telefaks 22 24 27 22. Den nye forskriften, med fullstendig tekst, er tatt inn i Norsk Lovtidend.

Innrykket av Statens informasjonstjeneste A-3.97


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனித்தமிழ்நாடு என்று ஒன்று உருவாகுவதற்கு இந்திய அரசு ஒருபோதும் உதவியளிக்காது என்பதைப் புரிந்துகொள்ளாத அளவுக்கு எம்மில் எவருமேயில்லை என்பது சரி. ஆனால் மாற்றுத் தீர்வுகளில் அதன் பங்களிப்பைக் கோரக்கூடிய வாய்ப்புகள் இன்னுமேயுள்ளன.

இந்திய நண்பர்கள் சிலரது கருத்தில், தற்போது அங்கு மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை விடக் கூடிய அளவு அதிகாரங்கள் இலங்கையில் வட-கிழக்கு அமைப்பொன்றுக்கு வழங்கப்படுவதைக்கூட இந்தியா விரும்பாது என்ற நிலைப்பாடு உள்ளது. ஆனால் இந்த நிலைப்பாடு எந்தளவு தூரம் சரியானது என என்னால் ஊர்ஜிதப்படுத்த முடியாது. ஆனால் முறையான இராஜதந்திர அணுகுமுறையின் மூலம் இந்த நிலைப்பாட்டை மாற்றிட முடியும் என நம்புகிறேன்.

இலங்கை மீதான இந்தியக் கரிசனை என்பது இந்தியாவின் சொந்த (பன்மைத்துவ சமுதாய அமைப்பு) நலனை மையமாக வைத்ததே என்பதை எல்லாத் தரப்பினரும் அறிவர் என்ற வகையில் இந்த நலனுக்கு உத்தரவாதம் வழங்கும் மிகச் சிறந்த வழி வடகிழக்குத் தாயகத்திலான சுயாட்சி அமைப்பே என்பதை டெல்லிக்குப் புரியவைத்தல் கடினமான முயற்சியல்ல. ஆனால் இதனைச் செய்பவர்கள் யார்? அவர்கள் கூறுவதை இந்தியா எந்தளவிற்கு அப்படியே ஏற்றுக்கொள்ளும் என்ற வினாக்களும் எழவே செய்யும். ஆனால் ஒது முற்றிலுஞ் சாத்தியமற்ற ஒரு விடயம் என்று ஒதுக்கிட முடியாது என்பது எனது அபிப்பிராயம். மோதலுக்குத் தீர்வு காணும்போது இன்னொரு தரப்பின் நம்பகத் தன்மையை ஏற்பதாகக் காட்டுவதன் மூலம் எமது நம்பகத் தன்மையை ஏற்க வைக்கவும் முடியும்.

சுவடுகள்: தீர்வு முயற்சிக்கு ஆதரவு பெறுதல் பற்றிக் கூறுகிறீர்கள். கடந்தகாலத் தீர்வு முயற்சிகளில் இருந்து அண்மைய தீர்வுப் பொதி எவ்விதத்தில் வேறுபட்டது?

தமிழ்மாறன்: ஒரேயொரு வேறுபாடு - இத்தீர்வுப் பொதியின் பெயரால் ஒரு யுத்தம் நடத்தப்படுகிறது. ஆனால் பொதியின் உண்மையான வடிவம் என்ன என்று தெரியவில்லை. மாகாணசபை விடயத்திலாவது உண்மை வடிவந் தெரிந்திருந்தது. இப்போது அந்தளவு அறியும் வாய்ப்புக்கூட இல்லை.

அதேவேளை, பேராசிரியர் பீரிஸ் தான் தெரிந்தெடுத்து வைத்துள்ள ஒரு சிலரைக் கொண்டு மிகக் கிரமமான முறையில் இதுபற்றி விளக்கமளித்து வருகிறார். யுத்தத்துக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று காட்டுகிற இராஜதந்திர முயற்சியும் இதில் அடங்கியுள்ளது. ஆனால் இந்த நாடகம் நீண்ட நாட்களுக்குச் சரிவராது என்பது தற்போது புலனாகியுள்ளது. தனிப்பட்ட முறையில் அவருக்கு விசுவாசம் உடையோரும் கடமைப்பட்டுள்ள சிலரும் அவரது வேண்டுகோளைச் சிரமேற்கொண்டு எழுதியும் பேசியும் வருகின்றனர். இவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். இதனைத் தனியார் வர்த்தகமாக நடத்த முயல்வது கேலிக்கூத்தே.

கொள்கை ரீதியிலும் சிறுபஏன்மை மக்களது அபிலாஷைகளைப் புரிந்துகொண்டவர்கள் என்ற வகையிலும் எந்தத் தமிழ்ப் புத்திஜீவியும் இந்தத் தீர்வுப் பொதியை ஆதரிக்க முன்வரமாட்டான். தனிப்பட்ட காரணங்களுக்காக ஆதரிப்போரையிட்டு நாம் எதுவும் கூறமுடியாது. அது அவரவர் சுதந்திரம்.

பொதியின் வடிவம் நாளுக்கு நாள் மாறிவருகிறது. கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைதான். ஜனநாயக அரசியலில் வாக்குச் சீட்டுகளை நம்பியுள்ள தலைவர்கள் முன்வைக்கும் எந்தத் தீர்வுக்கும் ஒரேயொரு மட்டுப்பாடு இருக்கவே செய்யும். அதுதான் - பெரும்பான்மை வாக்காளர்களைத் திருப்திப்படுத்துவது - என்பது! பேராசிரியர் பீரிஸ் மாத்தறையில் பேசும்போது "உங்களுக்கு இல்லாத எதுவும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை" என்கிறார். கண்டியில் மகாநாயக்கர்களைச் சந்திக்கும்போது "பௌத்தம் கட்டாயம் பாதுகாக்கப்படும். சலுகைகள் என்று எதுவும் வழங்கப்பட மாட்டாது" என்கிறார். தமிழ்க் கட்சிகளைச் சந்திக்கும்போது "எல்லா உரிமைகளும் கிடைக்கும், ஆதரியுங்கள்" என்கிறார். இந்தப் பச்சோந்தி அரசியல்தான் இலங்கையில் இனப்பிரச்சனை இழுபட்டுக்கொண்டு போவதற்கான அடிப்படைக் காரணமாகும். கையிலில்லாத ஒற்றை வைத்துக்கொண்டு காலங் கடத்தும் அரசியல்தான் அரங்கேறுகிறது. 'அம்புலி காட்டிச் சோறு ஊட்டும்' இந்த முயற்சியில் அம்புலிமாமாவைப் பற்றி வர்ணிப்பதற்கெனச் சிலர் முழுநேர வேலையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். பெரும்பாலும், அடுத்த தேர்தல்வரை (அது உடனடியாக வராதுபோனால்) இந்த வர்ணிப்புகளைச் செய்துகொண்டே போகலாம். உயிரிழப்பு, பொருளிழப்பு, மூலவளத் தேய்வு என்பவை எல்லாம் தேர்தலை விடவா பெரிதானவை?

புதிய அரசியலமைப்போடு இணைந்ததாகவே தீர்வு விடயமும் முன்வைக்கப்படுகிறது. ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதான வாக்குறுதி காற்றோடு போயிற்று. எனவே ஜனாதிபதி ஆட்சிமுறையைத் தக்க வைப்பதற்கு தீர்வுப்பொதி நன்கு பயன்படுகிறது. இனியும் பயன்படும். எனவேதான் அமைச்சர் பீரிஸ் தான் விரும்பியபடியெல்லாம் பொதியினை வர்ணிக்கின்றார். கொள்வார் என்று எவருமே இதுவரை இல்லை. அவரது கட்சிக்குள்கூட இதுவே நிலைமை.


(அடுத்த இதழில் தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## தியாகலிங்கம்

# மாற்றங்கள்

எனக்கு ஒரு தங்கை இருந்தாள். தாய் தந்தை இருவரும் கூடவே இருந்தனர். "பணம்" இந்த சொல் எத்தனை பெயரை எப்படி எப்படி எல்லாம் மாற்றுகின்றது ? சிலருக்கு அது பெறுமதி தானாய்த்தான் விளங்குகின்றது. சிலருக்கு அதே வாழ்க்கையின் இலட்சியம். வாழ்க்கையே பணத்தைத் தேடவேண்டும் என்பதில் செலவு செய்கின்றனர். பணம் அவர்களுக்குப் போதைப் பொருளாகி விடுகின்றது. இது நல்ல முன்னேற்றமா?

பணம் என்னும் போதே தங்களை மறந்து எதையும் செய்யத் துணிந்து விடுகின்றனர். வேலை கூட அப்படித்தான். வாழ்வதற்கு தானே வேலை? சிலருக்கு வாழ்க்கையே வேலையாய் இருக்கின்றது. இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். வாழ்க்கையில் அவர்களுக்கு வேறு எதுவும் வேண்டாம். வேலை வேலை என்று அலைகின்றனர். பணத்திற்கும் வேலைக்கும் வாழ்க்கையில் கொடுக்கவேண்டிய இடமும் அளவும் புரியவில்லை .

வாழ்க்கையை இவர்களுக்கு ஒழுங்காக வாழத்தெரியவில்லை என்பதா அல்லது பணமும் வேலையும் மாத்திரம் தான் வாழ்க்கை என்பதா? எனக்கு பெரும் ஏமாற்றமும் வெறுப்பும் ஏற்படுவது உண்டு. அப்பாவை சந்திப்பது என்றால் தொழிற்சாலைக்குப் போக வேண்டிய நிலைமை. அப்பா இப்படி அலைவதற்கு அப்பா மாத்திரம் பொறுப்பல்ல. அம்மாவே முழுக்காரணம் எனலாம்? பணம் ! இதுதான் இருவரது வாழ்க்கையிலும் முதல் குறிக்கோள். ஆனாலும் அன்பானவர்கள். பணம் அவர்களது அபிமானப் பொருளாய் இருந்தாலும் பிள்ளைகளை கவனிக்கவும் அவர்கள் மறுப்பதில்லை. ஒவ்வொரு பிள்ளையும் அரைகிலோ தங்கத்தை கழுத்தில் சுமக்க வேண்டுமே ? அதில் இருந்து எனது அப்பா அம்மாவை புரிந்து கொள்ள முடிந்தது.

எனக்கு அம்மா அப்பாவைப் பார்க்கும் போது சிலவேளை கோபம் உண்டாகும். சிலவேளை பாவமாய் இருக்கும். சிலவேளை வெறுப்பு உண்டாகும். சிலவேளை பாசம் பிணைக்கும். எம்மவருக்கும் நோர்வே மக்களுக்கும் ஏன் இவ்வளவு வேறுபாடு என்பது என் மனதில் கேள்விக் குறியாகும். எப்போது இவர்களும் அவர்களைப் போல வாழப் போகின்றனர்? மனதில் பெரும் ஆதங்கமாய் இருக்கும்.

## அத்தியாயம் 2



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அம்மா இப்போது ஒரு சின்னப் பாப்பாவை பெற்று வைத்துக் கொண்டு உள்ளார். அவள்தான் என்தங்கை. அம்மா வேலைக்குப் போவதில்லை. அப்பா காலையிலே வேலை செய்து விட்டு மாலை வேளையில் ஓவட் டைம் இல்லாவிட்டால் வீட்டில் தான் இருப்பார். இதை அவரால் தவிர்த்துக் கொள்ள முடியவில்லை. இன்றும் அப்படித்தான் இருந்தார். நான் பிற்பகல் விளையாடி விட்டு வந்தேன். தொலைகாட்சியில் செய்தி பார்த்து முடித்ததும். அம்மா சாப்பாடு தயார் செய்து முடித்து விட்டு சாப்பிட கூப்பிட்டார். எனக்கு மிகவும் பசியாய் இருந்தது. விளையாடினால் எப்படி பசிக்கிறது? அதை விட இடியப்ப மணமும் இறைச்சி மணமும் இன்னும் பசியைத் தூண்டியது . உடனடியாகவே எழுந்து சாப்பாட்டு மேசைக்குச் சென்று அமர்ந்தேன். அம்மா மூவருக்கும் சாப்பாடு பரிமாறினார். சின்னப்பாப்பாவிற்கு குறேத் என்னும் ஒருவகை கஞ்சியும் பாலுமே சாப்பாடு. இப்போது பாப்பாவின் வாயை சூப்பி அடைத்திருந்தது.

அப்பாவே முதலில் கதைக்கத் தொடங்கினார்.
குமாரசாமியிட மகள் ரேவதி பள்ளிக்கூடத்தில கூடப்படிக்கிற ஒரு நோர்வேப் பொடியனைக் காதலிக்கிறாளாம்? ம்.........வெளியில வந்த உடன எப்படி அலையுதுகள் பார் ? என்ன மானங் கெட்ட வேலை எல்லாம் செய்யத் தொடங்கீட்டுதுகள் .

ச்..............இதுக்கு நாங்க என்ன செய்ய முடியும் ? அவளின்ர புத்தி அப்பிடி போகுதே எண்டு தாய் தகப்பன் கண்டிக்கிறதா தெரியேல்ல .

ம்........அண்டைக்கு குமாரசாமியோட கதைக்கேக்க பிள்ளைகள் இங்க வளர்ந்தாலும் இலங்கையில வளர்க்கிற மாதிரித்தான் வளர்க்க வேணும் எண்டு சொன்னான். அதுக்கு " ச் அப்படி எல்லாம் செய்யக் கூடாது. அங்க பிள்ளைகள வன்முறையா அடிச்சு அதட்டி வளர்த்து என்னத்த நிலை நாட்டுகினம்.? பிள்ளைகள அன்பா ,ஆதரவா வளர்க்க வேணும் . இங்க அடிக்கிறத்திக்கே "லோ" இல்லையாம் . அப்படி அடிச்சா அது சட்டப்படி தப்பாம்."

கூறிவிட்டு நாக்கை கடித்துக் கொண்டார்.

ம்.......... சொன்னது சொல்லீட்டிங்க மிச்சத்தையும் சொல்லுங்க.

வயசுக்கு வந்த பிள்ளைகள் எடுக்கிற முடிவு சரியில்லாட்டி சொல்லி திருத்தப் பாக்கோனுமாம். இல்லாட்டி அவேன்ர விருப்பத்துக்கே விட்டிடனுமாம். அதுக்கு மேலே இதில் செய்யிறத்துக்கு ஒண்ணும் இல்லையாம். அவற்ர வேதாந்தத்தைக் கேக்க எனக்கு பத்திக் கொண்டு வந்தது . நான் பறையாமல் வந்திட்டன்.
தாய் தகப்பனே இப்பிடி இருந்தா பிள்ளைகள் கெட்டுப் போகாமல் என்ன செய்யும்? .

பின்பு சிறிது நேரம் அமைதி எங்களைப் பிடித்து ஆட்டியது. அம்மாவே அதற்கு பூ சாரியானர்

ஊரான் பிள்ளைகள மாதிரியா நாங்க பிள்ளைய வளர்த்திருக்கிறம்.? நாங்க சொல்லுற சொல்லைத்தான் எங்கட பிள்ளையள் கேக்கும் .

கூறிவிட்டு என்னைப்பார்த்து "இல்லையா ராசா " என்றார் . எனக்கு என்ன கூறுவது என்ன செய்வது எனப்புரியவில்லை. தலையை ஆட்டினேன். அம்மா பூ ரித்துப் போனார்.

அது தானே என்ர பிள்ளைகள் என் பேச்சைத்தான் கேக்கும் . அது எனக்கு நல்லாத் தெரியும்.

நான் சாப்பிட்டு முடித்துவிட்டேன் . எனக்கு அதற்கு மேல் அவர்களின் பேச்சை கேக்கவும் விருப்பம் இருக்க வில்லை. எழுந்து சென்று கையை கழுவிவிட்டு வீட்டுப்பாடங்கள் சிலவற்றை செய்யத் தொடங்கினேன்.

## 3

இங்கு உள்ளவர்களுக்கு கோடை காலம் இனிமையானது . இலங்கையில் இது கொடுமையானது. அங்கு கோடைகாலம் என்றால் தாங்க முடியாது . இங்கு வெப்பம் மிகவும் பொருத்தமாய் இருக்கும். சிலவேளைகளில் சிறிது குளிராய் இருக்கும் . மழையைக் கண்டால் மயில்கள் ஆடுகின்றன. நம்நாட்டில் தேவையானது அருமையாக கிடைக்கின்ற போது எவ்வளவு சந்தோஷசம்? மழை இலங்கையில் எமக்குத் தேவையானதும் அருமையானதுமாகும். கோடைகால வெய்யில் இவர்களுக்குத் தேவையானதும் அருமையானதுமே. வெளியிலே நல்ல வெய்யில் . குளிர் குறைவு என்றால் எவ்வளவு சந்தோஷம்?..

விடுதிகளில் வெளியே மேசை கதிரையைப் போட்டு வியர் குடிக்கும் போது இவர்கள் வதனத்தில் தவளும் சந்தோஷத்தை வார்த்தைகளால் அளந்து கூறிவிட முடியுமா என்ன? அவர்களுக்கு மட்டும் அல்ல , இங்கு வாழும் எல்லோருக்கும் கோடைகால வெய்யிலை எண்ணும் போது மகிழ்ச்சிதான் . மட்டற்ற மகிழ்ச்சிதான்.

கோடைகாலத்தில் நல்ல வெப்ப நிலையாய் இருக்கும் நாட்கள் உண்டு. அன்நாட்களில் மாலை வேளைகளில் உள் அரங்கத்தில் விளையாடுவதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை .இப்படிப்பட்ட நேரங்களில் நான் , நிச்சலன், முரளி ஆகியோர் வெளியே உள்ள விளையாட்டு மைதானத்தில் விளையாடுவது உண்டு. அதிலே யாரும் விளையாட மாட்டார்கள் . அப்படி வெளியே விளையாடினாலும் இரண்டு அரங்கம் இருப்பதால் ஒரு அரங்கம் எப்போதும் காலியாகவே இருக்கும் . இதை நானும் எனது நண்பர்களும் நன்கு அறிந்து வைத்திருப்பதால் நல்ல வெப்பநிலை உள்ள நாட்களில் அங்கு விளையாடச் சென்று விடுவோம்.

இன்றும் நல்ல வெப்பநிலை . பாடசாலை விட்டு வரும் போதே இன்று மாலை நான் , நிச்சலன், முரளி மட்டும் அல்ல எல்லா தமிழ்ச் சிறுவர்களும் வெளி அரங்கில் விளையாடுவது என முடிவு செய்து கொண்டோம்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தது . என்ன செய்ய வேண்டும் என்பதே புரியவில்லை. அவர்கள் செய்வதைப்பற்றி கதைத்தால் அழுகையே வரும் போல் இருந்தது. விரைவாக வீடு சென்றேன். வீட்டிற்குள்ளே அம்மாவும் அப்பாவும் ரங்கன் மாமா மாமியுடன் கதைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் முன்னிலையில் அரங்கில் நடந்ததை கூறவும் வெட்கமாய் இருந்தது. என்ன செய்வது? எதுவும் செய்யத் தோன்றவில்லை . எனது படுக்கை மீது தொப்பென விழுந்தேன்.

மனவேதனையை என்னால் பொறுக்க முடியவில்லை . வேதனைகளை தாங்கிக் கொள்ளும் அளவிற்கு பக்குவப்பட்ட மனமும் என்னிடம் இல்லை. முப்பது நாற்பது வயது சென்றே மனப்பக்குவம் அடையாமல் எவ்வளவோ மக்கள் வாழ்க்கையில் உழலும்போது எனால் எப்படி? எனது வேதனை அழுகையாய் வெடித்தது . கோலில் இருக்கும் ரங்கன் மாமாவிற்கு கேட்டு விடக்கூடாது என்பதற்காக அமைதியாகவே அழுதேன்.

எப்படி தூங்கினேன் எப்போது தூங்கினேன் என்பது எனக்குப் புரியவில்லை. அம்மா சாப்பிடவில்லை எனத் தட்டி எழுப்பும் போது தான் புரிந்தது. அரை மனதுடன் எழுந்து சாப்பிடச் சென்றேன் . அம்மா தோசை சுட்டு வைத்திருந்தார். தோசை என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும் . இன்று மனசு சரியில்லை . என்னால் இரண்டிற்கு மேல் சாப்பிட முடியவில்லை . கோப்பையுடன் எழ முயற்சிக்க அப்பா விடவில்லை.
என்னடா உனக்கு, இருந்து இன்னும் ஒண்டெண்டாலும் சாப்பிட்டிட்டு எழும்பு .
வேண்டாம் அப்பா?
ஏன் என்ன நடந்தது ? சுகம் இல்லையா ? கூறியவண்ணம் கையைவைத்துப் பார்த்தார் எந்த வேறுபாடும் தெரியவில்லை அவருக்கு.
என்னடா ? ஏன் சாப்பிடேல்ல ?
எங்கையாவது சாப்பிட்டிட்டியா? அம்மாவின் கேள்வி இது.

அம்மா என் தலையை தன்னோடு சேர்த்து அணைத்து கோதிவிட்டார். அம்மாவின் இதமான அணைப்பு எனக்குள் அடங்கி இருந்த கவலையை உசுப்பிவிடவே நான் தேம்ப ஆரம்பித்தேன். இது அப்பா அம்மா இருவருக்கும் எதிர்பாராத அதிர்ச்சியாயும் , பயமாகவும் இருந்திருக்கும் . அம்மா மீண்டும் கேள்வி கேட்டார்.
என்ன நடந்ததடா தம்பி . சொல்லு என்ன நடந்திச் செண்டு.
நான் தேம்பித் தேம்பிச் சொல்லத் தொடங்கினேன்.

நாங்க அந்த வெளி கிறவுண்டில விளையாடிக் கொண்டிருந்தோம் அம்மா. அப்ப அந்த நோஸ்க் பொடியன் வந்து எங்களுக்கு அடிக்கிறாங்கள் . எங்களுக்கு என்ன செய்யிறது எண்டு தெரியல்ல பேசாம விட்டிட்டு ஓடி வந்திட்டம் . இனிமேல அங்கே விளையாடப் போகேலாது . போனா அவங்கள் அடிப்பாங்கள் . சொல்லி முடித்துவிட்டு கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தட்டுடன் எழுந்து சமையல் அறைக்குச் சென்றேன் .
எனக்கு என்ன பதில் , எப்படிப் பதில் கூறுவது என எனது தாய் தந்தையருக்குப் புரியவில்லை. அவர்களிடத்தில் அமைதி குடி கொண்டிருந்தது.




நிச்சலனுக்கும் அன்று மாலை நடந்த சம்பவம் பெரும் மனவருத்தத்தை உண்டு பண்ணி இருந்தது . நிச்சலனின் அப்பா அம்மா வேலையால் வந்து சாப்பிட்டு விட்டு சோபாவில் இருந்து படம் பார்த்துக் கொண்டிருந்தனர். அவன் அம்மா உமா அருகில் மிகவும் சோர்வாய் அமர்ந்தான். இதைப்பார்த்த உமாவுக்கு கேள்விகள் முட்டிக் கொள்ள.
என்டா எந்தக் கோட்டையை பிடிச்சதில இப்பிடி இருக்கா?
நிச்சலன் எதுவும் கதைக்கவில்லை. உமா சற்று நிச்சலனுக்கு அருகில் வந்து அமர்ந்து அவனை மடியில் இழுத்துப் போட்டு தலையை கோதியபடி
என்ன நடந்தது பிள்ளைக்கு ? ஏன் இப்பிடி இருக்கிறா?
அன்பாய் வினாவினாவினார். அடிக்கிறாங்கம்மா.
யாரடா? யாரடா பிள்ளையை அடிக்கிறது?
நோஸ்கன்கள் எங்களுக்கு அடிக்கிறாங்க அம்மா?
ஏன் அடிச்சாங்க? இது அப்பா நரேசின் கேள்வி .
தெரியல்ல நாங்க வெளி கிறவுண்டில விளையாடினோம்

www.tamilarangam.net

எல்லோரும் வீட்டிற்குச் சென்று சாப்பிட்டுவிட்டு சற்று இளைப்பாறிய பின்பு. நாலரை மணிபோல அரங்கிற்கு வந்தனர். பெரிய அரங்கில் நோர்வே நாட்டு இளைஞர்களுக்கு இடையில் உதைபந்தாட்டம் நடை பெற்றது. அவர்களின் உதைபந்தாட்டத்தை எனது வகுப்பில் படிக்கும் ஏழு அல்லது எட்டு சகமாணவர்கள் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களோடு ஒன்பதாம் வகுப்பு படிக்கும் ஐந்து மாணவர்களும் விளையாடுவதை பார்வை இட்ட வண்ணம் இருந்தனர்.

நாங்கள் மொத்தமாக என்னோடு சேர்த்து பத்து. நான் ஒரு பக்கத்திற்கு கோலியாய் நின்றேன். நாலுபேர் ஒரு பக்கம் விளையாடினர். கோலியை விட எங்களிடம் உள்ள ஆட்கள் அவ்வளவு தான். விளையாட விளையாட தேகம் சூடாகியது. வியர்க்கவும் தொடங்கியது. பெரிய அரங்கிலும் விறு விறுப்பாய் ஆட்டம் நடந்து கொண்டிருந்தது.

விக்கோவின் பார்வை ஒருமுறை சின்ன மைதானத்தின் மீது விழுந்தது. ஓ இப்படியா சங்கதி நடக்கின்றது ? இவர்களை அடித்து விரட்டி விட்டு நாங்கள் விளையாடினால் நல்லாய் இருக்குமே . மனதிற்குள் எண்ணினான் . அவன் எண்ணிவிட்டு சும்மாய் இருப்பானா?

தர்யா அங்க பாரடா என்ன நடக்குது எண்டு. நரகல் தமிழர் விளையாடுகினம்.
அவங்கள விளையாட விடக் கூடாது. இது டான்.
என்ன செய்யலாம்? இது உலாவின் வினாவல்.
ஒரு கதையும் இல்லை அடித்தான் . இது விக்கோவின் பதில்.

என்ன கதைக்கிறீங்க ? இப்படி நீங்க செய்யக் கூடாது ? நீனாவின் குரல் பலமாக ஒலிக்க விக்கோ சிரித்துவிட்டு, வாங்கடா என்றவண்ணம் எங்களை நோக்கி வந்தான். அவர்களின் வருகையையும் வருகின்ற தோறணையையும் முதலில் கண்டவன் நானே. உடனேயே நான் தீர்மானித்துக் கொண்டேன் . ஏதோ விபரீதம் செய்யப் போகின்றார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். என்ன செய்யப் போகின்றார்கள் என்பது புரியவில்லை . முதலில் அவர்கள் என்னையே வம்புக்கு இழுத்தனர்.

என்ன கறுப்பு எப்படி சுகம்.
போடா வெள்ளைப் பண்ணி.
நான் கத்தியதும் விக்கோ வந்து என்னைத் தள்ளினான். மற்றவர்கள் அரங்கத்திற்குள் இறங்கி பந்தை எங்களிடம் இருந்து பறித்து தாங்கள் விளையாடினர். இது நிச்சலனுக்கு கோபத்தை உண்டு பண்ணியது. டானை தள்ளி விழுத்தி கட்டிப்புரண்டு சண்டையிட்டான். மறுபுறம் விக்கோவும் நானும் சண்டையிட்டோம். இதற்கிடையில் உலா ஓடிச் சென்று ஒன்பதாம் வகுப்பு படிப்பவர்களை அழைத்து வந்தான். நீநா ஓடிப்போய் இவர்கள் செய்யும் அட்டகாசத்தை ஆஸ்திரிமிடம் கூறினாள். ஒன்பதாம் வகுப்பு படிப்பவர்கள் கத்திக் கொண்டு எங்களை நோக்கி வந்தனர் நானும் மற்றவர்களும் அடிப்பதை நிறுத்திவிட்டு அவசரமாக வெளி ஏறிச் சென்றோம். இல்லை ஓடினோம். ஆஸ்திரி மைதானத்திற்கு ஓடி வந்தாள் . ஒன்பதாம் வகுப்பு படிப்பவர்களும் மற்றவர்களும் எனது குழுவினரின் பந்தை வைத்துக் கொண்டு அட்டகாசமாய் சிரித்து எள்ளி நகையாடினர். ஆஸ்திரிக்கு மிகவும் கோபமாய் இருந்தது . "நரகல் பண்டிகள் " எனக் கூறிவிட்டு உலாவைத் தள்ளி , அவனிடம் இருந்த பந்தைப் பறித்து எடுத்துக் கொண்டாள். நான் அரங்கை விட்டு வெளியேறி மலைப்பாங்கான வீட்டுப் பகுதி ஒன்றில் நின்று திரும்பிப் பார்க்கையில் ஆஸ்திரி பந்தைப் பறிப்பது தெரிந்தது. நான் அங்கு நின்று மேற் கொண்டு அதைப் பார்க்கவில்லை. என்னை கோபம், வெட்கம், அவமானம் எல்லாமே


PLANLEGGINGS- OG SAMORDNINGSDEPARTEMENTET

**Endringer i departementene**

Fra 1. januar 1997 opprettet regjeringen det nye Planleggings- og samordningsdepartementet. I tillegg skjedde en omstrukturering, og vi fikk de nye departementene Nærings- og handelsdepartementet og Olje- og energidepartementet.

Nærings- og handelsdepartementet (NHD)
Postboks 8014 Dep, 0030 Oslo. Telefon: 22 24 65 07.
Telefaks: 22 24 95 25.
NHD skal legge til rette for en samordnet og helhetlig næringspolitikk, der nasjonale og internasjonale sider sees i sammenheng. Fra Utenriksdepartementet er overført saksområdene skipsfart, handel og internasjonalisering.

Olje- og energidepartementet (OED)
Postboks 8148 Dep, 0033 Oslo. Telefon: 22 24 61 09.
Telefaks: 22 24 95 65.
OED skal legge til rette for en samordnet og helhetlig olje-, gass- og energipolitikk.

Planleggings- og samordningsdepartementet (PSD)
Postboks 8004 Dep, 0030 Oslo. Telefon: 22 24 46 60.
Telefaks: 22 24 27 10/14.
PSD vil få ansvar for langsiktig planlegging og samordning av regjeringens og departementenes arbeid innenfor hovedområdene i regjeringens politikk. Det tidligere Administrasjonsdepartementet inngår som en del av det nye departementet.

Informasjon om departementene finnes også på Offentlig dokumentasjon og informasjon i Norge (ODIN), en felles elektronisk publikasjon fra regjeringen og departementene. Adressen er: http://odin.dep.no/

Innrykket av Statens informasjonstjeneste A-2/97



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவங்க வந்து வீண் வம்புக்கு இழுத்து அடிக்கிறாங்கப்பா . எங்க வகுப்பு பொடியன் மாத்திரம் இல்லை ஒன்பதாம் வகுப்பு பொடியளும் சேர்ந்து அடிக்கிறாங்கப்பா . வெளியில போய் விளையாடவே எனக்குப் பயமா இருக்கு.

கூறிய மகனைப் பார்க்கும் போது பரிதாபமாய் இருந்தது. இருந்தும் என்ன செய்ய முடியும்? எப்படி இதற்கு பதில் கூறமுடியும்? நரேன் அமைதியாகவே இருந்தார். உமா நரேனின் முகத்தைப் பார்த்த வண்ணம் இருந்தார். இருவர் முகத்தையும் நிச்சலன் மாறி மாறிப்பார்த்தான்.

அப்பா!

என்ன?

நீங்களும் எங்களோட வந்து எங்களுக்கு கவலாக நிற்கிறீங்களா அப்பா?

எனக்கு பின்னேரங்களில எல்லாம் வேலை வரும் நான் எப்பிடி அப்ப உங்களோட வருகிறது?

வேலை இல்லாத நாட்களில வருவியளே அப்பா?

ம்..........நான் பிள்ளையோட வாறன் . இப்ப போய் வீட்டுப்பாடங்களை செய்திட்டு நல்ல பிள்ளையாட்டம் தூங்கு.

நிச்சலன் எழுந்து சென்றான். அவன் தனது அறைக்குள் சென்றதும் நரேனின் கைகள் உமாவின் கழுத்தை வளைத்து இறுக்கி அருகே அணைத்தது . ஏனானம் ? எனக்கு இன்னம் அதைப் பற்றி சரியாகப் புரியவில்லை.

(அடுத்த இதழில் தொடரும்)


க்ரியா, அன்னம், கவ்யா, சவுத் ஏசியன் புக்ஸ் உள்ளிட்ட நவீன இலக்கியம் சார்ந்த எல்லா முக்கியமான புத்தகங்களுக்கும் சிறுபத்திரிகைகளுக்கும் அணுகுவீர்!

D. DILIP KUMAR
BOOKSELLERS & EXPORTERS
24 ....... TRUST CROSS ST
MANDAIVELI
MADRAS - 6000 28
INDIA

அயல் நாடுகளில் வாழும் ஈழத்தமிழ் நண்பர்களின் வசதிக்காக ஏற்றுமதி சேவையில் சிறப்பு கவனம் செலுத்தும் ஒரே அமைப்பு.






8. utgave

Samfunnsboka 1996/97

– boka som du kan gi bort eller ønske deg til jul

Samfunnsboka er en oppslagsbok om hvilke regler som gjelder og hvor du kan henvende deg i det offentlige.

Finner du ikke svaret i boka, får du opplyst hvor du kan lete videre. Opplysningene er oppdatert pr. 1. juli 1996, og et fyldig stikkordregister hjelper deg til å finne fram i boka.

I tillegg finner du register over sentrale og regionale myndigheter og kontor, med adresser, telefon- og telefaksnummer.

Statens informasjonstjeneste

Boka er til salgs i bokhandelen og koster kr 198,–

SI-A-33 96



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பிரயாகரன்.

# முகம் படம் ஒரு அகதியின் முகமல்ல

பாரிஸில் உள்ள பலர் அண்மைக் காலமாக பல திரைப்படங்களை தயாரித்து வருவது அதிகரித்துச் செல்கிறது. இப்படத்தயாரிப்புகளில் 12.5.96 இல் வெளியாகிய அருந்ததியின் முகம் திரைப்படம் பலத்த பரபரப்பையும், எல்லோரினது கவனத்தையும் ஈர்த்துள்ளது. இப்படம் இந்தியத் திரைப்பட மசாலாக் குப்பைத் தனத்தை மீறி பாரிஸில் வெளியான குப்பைகளை மீறி வெளிவந்த இப்படம் ஒரு வெற்றிகரமாக படமாகவும் பாரீசில் உள்ளது.

இலங்கைத் தமிழர் சினிமா வரலாற்றில் புலிகளின் திரைப்படங்களுக்குப் பின் வெளிவந்த முகம் படம் குறிப்பிடத்தக்க சாதனையாகும். தமிழ் சினிமாவின் குப்பைகளை கைவிடத்தயார் அற்று பலர் படம் எடுக்கும் இன்றைய நிலையில் அவைகளை மீறி இப்படம் வெளிவந்துள்ளது.

பல்வேறு தளத்தில் இன்று கலை இலக்கிய வடிவங்கள் மக்களின் உணர்வில் இருந்து தனித்துவம் கொண்டவை எனவும், யதார்த்தப் படைப்புகள் அதிகார வர்க்கம் சார்ந்தது எனவும், மக்களின் வாழ்வு சொல்லாத யதார்த்தத்தில் கலை சார்ந்தது என்று கூக்குரல்களையும் மீறி இப்படம் ஒரு சாதனையைப் படைத்துள்ளது.

இப்படம் மக்களின் யதார்த்தத்தையும், பாத்திரத்தின் ஆளமான அழகியலையும் பொருளாதாரத் தளத்தில் மனித முகத்தை வெளிக் கொண்டு வந்ததும் இப்படத்தின் வெற்றிக்கான ஒரு அடிப்படையாகும். ஒளி அமைப்பு, படம் தேய்வின்றி நகருதல், தேவைக்கு மீறிய வசனம் அமையாமை என படத்தில் உள்வட்டத்தில் சிறு சிறு குறைபாடுகள் இருந்த போதும் விமர்சனம் இன்றி ஏற்கக் கூடிய அளவுக்கு அவர்களின் முதல்படம் பாராட்டுக்குரியவையே.

இந்தளவுக்கு பல சரியான அம்சங்களையும் இப்படம் கொண்டிருந்த போதும், மறுபுறத்தில் இப்படத்தின் கருத்துத் தளம் பலத்த விமர்சனத்துக்கு உரியதாக அமைந்துள்ளது. இவ் விமர்சனத்தை செய்யுமுன்பு படம் பார்க்காத வாசகர்களுக்கு இப்படத்தைப்பற்றிய ஒரு சிறு அறிமுகத்தைத் தரமுயல்கின்றேன்.

ஒரு அகதி எப்படி பாரிசுக்கு வந்தடைகிறான். அங்கு அவன் சந்திக்கும் பிரச்சனைகள், என ஒரு தொகுப்பே இப்படம். அவன் எப்படி தனது முகத்தை இழக்கிறான் என காட்டுவதே இப்படம். இப்படம் பற்றி அருந்ததி குறிப்பிடும் போது 1985களில் தனது மனப்பதிவுகளை படமாக்குவதாகவும், இதில் ஒரு கதையோ, தீர்வையோ தான் வைக்கவில்லை என படம் தோடங்க முன் திரையில் அறிவிக்கிறார்.

அருந்ததி அதை அறிவித்த போதும் படம் ஒரு கதையை, ஒரு தீர்வை நகர்த்தி உள்ளது. இப்படத்தை விமர்சன ரீதியாக ஆராய்வோமாயின் இப்படம் ஒரு அகதி தொடர்பான டொக்கிமன்றி அல்ல. இப்படம் ஒரு அகதியின் படமும் அல்ல. இப்படம் பற்றி பெருமளவில் சில கருத்துக்களை இட்டுச் சென்றுள்ளது.

1) இப்படம் செந்த முரண்பாட்டை உள்ளாக்கி உள்ளது.

2) இப்படம் அகதியினுடைய பிரச்சனையை உள்ளாக்கவில்லை.

3) இப்படம் சில சமரசத்தை சொல்ல வந்து பின் செல்லாமல் சென்றுள்ளது.

4) இப்படம் எம்மவர்களின் கணிப்பில் லும்பன் (சரியான அரசியல் அர்த்தத்தில்) தனத்தை அங்கீகரித்துள்ளது.

5) இப்படம் பாரீஸ் பற்றிய ஒரு பொய்யான பிரம்மையைக் கொடுத்துள்ளது.

6) இப்பம் பாரீஸ் தவிர்ந்த பிரஞ்சுச் சமூகம் முன்பும், மற்றைய ஐரொப்பிய நாட்டிலும், இலங்கையிலும் அகதிக்கான கோணத்தில் இருந்து வெற்றிபெற முடியாது.

இப்படி பல சிறு உள்ளடக்கத்துடன் விமர்சனத்துக்குரிய விடையத்தை விமர்சிப்பதே எனது நோக்கமாகும். இந்த நோக்கம் என்பது திரைப்படத் துறையில் குறிப்பிடத் தக்க இம்முயற்சி ஐரொப்பிய சஞ்சிகைகளின் ஒரு கால வரலாறும், அதின் அதிகரித்த எண்ணிக்கையும், இத் திரைப்படத்தைத் தோடர்ந்து ஐரொப்பிய படம் அதிகரித்து வரும் வாய்பை ஏற்படுத்தும். அது சஞ்சிகைகள் விட்ட தவறை நிவர்த்தி செய்யும் வகையில் திரைப்படம் அமைய வேண்டும் என்ற அவாவின் அடிப்படையில் அமைந்ததே எனது விமர்சனமேயகும்.

முகம் படம் ஒரு அகதியின் முகம் என்பதை முழுக்க முழுக்க இப்படம் கொண்டிருக்க இல்லை. அகதியின் முகம் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் எனக் காட்டும் முன்னைய நண்பர்களின் வேண்டா வெறுப்பான கதைகள், புறக்கணிப்புகள், சேர்ந்து வாழும் அறையில் மனிதர்களின் சேகங்கள், இலங்கையில் இருந்து வரும் செய்திகள், சோகங்கள், வேலை, நிதி, ......... எனப் படம் காட்டும் பிரச்சனைகள் ஒரு அகதியின் முகமாக சித்தரித்ததென்பது அகதியின் முகத்துக்குரிய உண்மையான நிலையை படம் மறுதலித்துள்ளது.

இவ்வளவு பிரச்சனையையும் இலங்கையில் இருக்கும் ஒவ்வேருவருக்கும் உண்டு என்பதே மிக முக்கியமானதாகும். ஒரே ஒரு வேறுபாடு பாரிஸில் திடிர் பாச்சல் இருந்தது. இதை விரிவாக ஆராய்வோமாயின் இரண்டு நண்பர்கள் எம்மண்ணில் ஒன்றாக வாழும் வாழ்க்கை, அவர்களின் பொருளாதாரத் தொழிலை நோக்கி நகரும் போது சிதறும் தன்மை உண்டு. ஒருவன் ஒரு டொக்டராகவும், மற்றவன் விவசாயியாகவும் மாறின் அங்கு ஏற்படும் ஏற்றத் தாழ்வு, அல்லது இரு டொக்டர்கள் நண்பர்களாயின் ஒருவன் பணவசதி கொண்டவனாகவும் மற்றவன் ஏழையாகவும் மாறின் அங்கு ஏற்படும் ஏற்றத்தாழ்வு வேண்டா வெறுப்பாக கதைப்பதும், புறக்கணிப்புகளும் நிகழும். இது படிப்படியாக ஏற்படுவதால் கீழ் நிலையில் உள்ள நண்பர்களுக்கு அதிர்ச்சி ஏற்படுவதில்லை. அது இயல்பாக பழக்கப்பட்டுவிடுகிறது. ஆனால் புலம் பெயர்ந்த நாட்டில் நீண்ட இடைவெளி கொண்ட சந்திப்பு, பொருளாதார ஏற்றத் தாழ்வு ஏற்படும் புறக்கணிப்பு திடிர் அதிர்ச்சி கொடுப்பது படத்தில் சோகத்துடன் கூடிய வெறியாக அமைகிறது. இரண்டு இடத்திலும் உள்ள பிரச்சனை ஒன்றே. அதில் சிலமாற்றங்கள் காலத்தில் மட்டும் ஏற்படுகின்றது. இது இடமாற்றத்தில் அல்ல. இப்படத்தில் உள்ள விடையங்களும் எம்மண்ணில் உள்ளன. அதன் தொடர்ச்சி இங்கு பிரதிபலித்துள்ளது அவ்வளவே.

www.tamilarangam.net

ஆகவே இப்படம் ஒரு அகதியின் முகமல்ல. மாறாக ஒரு யாழ்பாணத்தின் முகம் எனக் குறிப்பிடுவது மட்டுமே மிகச் சரியாகப் பொருந்தும். இப்பிரச்சனை எம் தமிழ் சமூகத்தின் சமூகப்பிரச்சனையே ஒழிய ஒரு அன்னிய நாட்டுக்கு வந்தால் ஏற்படும் அகதியின் பிரச்சனை அல்ல.

படத்தின் கதாநாயகனுக்கு வரும் ஆனந்தன் பாரிசின் விமான நிலையத்தில் இருந்து வாடகைக் காரில் முன்னைய நண்பரின் வீட்டை நோக்கிச் செல்கிறார். அப்போது வீட்டு நினைவுடன் சோகத்தில் உள்ள நேரம் கார் ஓட்டுனரான பிரஞ்சுக்காரர் விலாச இடம் தேரியுமா என பிரஞ்சில் கேட்கிறார். பிரஞ்சு தெரியாத ஆனந்தன் விளங்காது ஆங்கிலம் தெரியுமா? என கேட்க அவன் இது பிரஞ்சு நாடு இங்கு பிரஞ்சில் தான் கதைக்க வேண்டும் எனக் கூறும் காட்சி ஒரு இனவாத அடையாளமாகக் காட்டப்படுகிறது. இங்கு படம் வலிந்து இனவாதக் கூற்றை காட்டியது காணமுடிகிறது. ஏன் எனில் பாரிசில் சர்வதேச விமான நிலையத்தில் எல்லா மொழி பேசும் மக்களும் வருவர். அவர்களுக்கு மொழி தெரியாது என்பது மட்டுமின்றி சர்வதேச விமான நிலையத்தில் ஏந்திய போதே மொழி தெரியாது இருந்தும் ஒரு பயணியிடம் இப்படிக் கோருவது எனக் காட்டுவது பாரிஸ் சமூகத்தின் சரியான பக்கத்தை மறுத்து ஒரு பொய்யான ஒரு பரிமாணத்தை ஏற்படுத்துவதேயாகும். இப்படி நடந்தது என இவர்கள் வாதிடின் உண்மையில் இது ஒரு தற்செயல் நிகழ்வாக இருக்குமே ஒழிய பாரிஸ் வாழும் 50 ஆயிரம் தமிழ் மக்களின் 99 வீதமானவர்களின் அபிப்பிராயம் அல்ல.

ஆனந்தன் வந்து இறங்கியவுடன் ஒரு தொலைபேசி இலக்க மூலம் யோகேஸ் தேடித் தொடர்பு கொள்கிறார். அங்கு அவர் இல்லாததுடன் அவரின் நண்பரும், இவரின் நண்பருமான நபருடன் கதைக்கிறார். அவ் நண்பர் அக்காட்சியில் ஆனந்தன் வருவது விரும்பாதும், தன்னை விட்டு எப்படிக் கழற்றுவது என எண்ணிய படி முனத்தைச் சுழித்து நேரடியாகப் பதில் அளிக்க முன் கதைக்குப் பகுதியைக் கையில் பொத்திய படி மனைவியிடம் கூறுகின்றார். மனைவி அவரை அழைப்பதற்கு எதிராக எரிச்சல் ஊட்டி பேசுகிறார். பின் தற்காலிகமாக வரவழைக்கிறார். இக்காட்சியில் அவரின் நண்பரே விரும்பாமல் நிற்கும் போது அதை பெண்ணின் வாய்மூலம் கூற வைத்து மறைமுகமாக பெண்தான் காரணம் எனக் காட்ட முயலும் காட்சி பெண்களை சிறுமைப்படுத்தும் நோக்கில் ஆனாதிக்கம் சார்ந்த கருத்தாகும். முதலில் ஆண்தான் விரும்பவில்லை அவர் விரும்பி இருப்பின் உடன் வரக் கூறி பின் மனைவிக்கு விளக்கம் கொடுத்து இருக்க முடியும். மறுதலையாக பெண்ணெதிர்ப்பைக் காட்டுவதாக படம் ஓடுவது பெண்களை சிறுமைப்படுத்துவதேயாகும்.

ஒரு காட்சியில் ஆனந்தனுக்கும் அங்கு அறையில் இருந்த இன்னேருவருக்குப் ஏற்படும் பிணக்கில் அவர் திருமணத்தை விரும்பி தனது உடல் இச்சையை செக்ஸ் புத்தகம் வாயிலாக தீர்ப்பதைக் காட்டும் காட்சியில் அவர் தனது பிரச்சனைகளை முன்வைக்கிறார். தனது 4 சகோதரிகளுக்காக உழைப்பதாகவும் அதனால் திருமணம் செய்ய முடியவில்லை என்பதையும் தனது உடல் இச்சை தீர்க்க வழியில்லை என ஆனந்தனிடம் கூறும் போது ஆனந்தன் சிதனப் பிரச்சனையால்

பெண்கள் மட்டும் அல்ல ஆண்களும் தான் பாதிக்கப் படுகின்றனர் என ஆண்களும் ஆண்களும் அடிமைகளே பெண்களால் என மறைமுகமாகக் கூறுகின்றார். அதாவது பெண் அடிமைத் தனத்தையும், ஆண் அடிமைத் தனத்தையும் சம்பந்தப் படுத்தும் போக்க இதன் மூலம் பெண் அடிமைத் தனத்தை நியாயப்படுத்தும் போக்க படத்தில் பிரதி பலித்துள்ளது.

அந்த நண்பருக்கு திருமணம் செய்து வைத்த ஆனந்தன் அத்திருமணம் யாரை என்பதைக் காட்டவில்லை. எம்மவர்கள் வெள்ளைக்காரப் பெண் என்றால் வேசை என நினைக்கும் கண்ணோட்டத்தில் உள்ளவரை எம்மவர்கள் வெள்ளைக்காரப் பெண்ணைத் திருமணம் செய்ய மறுப்பார்கள். அத்துடன் வெள்ளைக் காரனை விட எம்மவர்களிடம் காணப்படும் நாசித்தன்மை அதை அனுமதிக்காது.

ஆனந்தன் அவரின் தகப்பம் மூலம் தொடர்பு கொண்டே இத்திருமண முயற்சியில் இடுபட்டதாகவும் சீதனம், தாலி என எல்லாம் பெண்ணடிமைத் தனத்துடன் செய்ததை இப்படம் காட்ட தவறியுள்ளது.

ஆனந்தன் பிரான்ஸ் வந்த பின்பு வேலை செய்து தனது வீடு வரை காட்சி சென்று விடுகின்றது. அந்த வகையில் அதற்குட்பட்ட எல்லா எல்லா முக்கிய காட்சிகளும் காட்டப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் காட்டப்படாது இருட்டடிப்பு செய்ததுடன் நடிகர்களுடன் சமரசம் செய்யவும், சொந்த வாழ்வில் முரண்பாட்டை கொண்டு ஏற்படும் பிரச்சனையால் நசுக்கிவிட்டுள்ளனர். அந்த வகையில் விடுபட்டுப்போன பிரச்சனைகள் 1) ஏஜன்சி மூலம் வரும் பிரச்சனைகளும், அதிகளவான கூலி மூக.

2) கேஸ் எழுதுவதும் அதற்கான பணமும். 3)மொழி பெயர்ப்பும் அதற்கான பணமும். 4)விசாரை, மற்றும் பல்வேறு தேவைக்கான மொழிபெயர்ப்புகளும் அதற்கான பணமும். 5)நிராகரிக்கப்படின் பின் விசாரணைக்கு செல்லும் போது மொழி பெயர்பாளர்களும் அதற்கு தேவையான பணமும். இவை இங்கு வரும் அகதியின் முதல் பிரச்சனையாக இவர்களின் பட எல்லைக்குள் உள்ளது. இதை தெளிவாக கொண்டவர்களின் நியாயமான கூலிக்கட் பதில் 5வீதம் வட்டிகாரர்களாக உள்ளனர். இவர்கள் பாரிசில் ஒரு வசதியான வாழ்க்கை கொண்டவர்கள். ஒரு புதிய அகதிக்கும் இந்த வசதியாக வாழும் பிரிவிற்கும் இடையில் உள்ள பிரச்சனைகள் அபிப்பிராயங்களை இப்படம் சமரசத்துடன் திட்டமிட்டு மறைத்துள்ளது.

ஆனந்தன் ஏன் பாரிசிற்கு வருகின்றான் எனின் இராணுவப் பிரச்சனை என படத்தில் கூறுகின்றனர். அவர் தம்பி வருவது தொடர்பாக தம்பியின் விருப்பையும், இங்குள்ள எம்மவர்களின் பிரசஆசனையை மட்டும் காட்டி தம்பிக்கு எழுதுகின்றார். இதனால் தம்பி மணி தான் அகதியாகச் சென்று முகத்தை இழக்கத் தயார் இல்லை என தனது பாஸ்போட்டை கிழித்து எறிகின்றான். இது மிகைத் தன்மையாக இருந்த போதும் இக்காட்சி படம் முழுவதும் ஒரு முரண்பாட்டை ஏற்படுத்துகிறது. ஆனந்தனுக்கு இருந்த இராணுவப் பிரச்சனை எவ்வாறு தம்பி மணிக்கு திடீர் என இல்லாமல் போனது. தம்பி போராட போராட்டத்தில் கூட இணையவில்லை. இது இப்படத்தில் முரண்பாட்டை கொண்டது ஆகும். மற்றது 1985 இல் அகதியாக இங்கு வந்தவர்கள் ஆனந்தன் உட்பட ஏவலச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
www.tamilarangam.net

செக்குடன் வந்ததுடன், சிறு விதத்தினர் மட்டுமே உண்மையான இராணுவப் பிரச்சனையால் நாட்டை விட்டு வெளியேறியவர்கள் மிகுதிப்பேர் பொருளாதாரக் காரணத்துக்காகவே வந்தவர்களாவர். ஆனந்தனின் தம்பி மணிக்கு பொருளாதாரக் காரணம் என்பது படம் செல்லாமல் முடிவு செய்கிறது. ஆனந்தன் தாயை நினைத்து தாயைப் பார்க்கத் துடிக்கும் எக்காட்சியிலும் இராணுவப் பிரச்சனை தான் பார்க்க முடியாததுக்க காரணம் என கூறவில்லை. எனவே ஆனந்தனும் பொருளாதார காரணத்துடன் வந்ததாக கருதவேண்டிய நிலை உள்ளது.

படத்தில் பொருளாதாரக் காரணத்துக்காக வந்த பல நண்பர்கள் கஸ்டப்படும் காட்சிகள், அது நியாயப்படுத்தப்படுகின்றது. இப்போக்கு என்பது பொருளாதார நெருக்கடிக்கான காரணத்துக்கான அடிப்படையை ஆராய மறுப்பதும் அதில் இருந்து தப்பி ஓடும் போக்கும் நியாயப்படுத்தப் படுகின்றது. அதில் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தேவை மறுதலிக்கப் படுகின்றது. ஒரு சமூகத்தில் உள்ள பிரச்சனைக்கான காரணத்தை அகதியாக வருபவன் முன் தெளிவான முன்வைத்திருக்க வேண்டும். அதை செய்யாது அவனின் சோகத்தை படத்தில் காட்டுவதன் மூலம் மறைமுகமாக அவனின் புலம்பெயர்வு நியாயப்படுத்தப்படுகின்றது. எம் மக்களில் 90 சதவீதமானவர்களுக்கு உள்ள பிரச்சனையை அகதியாக வருவதன் மூலம் தீர்க்க முடியுமா? இதுதான் தீர்வா?

யோகேஸ் தொடர்ச்சியாக வெலை செய்யாது உள்ள நிலையை ஒட்டி பல்வேறு தளத்தில் வரும் விமர்சனம் தவறானது எனக்காட்ட முயல்வது விமர்சனத்துக்குரியது. வேலை செய்யாமை என்பது ஒரு சரியான விமர்சனம் மட்டுமல்ல எம்மவர்களில் சிலர் லும்பன் தன்மைகள் மீதான விமர்சனமே. இவ்விமர்சனத்தை செய்பவர்களின் தவறான பக்கம் மட்டும் விமர்சனத்தை பொய்யாக்கி விடுமா? ஒரு முதலாளிக்கும் ஒரு தொழிலாளிக்கும் இடையில் உள்ள பிரச்சனைகள் எப்போதும் இந்த வர்க சமுதாயத்தில் உள்ளவையாகும். இதை எதிர்கொள்வது முதலில் இங்குள்ள தொழில் சட்ட எல்லைக்குள்ளும், பின் பல்வெறு போராட்ட வழிகளிலுமேயாகும். இதை மறுதலிக்கும் இப்படம் மாறாக வேலைவிட்டு திடீர் என ஓடும் லும்பன் போக்கை நியாயப்படுத்தி உள்ளது. ஏன்எனின் யோகேசுக்கும் முதலாளிக்கம் இடையில் ஏற்படும் பிரச்சனையில் கழுவாத கோப்பையை சுட்டிக்காட்டும் முதலாளிக்கு எதிராக தான் நாய் இல்லை என கூறும் தன்மை வலிந்து காட்டிய செய்தி. வேலை முடிந்த நேரத்தையே சுட்டிக்காட்டி வாதாட வேண்டிய பிரச்சனையில் சம்மந்தம் இல்லாமல் நான் நாய் இல்லை எனக் கூறும் கூற்று அந்த வேலை மீது வெறுப்பை காட்டுவதாக உள்ளது. வேலையை மதிக்காமை புலப்படுகிறது. முதலாளி உன்னை விட எனது நாய் மேலானது என கூறும் போது இது விட்டு ஓடம் ஒரு உணர்ச்சிக்குரிய பிரச்சனை அல்ல. ஏன் எனில் அனைத்து முதலாளிகளும் தனது தொழிலாளியை விட தனது நாயை மேலானதாகவே, தொழிலாளியின் சம்பளத்தை விட நாய்க்கு கூடுதலாகவே செலவும் செய்வான் என்பதை சமூகம் பற்றி விமர்சன நோக்கம் கொண்டவர்களுக்கு புரியாமல் போனது ஆச்சரியமானது. தொழிலாளியை விட நாய் முதலாளிக்கு மேலானது என்ற இக்கூற்றை சரியாகப் புரிந்து கொண்ட பேர்களுக்கு 1917இல் சோவியத்தில் ஜார் மன்னனின் நாயை சுட்டுக் கொன்றது வரலாறு.

ஒரு முதலாளிக்கு எதிராக எல்லா வித ஒடுக்கு முறைக்கும் வகைகளுக்குப் எதிராக எதிர்த்து நின்று போராடுவது மட்டுமே ஒரு சரியான வழியாகும். அதைவிடுத்து விட்டுவிட்டு ஓடுவதென்பது உணர்ச்சி வசப்படும் ஒரு லும்பன் தன்மையாகும். இதில் இனஇனுமொரு பக்கம் உண்டு. யோகேஸ் பல்கலைக்கழகத்தில் படித்தவர் என்பதை ஒரு காட்சி தெளிவாக்குகிறது. அப்படிப் பார்த்தால் பல்கலைக்கழகத்தனத்துக்கே உள்ள கீழ்மட்ட வேலைகளை செய்யாத அதிருப்தி உணர்வு வேலையை விட்டு ஓடச்செய்கிறது. அதுதான் நான் நாய் இல்லை என்ற சம்பந்தம் இல்லாத இடத்தில் வந்த கூற்று காட்டுகிறது. சமூகம் பற்றிய விமர்சனம் உள்ளவன் பழ்கலைக் கழகத்தில் படித்தவனாக காட்சி காட்டியது. யாழ் சமூகத்தில் உள்ள ஒரு சமூக கற்பனையின் பூர்சுவா வர்க்க கண்ணோட்டமேயாகும்.

ஆனந்தன் அறையில் இருந்த 18வயதை அடையாத இளைஞன் வேலை இன்றி உள்ள நேரம் உறவினரால் வேலை செய்யக் கோரி அவலப்படுகிறான். இதனால் அவன் வேலை தேடிச் சென்று முதல் நாளே வேலையில் மரிணிக்கிறான் இக்காட்சியில் முன் அவ்விளைஞன் வேலை இன்றி உள்ள நேரம் யோகேஸ் வேலையை விட்டு வந்த உடன் ஆனந்தன் அவரின் நண்பர் இடம் இருந்த வேலையை உடன் யோகேசுக்கு கொடுக்கிறார். இங்கு இவ்விளைஞன் புறக்கனிக்கப்படுவதும் சொந்த மனிதாபிமானக் கண்ணோட்டம் கூட போலியானதாக சிதைந்து போகின்றது. இது படத்தில் இன்னுமொரு சுயமுரண்பாடேயாகும். இப்படத்தில் அவருக்கு விசா இல்லை என்றோ 18 வயது ஆகவில்லை அதனால் தான் என நியாயப்படுத்த முன்வந்தால் அது தவறேயாகும். ஏன்எனில் இவ்வேலை கூட சட்டு விரோதமாக செய்யக்கூடியதாக இருந்திருக்கலாம் அல்லவா? காட்சி எதையும் கூறாமல் போனது உண்மை. பிரான்ஸின் தொழில் சட்டத்தில் எதுவும் இல்லாத ஒரு காட்டுமிராண்டி சமூகமாகக் காட்டும் வகையில் படம் தொழில் தொடர்பான பிரச்சனைகளைக் காட்டுவது வெட்கக்கேடானது. இது மிக மோசமாக பிரெஞ்சுத் தொழிலாளியை அவமதிப்பதாகும். பிரான்சைப்பற்றி ஒரு பொய்மை படத்தை, பிதுமிஞ்சிய அரசியலைக் காட்டும் படம். படசை விட்டு வருபவர்களை ஊக்குவிக்கும், பிரமையை ஏற்படுத்தி உள்ளது. இது படத்தின் நோக்கத்துக்கும் விளைவுக்குமிடையில் சுயமுரண்பாட்டைக் கொண்டுள்ளது. பாரிஸ் பற்றி மகரா உயர் மாடிக்கட்டிடங்களையும், அதன் அழகியலையும் வெளிக் கொண்டு வருகின்றது. பாரிஸ் சேரிப்புறம் நிராகரிக்கப்படும் போக்கு இந்திய சினிமாத் தனத்தின் ஒரு தொடர்ச்சியாகும்.

1985 இல் பாரிஸ் வாழ்கை என்பது மிக மோசமான வீடுகளிலும், ஒரு அறையிலே சமைத்தல் வாழ்தல், 10,15 பேர் கொண்ட வாழ்கையாகும். அங்கு குளித்தல் என்பது அதிகமாக சாத்தியம் இல்லை. ஆனால் படம் வசதியான வீடு, வசதியான வாழ்கை என அனைத்தையும் கொண்டு இருந்தது. படத்தில் சுயமுரண்பாட்டையும், போலி அழகியலையும் வெளிப்படுத்துகின்றது.

www.tamilarangam.net


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஆனந்தனுக்கும் அறையில் இருந்தவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரன்பாடு இறங்கும் படி உரிமையாளர் கூறுகின்றார். ஆனந்தனும் மற்றவரும் அறையை விட்டு இறங்குகின்றனர். இக்காட்சி வேலையை விட்டு யோகேஸ் வந்தது போல் ஒரு லம்பன் தனம் சார்ந்ததே. ஏன் எனில் வாடகை கட்டி இருந்த நபரை விட்டை விட்டு இறங்கக் கோரும் போது அதற்கு எதிராக போராட வேண்டும் என்ற நிலை மறுக்கப்படுகின்றது. அதாவது ஒரு விட்டை விட்டு ஒரு வீட்டுச் சொந்தகாரன் விட்டில் உள்ளவரை வெளியேற்றுவது எனில் அதற்கு என சட்ட ஒழுங்குகள் உண்டு. இதே நிலை அறையில் இருக்கும் நபர்களுக்கும் உண்டு. குறைந்த பட்சம் சட்ட ஒழுங்குகளுக்குக் கூட போராட வேண்டும் என்ற உணர்வைக் கூட மறுக்கும் தன்மை லும்பன் தனத்துடன் படம் நியாயப்படுத்துகின்றது. இதன் மூலம் எம்மவர்கள் முதலாளிக்கு சேவகம் செய்யும் போக்கு நியாயப்படுத்தப்படுகிறது.

கறண்டியால் சுரண்டுவதை கௌரவமாகக் காட்டும் அதன் போலித் தனத்தை தோலுரிக்கும் படம் அதன் எதிரேவியாகக் காட்டும் எமது நிலையில் உள்ள பிற்போக்குத் தனத்தை காட்டாமல் விட்டு சமரசம் செய்வதன் மூலம் நியாயப்படுத்தப்படுகின்றது. இதை நாம் வேறு ஒரு காட்சியில் ஆனந்தன் அறையில் இருந்த இளைஞன் கொல்லப்பட்ட நிகழ்வு அதன் சோகத்தை மறைக்க யோகேசுடன் அருள் வீடு செல்லும் ஆனந்தன் அங்கு தொலைக் காட்சியில் சினிமாப் பாட்டு கேட்பதை என்ன என்பது.

இப்படிப் பல இன்னமும் சுட்டிக்காட்ட முடியும். அதே நேரம் இனப்பிரச்சனையின் தாய் உறவினர் இடையில் உள்ள பிரிவு பாரிசுக்கு மட்டுமான பிரச்சனை அல்ல. மாறாக வடக்குக்கும் வன்னிக்கும், தீவுக்கும் வடக்ககம், வடக்குக்கும் கொழும்புக்கம், மிழக்கில் ஒரு கிராமத்துக்கும் இன்னோரு கிராமத்துக்கும் என யுத்தம் காலாகாலமாக ஏற்படுத்தி, நடைபெற்று வந்துள்ளது.

தொகுப்பாக நண்பரின் புறக்கணிப்பு, அறையில் ஏற்படும் பிரச்சனைகள், வேலை இன்மை, வேலையில் இறப்புகள், மற்றவர்கள் பற்றிய கருத்துகள் தாய் தந்தை உறவினர் பிரிவுகள் எல்லாம் எம்மண்ணில் உண்டு. இது புலம் பெயர்ந்த நாட்டில் ஏற்படும் ஒரு அகதியின் முகமாக மாறிவிட மாட்டாது. இது எம்மண்ணின் தொடர்ச்சி. இது எம்மண்ணிலும் உண்டு.

இப்படத்தை ஒரு பிரஞ்சுக் காரன் பார்ப்பான் ஆயின் என்ன முடிவு எடுப்பான் எனின் தமிழனால் தமிழனுக்கு பிரச்சனை அல்லவே படம். அகதியாக வந்தால் அல்ல என்பது அவனின் முடிவாகும். இதை புலம் பெயர்ந்த வேறு நாடுகளில் இது ஒரு பிரச்சனையாக இருக்காது. ஏன் எனில் அரசே வீடு, நிதி வழங்குவது போன்று சில உதவிகளைச் செய்வதால். அடுத்து தம்பி அண்ணனிடம் வரும் போது இப்பிரச்சனைகள் மாறிவிடும் அல்லவா. அங்கு பிரச்சனைகள் தெரிய வாய்ப்பில்லாது போய்விடும்.

அகதி முகம் இழத்தல் என்பது எதில் என சிலவற்றை குறிப்பிட்டுக் காட்ட முனைகிறேன்.

1) நாட்டை விட்டு வெளியேற முனையும் ஒருவன் ஒரு தரகன் மூலம் அனுபவிக்கும் வெறுப்பான அருவெறுப்பான நிலைமைகள்.



2) அகதியாக வருபவன் தங்குமிடம் கேட்டு அகதி உதவி அமைப்பிடம் செல்லும் போது ஏற்படும் மொழிப்பிரச்சனைகள்.

3) அகதியாக வருபவன் இங்கு கேஸ், விசாரணைக்கு என எழுத்தும், ஆவணம், மொழிபெயர்ப்பு, அதனால் ஏற்படும் மிக மோசமான சுரண்டலும், அவமானமும் அதாவது மொழி தெரியாமல் ஏற்படும் அவலம் சுரண்டலும்.

4) இங்கு அரசின் இளகாத தன்மை, பொலிஸ், அகதி விசாரனைக் கூடத்தில் கிடைக்கும் நாய்களிற்கும் கீழான வரவேற்பு.

5) அகதியாக இருப்பதாலும், மொழி தெரியாமல் இருப்பதாலும் முதலாளியால் கையாளப்படும் ஒடுக்குமுறை.

6) மொழி தெரியாததால் எதுவும் தெரியாத செக்கு மாடாக இயங்கம் போக்குடன் கூடிய அவலமான மண்ணின் நினைவுகள்.

7) எமது நிலப்பிரபுத்துவக் கலாச்சாரத்தின் பிடிப்பும், ஏகாதிபத்திய காலாச்சார பிடிப்பின் இடையில் சிக்கித்தவிக்கும் அவலம்.

8) எமது நாட்டுப்பற்றை இழந்து, மண்ணின் பிடிப்பை இழந்து மண்ணின் பிடிப்பை இழந்து எம்மவர் முன் இழந்து தவிக்கும் நிலை.

9) இங்கு உள்ள இயந்திரதனமான வாழ்வும், எம்மண்ணின் இயல்பானவாழ்விற்கும் இயங்கியல் வாழ்விற்கும் இடையிலான முரன்பாடு.

10) இங்குள்ள இனவெறித் தனத்தினால் குடும்பத்தை சந்திக்க முடியாமை, மற்றும் திருமணம் செய்ய முடியாமை என உள்ள நெருக்கடிகள்.

11) வெள்ளை இனவெறியர்களால் சந்திக்கும் பிரச்சனைகள், அதன் சோகங்களும் கோபங்களும்.

என பலவாரியாக எடுத்துச் சொல்ல முடியும். அகதியின் மகம் இழத்தல் என்பது எப்போழுது மண்பற்றுடன் கூடிய அதன் கலாச்சார தள இழப்புடன் இணைந்ததேயாகும். இங்குள்ள சமுதாயத்திற்கும், அங்குள்ள சமுதாயத்திற்கும் இடையில் உள்ள முரன்பாடுகளே ஆகும் முகம் படம் அதில் ஒரு அங்குலத்தைக் கூட தன்னுள் கொண்டு வர முடியவில்லை. இது ஏன்? கொண்டு வந்த பகுதிக்குள் ஏன் சமரசம்? பிரஞ்சு பற்றிய பிரமையை ஏன் மந்தள்ளினர். என பல கேள்விகளைக் கேட்க முடியும். இவ்விமர்சனம் நியாயமானது அல்லவா? கேள்விகள் கேளுங்கள் அப்போதே அடுத்த படத்தை சிறப்பானதாகத் தரமுயல்வார்கள். உங்கள் பிரச்சனைகளை நெருக்கடிகளை சரியாகத் தரும்படி உங்கள் பணத்தை செலவு செய்து நீங்கள் பார்க்கம் போது கோருவது நியாயம் அல்லவா? கேளுங்கள் கேள்விகளை.

www.tamilarangam.net

www.tamilarangam.net

# விளிம்பு டிரஸ்ட்

பழைய எழுத்துக்கள், பழைய பார்வைகள், பழைய அணுகல்கள் காலாவதியாகிக் கொண்டிருக்கும் ஒரு காலக்கட்டத்தில் நின்றுகொண்டு இருக்கின்றோம்.

புதிய சூழல்களை எதிர்கொள்ள புதிய சிந்தனைகள், புதிய எழுத்துக்கள், புதிய செயல்பாடுகள் தேவைப்படுகின்றன.

இதுவரையிலான அதிகார மையங்கள், வரலாற்று மையங்கள், சிந்தனை மையங்கள், நிறுவன மையங்கள் ஆய்வுக் குவி மையங்கள்.... எல்லாவற்றிலிருந்தும் ஒதுக்கி வைக்கப்பட்டு விளிம்புகளில் நின்று கொண்டிருந்தவர்களையும், நிறுத்தப் பட்டவைகளையும் நாம் கவனம் கொள்ள வேண்டிய காலம் இது.

விளிம்புகளின் வரலாற்றை எழுத வேண்டிய அவசியமும், விளிம்புகளின் பிரச்சனைகளை ஆய்வு செய்ய வேண்டிய தேவையும், விளிம்புகளின் போராட்டங்களில் பங்கு பெறும் கடமையும், விளிம்பு எழுத்துக்களை வெளிக்கொணர வேண்டிய பணியும் நம் முன் உள்ளன.

இந்த வாய்ப்புக்களை உருவாக்கித் தரும் நோக்கத்துடன் நமது கருத்துக்களிலும் செயல்பாடுகளிலும் நம்பிக்கை கொண்ட தமிழ் மக்களின் நன்கொடை உதவியின் அடிப்படையில் **விளிம்பு டிரஸ்ட்** உருவாக்கப்பட்டுள்ளது.

முறைப்படி பதிவு செய்யப்பட்டு, எள்ளளவும் லாப நோக்கின்றி, முற்றிலும் சனநாயக அடிப்படையில் இயங்க உள்ளது.

முதல் மூன்றாண்டுகளுக்குத் தலித் எழுத்தாளர்களின் எழுத்துக்களை மட்டும் வெளியிடுவது எனவும் தீண்டாமை, சாதிப் பிரச்சனைகள் தொடர்பான ஆய்வுகளுக்கு உதவி செய்து பின் அவற்றை வெளிக் கொணர்வது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து புலம் பெயர்ந்த எழுத்துக்கள், பெண்ணிய எழுத்துக்கள், ஆய்வுகள் முதலியவற்றையும் வெளியிட உள்ளோம். இந்த முயற்சியில் பங்குபெற உங்களை அழைக்கின்றோம். உங்களிடமிருந்து எல்லாவிதமான ஒத்துழைப்புகளையும் எதிர்பார்க்கின்றோம்.

உங்களின் நிதி உதவியின் அடிப்படையிலேயே 'விளிம்பு' செயல்பட உள்ளது என்பதை அன்புடன் நினைவூட்டி இரு கரம் நீட்டுகின்றோம்.

**தலைமையக முகவரி**
**விளிம்பு டிரஸ்ட்**
*மே/பா. நிறப்பிரிகை*
*அ.பெ. எண் 192*
*புதுவை – 605 001*

*புனைவுகள், ஆய்வுத் திட்டங்கள்*
*முதலியவற்றை அனுப்ப வேண்டிய முகவரி*

**அ. மார்க்ஸ்**
*31, சேவியர் நகர்*
*தொம்பன் குடிசை*
*தஞ்சாவூர் – 613 001*

நிதித் தொடர்புகளுக்கு
**விளிம்பு டிரஸ்ட்**
*3, மாரியம்மன் கோயில் வீதி*
*உப்பிலிப்பாளையம்*
*கோவை – 641 015*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நோர்வே
# தமிழன்

## 400 தமிழ்

# அகதிகள் திருப்பி அனுப்பப்படும் அபாயம்!

### சாகும் வரை உண்ணா விரதம்!




நடந்த வருடம் நோர்வே நாட்டில் அரசியல் தஞ்சம் கோரிய அநேக தமிழர்களின் மனு நிராகரிக்கப்பட்டு (மூன்றாவது மேன்முறையீடும் நிராகரிக்கப்பட்டு) அவர்களை இலங்கைக்கு குறிப்பிட்ட சில தினங்களுக்குள் திரும்பி செல்லுமாறு நோர்வே அரசு தெரிவித்துள்ளது.

அரச தரப்பு தகவலின் படி 410 தமிழர்கள் இவ்வாறு அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாக தெரிவிக்கின்றது. இதில் 200 பேரிற்கு நிராகரிப்பு மனு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

இலங்கையில் இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் தமிழர்கள் பாதுகாப்பாக வாழலாம்'(?) என ஐ.நா சபையின் அகதிகளுக்கான

## யார் இந்த நோர்வேத்தமிழன்?

நோர்வே நாட்டில் வாழும் தமிழர்கள் அனைவரும் நோர்வே தமிழர்கள் தான். அண்மைக்காலமாக நோர்வே நாட்டின் பத்திரிகைத் தொடர்பு சாதனங்கள் ஈழத்திலிருந்து குடிபெயர்ந்து இங்கு வாழும் தமிழர்களை "நோர்வேத்தமிழர்கள்" என்றே குறிப்பிட்டு அழைக்கின்றன.

நோர்வேத்தமிழன் ஈழத்தில் வாழ்ந்த காலத்தில் சிங்கள இனவாதத்திற்கு முகம் கொடுத்தவன், இங்கு குடிபெயர்ந்து வந்த பின்னரும் இவன் வெள்ளை இனவாதத்திற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் முகம் கொடுக்கின்றான்!

இவன் அடிப்படையில் இரண்டு தீவிர பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கின்றான். இந்த அனுபவங்களில் இருந்து நோர்வேத்தமிழன் கற்றுக் கொள்வது ஏராளம். இவன் வாழ்வை அர்த்தப்படுத்தும் மனித நேயத்தையும், சமத்துவத்திற்கான தேவையையும் உணர்ந்திருக்கிறான். இவன் ஈழத்தில் மட்டும் அல்லாது உலக நாடுகள் அனைத்திலும் மனித நேயம் தலை நிமிர, சமத்துவ சமுகம் உருவாக குரல் கொடுப்பதுடன், அதற்காக பாடுபடுவான் என்பதையும் கூறிவைக்கின்றான். அதற்காக அனைவரையும் கரம் கோர்க்க வேண்டுகிறான் !

நோர்வேயில் தமிழரின் வாழ்வையும், வரலாற்றையும் பதிவுகளாக்குவதே நோர்வேத்தமிழனின் நோக்கமாகும். வருடத்தின் நான்கு பருவ காலத்திலும் இவன் உங்கள் கரம் தவழ்வான்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 400 தமிழர்கள்......

(1ம் பக்க தொடர்ச்சி)

உயர்ஸ்தானிகராலயம் கடந்த சில வருடங்களாக கூறி வருகின்றது. இதனையே நோர்வே அரசும் அரசியல் தஞ்சம் கோரிய தமிழர்களின் மனு நிராகரிப்பதற்கான காரணமா கூறுகின்றது.

நோர்வே நாட்டிற்கு முதன்முதலாக 1986 ஆம் ஆண்டு கடைசிப்பகுதியிலேயே தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரி வரத்தொடங்கினார்கள். அந்தக்காலகட்டத்தில் அகதிகளாக வரும் தமிழர்களின் நலன்களுக்காக உதவுவதற்கான அமைப்பு ஒன்றும் இல்லாதமையினால் ஒஸ்லோ தோய்ய தேவாலயத்தில், "தமிழ் நோர்வே இணைவு கூடம்" எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது.

1994ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஒஸ்லோவில் உள்ள அமைப்புகள் கூட்டாக "அகதிகள் நடவடிக்கை குழு" ஒன்றை உருவாக்கினர். இதன் தொடர்ச்சியான செயற்பாட்டின் மூலம் 01.01.1996 ஆம் ஆண்டுக்கு முன்னர் தஞ்சம் கோரிய அனைத்து தமிழர்களுக்கும் நோர்வே அரசு தங்குமிட அனுமதி வழங்கியது.

தற்போது அரசியல் தஞ்சக் கோரிக்கை மனு நிராகரிக்கப்பட்ட சிலரக்கு சொல்லப்படும் காரணம்: 1. சிங்கள அராணுவத்தால் பாதிக்கப்பட்டதாக கொடுக்கப்பட்ட மனுவிற்கு, மனுதாரர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் பாதுகாப்பாக வாழலாம என்றும்,

2. விடுதலைப்புலிகளினால் பாதிக்கப்பட்டதாக கொடுக்கப்பட் மனு நிராரிக்கப்பட்டதுக்கான காரணமாக, இவர் சிங்கள இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் பாதுகாப்பாக வாழலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபை, மற்றும் அகதிகளுக்கான நோர்வீஜிய அமைப்பு (NOAS)போன்ற அமைப்புக்கள் நோர்வே அரசிடம் தமிழர்களை தற்போதைய சூழ்நிலையில் திருப்பி அனுப்ப வேண்டாம் என்று மிகவும வேண்டிக் கேட்டுக்கொண்டுள்ளன.

இது இவ்வாறு இருக்க நோர்வே நாட்டின் மத்திய பகுதியும், நோர்வேநாட்டின் மூன்றாவது பெரிய நகரமுமான "துரணியம்" நகரில் மனு நிராகரிக்கப்பட்ட 14 தமிழர்கள் கடந்த தை மாதம் 13 ஆம் திகதி முதல் திருப்பி அனுப்ப வேண்டாம் எனக்கோரி சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

இத்தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து நோர்வேயின் பல்வேறு பகுதிகளில் தமிழர்களும், நோர்வே நாட்டவர்களும் ஊர்வலங்கள், அடையாள ஊர்வலங்கள் போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தை 16ஆம் திகதி அகதிகள் நடவடிக்கை குழுவினர் நீதியமைச்சிற்கு முன்னால் அடையாள எதிர்ப்பு ஒன்றை நடாத்தனர். ( முன் படத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



-கோபாலன்-

# பாாவைக்குள் பதிந்த இரு நாட்டிய அரங்கேற்றங்கள்.

1996ல் ஆண்டு தமிழ் கலையாசவர்கள் அனைவருக்கும் முக்கியமானதாகும் காரணம் ஒஸ்லோவில் முதன்முதலாக பரத நாட்டிய அரங்கேற்றங்கள் அரங்கேறியதுதான்!

செல்வி அனித்தா ஜெயானந்தன்

நோர்வே நாட்டின் முதல் பரதநாட்டிய அரங்கேற்றம் ஜனவரி மாத இறுதி வாரத்தில் ஒஸ்லோ குருரூட்சம்புன்ஸ் கூஸில் அழைப்பிதழில் குறிப்பிட்ட நேரத்தின் படி ஆரம்பமானது. அன்றைய தினம் அரங்கேற்றம் கண்ட செல்வி அனித்தா ஜெயானாந்தன் நோர்வே மண்ணில் பிறந்து வளர்ந்த பதினைந்து வயது இளம் கலைஞர்.

ஏழு ஆண்டுகளாக நாட்டிய கலாவித்தகர் திருமதி அமிர்தவர்ஷினி உதயகரனிடம் செயல்முறை, கோட்பாடு என்ற அடிப்படையில் பரதக்கலையினை கற்றுக் கொண்ட செல்வி அனித்தா ஜெயானந்தனின் அரங்கேற்ற வைபவம் கணேஷ வந்தனத்துடன் ஆரம்பமாகி சம்பிரதாய பூர்வமாக புஷ்பாஞ்சலி , அலாரிப்பு, பதம் , கீர்த்தனம் , சப்தம் , வர்ணம், பாரதிபாடல், தில்லானா, மீனாட்சிபாடல், மங்களம் என்று மிகநேரத்தியாக இடம் பெற்றது. நிகழ்ச்சி முழுக்க முழுக்க உள்ளூர் கலைஞர்களின் பக்கபலத்துடன் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பாவம், ராகம் தாளம் , என்ற மூன்றின் இசைவாய் தோற்றம் பெற்ற நாட்டியக் கலையின் முழுமையினை இந்நிகழ்ச்சியில் அநுபவிக்க முடியாவிட்டாலும் கற்றுக் கொண்டதை ஒப்புவித்தல் என்ற நிலையில் நாட்டிய கலைஞர் இயன்றவரை தன் பங்கினை தாள சுத்தியோடு நேர்த்தியாகவே வழங்கினார் என்று கூறலாம் இருந்தாலும் ரசா அநுபவங்கள் என்று எடுத்துக் கொண்டால் நாட்டியத்தை உள்வாங்கி தன் நிலையில் நின்று வெளிப்படுத்தும் தன்மை இன்னும் நடனக் கலைஞருக்கு வசப்படவில்லை என்றே தென்படுகிறது. நடன ஆசிரியை மிக நேர்த்தியாக நட்டுவாங்கம் செய்ததை மறுப்பதற்கில்லை. ஆனால் வர்ணத்தில் இன்னும் அதிக கவனம் செலுத்தியிருந்தால் பார்வையாளர்கள் நிகழ்ச்சியை இரசிப்பதற்கு மேலும் ஒரு வாய்ப்பாக இருந்திருக்கும்.

குரலிசை வழங்கிய சங்கீத வித்துவான் திருமதி குணபூஷணம் நாகராஜா அவர்கள் நிகழ்ச்சியில் இடம் பெற்ற ஒவ்வொரு பாடலையும் அதன் உட் பொருள் அறிந்து பாடிய விதம் பாராட்டிற்குரியது. எனினும் நிகழ்ச்சியின் இடைவேளைகளை எல்லாம் இசைவேளையாக்க முனைந்து குரலிசைக் கலைஞரை தொடர்ந்து பாட விடாமல் தவிர்த்திருந்தால் குரலிசைக் கலைஞரின் திறமை பார்வையாளர்களால் மேலும் ரசிக்கப்பட்டிருக்கும் என்றே நம்புகிறோம். பக்கவாத்தியங்களுக்குள் குறிப்பாக மிருதங்க வித்துவான் சுந்தரமூர்த்தியின் வித்தக விரல்களுக்கு இந்நிகழ்ச்சியும் விதிவிலக்கல்ல. நிகழ்ச்சியின் வெற்றியில் இளம் இசைக்கலைஞர்கள் செல்விகள் யக்ஷகாண்ரா நாகராஜா, கிருஷ்ணகாண்ரா நாகராஜாவின் பங்கும் பாராட்டுக்குரியது.

செல்வி கல்யாணி சிவஞானம்
செல்வி துஷ்யா அமரசிங்கம்

இரவுச் சூரிய தேசத்தின் இரண்டாவது பரத நாட்டிய அரங்கேற்றம் நோர்வே நாட்டில் மிகப் பிரசித்தி பெற்ற கலையரங்குகளில் ஒன்றான ஒஸ்லோ கொண்சேட்கூஸில் கடந்த. . . திகதி நடந்தேறியது. அன்றைய தினம் அரங்கப் பிரவேசம் கண்ட செல்விகள் கல்யாணி சிவஞானம் ,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துஷ்யா அமரசிங்கம் ஆகியோர் நாட்டிய கலைமாமணி மாலதி யோகேந்திரனிடம் இரண்டு வருடங்கள் மிகத் துரிதமாக பரதக் கலையைக் கற்றுக் கொண்டவர்கள். பிரமாண்டம் என்ற சொல்லுக்கு தென்னிந்திய திரைப்படங்களிலிருந்து அர்த்தம் காண விளையும் நமக்கு இந்த அரங்கேற்ற வைபவம் கூட அதே கருத்தை உறுதிப்படுத்தியது என்று சொன்னால் பொய்யாகி விடாது.

சம்பிரதாயபூர்வமாக பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட அரங்கேற்ற வைபவத்தினை வேழமுகப் பெருமானின் பாமாலையில் தொடங்கி நாட்டிய மேடைகளில் கையாளப்படுகின்ற பிரசித்தி பெற்ற அனைத்து உருப்படிகளையும் சேர்த்து வழங்கிய விதம் பாராட்டிற்குரியதே. எனினும் இருவர் கலந்து கொண்ட அரங்கேற்ற நிகழ்ச்சி என்பதனால் ஒரே உருப்படியினை தனித்தனியே இருவரும் ஆடமுனைந்தது பார்வையாளர்கள் மத்தியிலே சற்று சலிப்பினை ஏற்படுத்தியதுடன் ஆடற் கலைஞர்களின் திறமையினை ஒப்பிட்டுப் பார்க்கும் தன்மையினையும் தோற்றுவித்தது என்றுதான் கூறவேண்டும்.

நாட்டிய மேடைகளில் நடனக்கலைஞர்களின் திறமையினை முழுமையாக வெளிப்படுத்த உதவும் அம்சம் வர்ணம் என்று பார்த்தால் நிகழ்ச்சியில் கையாளப்பட்ட வர்ணம் நேரத்தின் அடிப்படையில் மிக நீண்டதாயும் நடன ஆசிரியையின் நட்டுவாங்கத்திற்கும் குரலிசைக்கும் இணைவு ஏற்படுத்த முடியாத ஓர் உருப்படியாகவே தென்பட்டது. இந்த அம்சத்தில் நாட்டிய மணிகளும் கண்வழி மனம் செல்ல, மனம் வழி அங்கம் இணைதல் என்ற நாட்டிய சாஸ்திர கோட்பாட்டிலிருந்து விலகி ஒப்புவித்தல் என்ற நிலையில் தம் பங்கினை வழங்கியதை நேரடியாகக் காணமுடிந்தது.

தனித்தனி உருப்படிகள் என்று எடுத்துக் கொண்டால் மட்டுநகர் வாவியிலே என்ற பாடலுக்கு துஷ்யா அமரசிங்கத்தின் பாவப் பிரயோகத்தினையும் , மொழிபுரியாவிட்டாலும் கல்யாணி சிவஞானம் ஆடிய மீரா பஜனில் காதல் ரசத்தினையும் மிகமிக நேர்த்தியாக வெளிப்படுத்திய விதமும் நாட்டியத்தின் தன்மை புரியாதவர்களைக் கூட பாராட்ட வைத்தவை என்று சொன்னால் மிகையன்று. இருவர் இணைந்து ஆடிய நிறைவம்சமாய் இடம்பெற்ற தில்லானா லயப் பிடிப்போடும் தாளக்கட்டோடு இருந்ததை மறுப்பதற்கில்லை. நிகழ்ச்சியின் வெற்றியில் தன் முழுப்பங்களிப்பினை நடன ஆசிரியை வழங்க முனைந்திருந்தாலும் கூட இரட்டையர் அரங்கேற்றம் என்பதால் தாள சுத்தி என்பது சிற்சில இடங்களில் நழுவுவதை மறைக்க முடியவில்லை என்றே தோன்றியது.

நிகழ்ச்சிக்குப் பக்கபலமாக குரலிசை வழங்கிய ஈழத்தின் பிரசித்தி பெற்ற நாட்டிய இசைக்கலைஞர் கானபூஷணதிலகம் திருமதி அம்பிகா தாமோதரம் அவர்கள் அதிகப்படியான பாடல்களை நேர்த்தியாகப் பாடினாலும் கூட குரல் இனிமை என்று எடுத்துக் கொண்டால் இவரா அவர் என்ற சந்தேகத்தை நிகழ்ச்சி ஏற்படுத்தியது என்றுதான் சொல்ல வேண்டும். உடன்பாடிய சங்கீதபூஷணம் சுபாஷ் சந்திரன் அவர்கள் குரல் வளத்திலே முன்னணியில் நின்றாலும் கூட நாட்டியத்தோடு ஒன்றாமல் பாடல்களை பாடமுனைந்த விதம் மேடையில் ஒத்திகை நடக்கிறதோ என்ற எண்ணத்தையே தோற்றுவித்தது. பக்கவாத்தியக் கலைஞர்கள் ஒவ்வொருவரும் தம் பங்களிப்பினை நிகழ்ச்சிக்காக சிறப்பாக வழங்கியிருந்தாலும் கூட வயலின் வாத்திய இசையினை எப்போதோ ஓரிரு முறைதான் பார்வையாளர்களால் ரசிக்க முடிந்தது இது ஒலி அமைப்பாளர்களின் கவனக் குறைவா ? அல்லது இசையாளர் ஒலிவாங்கியைக் கவனிக்கவில்லையா என்று எம்மால் உறுதிப்படுத்த முடியவில்லை. ' இலங்கை வானொலி ' ' லண்டன் பிபிசி ' புகழ் என்ற மகுடங்களுடன் அரங்கேற்ற நிகழ்ச்சியினை கம்பீரமான தமிழிலும் கவர்ச்சியான ஆங்கிலத்திலும் தொகுத்து வழங்கிய திரு விமல் சொக்கநாதன் அவர்களின் பங்கு பாராட்டிற்குரியது. எனினும் ஒருவரே இரு மொழிகளில் நிகழ்ச்சியைத் தொகுக்காமல் இருந்திருந்தால் அறிவிப்பாளரின் தமிழை அல்லது ஆங்கிலத்தை பார்வையாளர்கள் முழுமையாக ரசிப்பதற்கு வாய்ப்பாய் இருந்திருக்கும்.

அரங்கேற்ற நிகழ்ச்சிகளில் காட்டிய அதே அக்கறையினை இரண்டு அழைப்பிதழ்களை உருவாக்கியதன் மூலம் நிரூபித்த நிகழ்ச்சியின் முதலீட்டாளர்கள் ( பெற்றோர்கள்) மாறுபட்ட நிகழ்ச்சி நிரல்களை அதில் பிரசுரித்ததன் மூலம் ஒவ்வொரு நிகழ்ச்சியின் முடிவிலும் பார்வையாளர்களைச் சற்று குழப்பி விட்டார்கள் என்றே தென்பட்டது.

எனினும் இரட்டையர் அரங்கேற்றம் என்ற வகையிலும் இனி எவரும் நடத்திக்காட்ட முடியாத நாட்டிய நிகழ்ச்சி என்ற வகையிலும் இந்த அரங்கேற்றமும் தனித்துவமும் மகத்துவமும் பெறத்தான் செய்கிறது.

**நாட்டிய நிகழ்ச்சி என்ற வகையிலும் இந்த அரங்கேற்றமும் தனித்துவமும் மகத்துவமும் பெறத்தான் செய்கிறது.**

www.tamilarangam.net



# நோர்வே தமிழ் அட்டவணை 96

நோர்வே தமிழ் அட்டவணை 96

நோர்வேயில் வாழும் தமிழர்களின்
வாழ்க்கையும் வரலாற்றையும்
பதிவுசெய்யும் முயற்சியில் இறங்கியுள்ள
நோர்வே தமிழன் தனது முதல் முயற்சியாக
இந்த அட்டவணையை வெளியிட்டுக்
கொள்கின்றான் இது முழுமையானதல்ல.
கூடுதலாக ஒஸ்லோ பகுதியை மையப்படுத்தி
பதிவாகியுள்ளது. ஆனால் தமிழர்கள் நோர்வே
முழுதுமாக பரவி வாழ்கின்றார்கள்.
இவையனைத்தும்
பதிவுசெய்யப்பட வேண்டியுள்ளது.
இனிவரும் காலங்களில் இம் முயற்சி
முழுமைபெற அனைத்து தமிழர்களின்
ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றான்.

□ 6.02.96 அன்று Conflict in Srilanka and international response எனும் தலைப்பில் 'கிரிஸ்ரியன் மிக்கல்சன் நிறுவனத்தினர் மாகாநாடு ஒன்றை ஒழுங்கு செய்திருந்தனர்.

□ 17.03.96 அன்னைபூபதி தமிழ் கலைக்கூடத்தின் ஆண்டுவிழா நடைபெற்றது..

□ 25.04.96 பிரதம மந்திரி அலுவலகத்திற்கு முன்பாக அடையாள அமைதி ஒன்று கூடல் ஒன்றை தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஒழுங்கு செய்திருந்தது.

□ 27.04.96 முத்தமிழ் அறிவாலயம் சிறுவர் தமிழ்ப்பாடசாலையினர் 'சின்னப்பூக்கள் ஒலியிழை நாடா வெளியீட்டு விழா நடைபெற்றது.

□ 01.05.96 மே தினத்தை முன்னிட்டு தமிழ் கலாச்சார மையத்தினரால்(சுவடுகள்) ஆறு விடயங்களை வலியுறுத்தி துண்டுப்பிரசுரம் ஒன்று நோர்வே மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஊர்வலம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது.

□ 19.05.96 அன்று தமிழ் நோர்வே- இணைவு கூடம் தனது ஒன்பதாவது வருடாந்த பொதுக்கூட்டத்தை நடாத்தி புதிய நிர்வாக சபையை தெரிவு செய்தது.


□ 10.05.96 Texas Brødre எனும் புதிய தமிழ் உணவுச்சாலை திறப்புவிழா நடைபெற்றது.

□ 06.07.96 தமிழ்ச்சங்கம் ஒழுங்கு செய்த பெண்களுக்கான பூப்பந்தாட்டமும், உதைபந்தாட்டம் 12,13,14,19,20,21திகதிகளிலும் மெய்வல்லுனர் போட்டி 27ம் திகதியிலும் ஆண்களுக்கான பூப்பந்தாட்டம்28ம்திகதியிலும் நடைபெற்றது.

□ 11.07.96 பதின்மூன்று வருடகாலமாக நோர்வேயில் வாழ்ந்த, ஐசயில் குடும்பத்தினரை நாட்டைவிட்டு வெளியேற நோர்வே அரசின் முடிவை எதிர்த்து நீதியமைச்சின் முன்னால் அடையாள ஒன்று கூடலில் தமிழ் நோர்வே மக்கள் இணைவு கூடம் ஆதரவு தெரிவித்து கலந்து கொண்டது.

□ 21.07.96நோர்வே நாட்டிற்கு விஜயம் செய்திருந்த எழுத்தாளரும், கொழும்பு பல்கலைக்கழக சட்டவியல் முதுநிலை விரிவுரையாளருமான வி.ரி.தமிழ்மாறன் 'இனப்பிரச்சனைத் தீர்வுகளில இன்றைய போக்குகள்' எனும் தலைப்பில் உரையாற்றினார்.இதனை தமிழ் நோர்வே மக்கள் இணைவு கூடம் ஒழுங்கு செய்திருந்தது.

□ '28.07.96 பிரான்சு வாழ் ஈழத்தவர்களின் படைப்பான 'முகம்' திரைப்படம் திரையிடப்பட்டது. இதுவே ஒஸ்லோவில் திரையிடப்பட்ட முதலாவது புலம் பெயர்ந்த ஈழத்தவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திரைப்படமாகும்.

□ 03.08.96 பிரான்சு வாழ் ஈழத்தவர்களின் படைப்பான 'முகம்' திரைப்படம் பற்றிய விமர்சன கூட்டமும் கலந்துரையாடலும் நடைபெற்றது. அதனை தமிழ் நோர்வே இணைவு கூடம் ஒழுங்கு செய்திருந்தது.

□ 03.08.96 சுதந்திரதாகம் நிகழ்ச்சி தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் நடாத்தப்பட்டது.


□ 10.08.96 Tamil Norway Cup 96 உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நடைபெற்றது.

□ 13.08.96 ஆடி அமாவாசை விரதத்தையொட்டி விசேட பூசையை நோர்வே இந்து கலாச்சார மன்றம் ஒழுங்கு செய்திருந்தது.

□ 17.08.96 தமிழ்சங்கத்தின் ஆண்டுவிழா நடைபெற்றது.

□ 06.09.96-15.09.96 காலப்பகுதியில் மருத்துவநிதி சேகரிப்பில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபட்டது.

□ STAR CLUB நடாத்திய பூப்பந்தாட்டம்31-08.96-01.09.96



திகதியிலும் கரப்பந்தாட்டப்போட்டி 7-8.09.96 நடைபெற்றது.

□20.09.96 ஈழத்திலிருந்து வருகை தந்த மோகன் ரங்கனின் இன்னிசை மாலை நடைபெற்றது.

□ 28.09.96 திலீபனின் நினைவுக்கலை மாலையை தமிழர் ஒருங்கிணைப்புக் குழு நடாத்தியது.

□ 29.09.96 நாட்டில் அமைதியும்சமாதானமும் வேண்டி ஒன்று கூடல் ஒன்றை கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் நடாத்தியது.

□ 13.10.96 ஒஸ்லோ அருள்மிகு சிவசுப்ரமணியர் ஆலயத்தில் நவராத்திரி பூஜாரம்பம் நடைபெற்றது.

□ 20.10.96 முத்தமிழ் அறிவாலயம் சிறுவர் தமிழ் பாடசாலையில் சரஸ்வதி பூஜை கொண்டாடப்பட்டது.

□ 21.10.96 ஒஸ்லோ அருள்மிகு சிவசுப்ரமணியர் ஆலயத்தில் விஜயதசமி கேதாரகௌரி விரதாரம்பம் நடைபெற்றது.

□ தேசிய மாவீரர் வெற்றிக்கிண்ண சுற்றுப்போட்டிகள் ஐப்பசி 26,27 திகதிகளில் நடைபெற்றது.

□ 30.10.96முதல்-05.11.96வரை 'மறந்ததோ வையம் மறத்தமிழ் இனத்தை' எனும் தலைப்பில் 'தமிழர் ஒருங்கிணைப்புக் குழு அனைத்துலக கவனஈர்ப்பு வாரத்தை நடாத்தியது.

□ 16.11.96 ஒஸ்லோ அருள்மிகு சிவசுப்ரமணியர் ஆலயத்தில் கந்தசஷ்டி விரத முடிவு நடைபெற்றது.



□ 17.11.96 ஒஸ்லோ அருள்மிகு சிவசுப்ரமணியர் ஆலயத்தில சுப்ரமணிய பெருமானுக்கு திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது.

□ 23.11.96 முத்தமிழ் அறிவாலயம் சிறுவர் தமிழ்ப்பாடசாலையின் 2வது ஆண்டுவிழா நடைபெற்றது.

□ தமிழர் தேசநிர்மாண நிதிக்காக புதியகார் அதிர்டலாபச் சீட்டிழுப்பு 22.11.96 ஒஸ்லோ பொலீஸ் நிலையத்தில் நடைபெற்றது.

□ 30.11.96 STOVNER CUP96 க்கான விளையாட்டுப்போட்டி நடைபெநந்து.

□ 29.11.96 அன்று prince indisk restaurant தமிழ் உணவுச்சாலை திறந்து வைக்கப்பட்டது.

□ 16.12.96 திருவெம்பாவை பூஜாரம்பம் நடைபெற்றது.

□ 14.12.96,15.12.96 திகதிகளில் பெண்கள் மாணவர்கள் மூலமாக வீடு வீடாக உண்டியல் நதிசேகரிப்பு நடைபெற்றது.

21.12.96,22.12.96 திகதிகளில் ஆண்கள் மூலமாக வீதிகளில் உண்டியல் நிதிசேகரிப்பு நடைபெற்றது

□ 25.12.96 திருவெம்பாவைமுடிவு நடைபெற்றது..

□ 27.12.96 கத்தோலக்க இளைஞர் மன்றம் நடாத்திய 'ஒளி விழா' சிறப்பாக நடைபெற்றது.

நிருபர்கள் தேவை

தமிழர்கள் நோர்வே முழுவதும் பரந்து வாழுகின்றனர். நோர்வேதமிழனுக்கு தமிழர்களின் கலை, இலக்கிய, அரசியல் சமூக சம்பவங்களை பதிவுகளாக்குவதற்கு நிருபர்கள் தேவை.

ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

நோர்வே தமிழன்
Herslebs gt-47
0578 Oslo
தொலைபேசி இலக்கம் – 92 43 52 12



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- வாமன் -

## உண்ணாவிரதம்

# கடைசிச் செய்தி

11.01.97 அன்று தமிழர்கள் நோர்வே அரசின் தமழர்களைத்திருப்பி அனுப்ப எழுத்திருக்கும் முடிவைக் கண்டித்து ஒஸ்லோ நகரில் தீப்பந்தகளை ஏந்தி ஊர்வலமாகச் சென்றனர். இதில் 300பேர் கலந்து கொண்டதாக ஆப்தன் போஸ்தன் பத்திரிகை எழுதியுள்ளது. (ஆனால் என்.ஆர்.கோ தொலைக்காடசியில் 500 பேர்வரை சென்றதாக தெரிவித்தது.) இதில் 100 தமழர்களுக்கு இறுதி முடிவு கிடைக்கப்படுள்ளது. இதில் 60 பேர்களுக்கு வெளியேறும் படி திகதி குறிப்பிடடு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. தீப்பந்தஊர்வலதின் முடிவில் தமிழர்களின் கோரிக்கை மனுவை பாராளுமன்ற நீதிக் குழுவின் தலைவர் பெற்றுக் கொண்டார்.

25.01.97 வெஸ்தரோலன் பகுதியில் இருந்து இரு தமழர்கள் பொலிஸாரினால் திருப்பி அனுப்புவதற்காக ஒஸ்வோ நகரிற்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.தீப்பந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட பிரியதம்பி (35 வயது) பத்திரிகைக்கு தெரிவித்த கருத்தின் படி 'தான் முடிவடைந்த 20ம் திகதி திரும்பிப் போவதற்கான கடைசிநாளாகும் எனத் 'தெரிவித்துள்ளார்.

24.01.97 உண்ணாவிரதம் இருந்த தமிழர்களில் இருவர்களழன் உடல் நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து உடனடியாக வைத்தியசாரலயில் அனுமதிக்கப்பட்டனர்.

'புலோரா' நகரில் உள்ள அகதிகள் முகாமிலிருந்த 15 தமிழர்கள் தலைமறைவாகியுள்ளனர்.

27.01.97 இதே தினத்தில் நோர்வே நாட்டின் அரண்டாவது பெரிய நகரமான 'பேர்கன்' நகரிலும் தமிழர்கள் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டனர்.

26.01.97 கடந்த 14 நாட்களாக துரொண்ஹய்ம் நகரில் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த 14 தமிழர்களும் துரொண்ஹய்ம் நகர அதிமேற்றாணியார் கேட்டுக்கொண்டதுக்கு இனங்க

தமது உண்ணாவிரதத்தை கைவிட்டனர். இதில் மோசமான நிலையில் இருந்த ஆறு பேர்களை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

'தெ தினத்தில் செய்தி ஸ்தாபனங்களுக்கு கருத்து தெரிவித்த பிரதி நீதியமைச்சர் இவர்களைத்திருப்பி அனுப்பும் முடிவில் மாற்றம் இல்லையென்று தெரிவித்துள்ளார். அத்தோடு கடந்த முறை போன்று தமிழர்கன் உண்மையான அரசியல் அகதிகள் இல்லை என்றும், இவர்கள் பொருளாதார அகதிகள் என்றும் தெரிவித்துள்ளார். கடந்த முறை போன்றே தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழு தனது அட்சேபனையைத் தெரிவித்துள்ளது.

28.01.97 ஆப்தன் போஸ்தன் பத்திரிகையில் பிரதி நீதியமைச்சர் தாங்கள் இந்தவாரம் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என கெடு நிர்ணயிக்கப்பட்ட தமிழர்கள் இந்த வாரத்துக்குள் அரசு பிடித்து அனுப்ப திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் கருத்தை நிராகரித்தார். இது பற்றி அரசு இறுதி முடிவு எடுத்த பின்னரே நடவடிக்கை எடக்கப்படும் என்று தெரிவித்தார்.

போர்டே பொலீஸ் அதியர் 28.01.97 ஆர்பைத பிளாத பத்திரிகையில் அங்கிருந்து தலைமறைவான 15 தமிழர்களை உடனடியாக தேடி கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் இறங்கப்போவதில்லை என்றும் ஆனால்அவர்கள் மீது ஒரு கண் எப்போதும் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

## விசாரணையில் முறைகேடு?

நோர்வேயில் அரசியல் தஞ்சம் கோரிய தமிழர்களில் சிலருக்கு அரசியல் தஞ்ச விசாரணையின் போது முறைகேடான வகையில் ஒருசில விசாரணை அதிகாரியினாலும், மொழிபெயர்ப்பாளினாலும் நடாத்தப்பட்டதாக அறியப்படுகின்றது.

இது பற்றிய முறைப்பாடுகளை தமிழர்கள் எழுத்து மூலமாக 'தமிழ் அகதிகள் நடவடிக்கை குழு'விற்கு கொடுத்ததையிட்டு தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழு நீதி அமைச்சுக்கு முறையீடு செய்துள்ளது. இம்முறையீடு அமைச்சினால் பொலிஸ் மா அதிபருக்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது பற்றிய விசாரணை தற்போது நடைபெறுவதாக அறியப்படுகின்றது. இவ்வாறு விசாரணையின் போது முறைகேடக நடாத்தப்பட்டவர்களின் விசாரணை மீண்டும் நடாத்தப்படவேண்டுமென முறையீட்டில் கேற்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

இவ்வாறான முறைப்பாடு உள்ளவர்கள் தமது முறைப்பாட்டை தமழ் அகதிகள் நடவடிக்கைக்குழுவிடம் கொடுக்கலாம்.

தொடர்புகளுக்கு: தமிழர் அகதிகள் நடவடிக்கை குழு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நிருபர்கள் தேவை

தமிழர்கள் நோர்வே முழுவதும் பரந்து வாழுகின்றனர். நோர்வேதமிழனுக்கு தமிழர்களின் கலை, இலக்கிய, அரசியல் சமூக விடயங்களை பதிவுகளாக்குவதற்கு நிருபர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.



நோர்வேதமிழன்
Herslebs gate 47
0578 Oslo

தொலைபேசி: 92435212


## பத்தாவது ஆண்டு நிறைவு விழா

தமிழ் நோர்வே இளைஞ கழகம்
தொடங்கப்பட்டு எதிர் வரும் கோடைகாலத்தில் பத்தாவது வருடத்தை நிறைவு செய்கிறது! இதையொட்டி கருத்தரங்கும், கலை விழாவும் ஒழுங்கு செய்யப்படவுள்ளது. விழா சிறப்புற சகல கலைஞர்களின் பங்களிப்பை வேண்டி நிற்கின்றது.

தொடர்புகளுக்கு: கலைச்செயலாளர்-
தொ.பேசி: 92833962

## தமிழ் நாத ஒலிபரப்புச் சேவை

ஒஸ்லோவில் ஒன்பது வருடங்களாக ஒலிபரப்பாகுகிறது.
FM 101.1 அலைவரிசையில் பிரதி வியாழக்கிழமை தோறும் மாலை 6 மணி முதல் 7 மணிவரை ஒலிபரப்பாகின்றது.
தொடர்புகளுக்கு:
தொலைபேசி- 22115600



## வீரவணக்கம்!

நோர்வேத்தமிழன், நோர்வேயில் வாழ்ந்தாலும் அவனது வேர்கள் என்னவோ ஈழத்தில் தான்! அது மாத்திரம் அன்றி அவனது சிந்தனைகளும் உணர்வுகளும் ஈழத்தின் மீது பறந்தே திரிகின்றது. இவன் தனது வேர்களையோ, உணர்வுகளையோ அறுத்துக்கொள்ள துடிக்கவில்லை. அதனால்த்தான் ஈழம் அழுதால் இவனும் அழுகிறான், ஈழம் மகிழ்ந்தால் இவனும் மகிழ்கிறான். ஈழத்தில் இன்றைய துயர் சூழ்ந்த நிலையால் இவன் தனக்கு துயர் சூழ்ந்ததாக வருந்துகிறான்.

ஆதலால் இவன் தனது முதலாவது செயலாக, இதுவரை ஈழமக்களின் உண்மையான துயரங்களுக்காக போராடி மரித்துப்போன போராளிகள் அனைவருக்கும், போராட்டத்தின் பக்கபலமாக எப்போதும் இருந்து தங்களைத்தாங்களே அர்ப்பணமாக்கிக் கொண்ட அனைத்து மக்களுக்காவும் நோர்வேதமிழன் சார்பில் நோர்வேத் தமிழன் வீரவணக்கத்தை செலுத்துகின்றான்.!

# சுவடுகள்

நோர்வே நாட்டிலிருந்து எட்டு வருடங்களாக வெளிவரும் ஒரேயொரு இதழ்

தொடர்புகளுக்கு:

SUVADUGAL
Herslebs gate 47
0578 OSLO


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீண்டும் கொலை!

## வன்மையாக கண்டிக்கின்றோம்.

ஈழமண்ணில் தலைவிரித்தாடும் கொலைக்கலாச்சாரத்திற்குத் தப்பி புலம்பெயர்ந்த தமிழர்கள், இன்று புலம் பெயர்ந்த மண்ணிலும் கொலைக் கலாச்சாரம் பரவி விரிவதைக் கண்டு கதி கலங்கி நிற்கின்றனர்.

இது இன்று நேற்றல்ல 83களிலேயே கொலைக்கிருமிகள் காவி வரப்பட்டு புலம்பெயர்ந்த மண்ணிலும் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆரம்பத்தில் இது தேசபக்தர்கள், விமர்சனக் கருத்துடையவர்களை குறிவைத்து மிரட்டல், இரும்புக்கம்பி அடி என்று ஆரம்பித்து மெல்ல மெல்ல கொலையாக சுயருபமெடுத்து ஆட்டுகின்றது.

சுவடுகள் நீண்டகாலமாகவே இத்தகைய மனித உரிமை மீறல்களையும்,கொலைகளையும் கண்டித்து வருகின்றது.

கடந்த 26.10.96ம் திகதி பாரிசில் வைத்து ஈழமுரசு ஆசிரியர் திரு.கந்தையா கஜேந்திரன், விடுதலைப்புலிகளின் சர்வதேச நிதிப்பொறுப்பாளர் திரு. கந்தையா பேரின்ப நாதன் ஆகியோர் இனந்தெரியாத நபர்களால் கொடுரமாக சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இக்கொலையை சுவடுகள் வன்மையாக கண்டிப்பதுடன், அனைவரையும் இக்கொலையை கண்டிக்கும்படி வேண்டுகிறது. கொலை எக்காரணங்களுக்காக நடாத்தப்பட்டிருந்தாலும் கண்டிக்கப்பட வேண்டியதே!

மூன்று வருடங்களிற்கு முன்னர் புலம்பெயர்ந்த மண்ணில் முதலாவது அரசியற் படுகொலையான சபாலிங்கத்தின் மீதான கொலையை தடுக்க முடிந்திருந்தாலோ அல்லது கொலையின் பின்னராவது அனைவரும் கரம் கோர்த்து வன்முறை கலாச்சாரத்திற்கு எதிராக செயற்பட்டிருந்தால் இந்தப்படுகொலையை தடுத்திருக்க முடியும்! ஆயினும் வரலாறில் துரதிஸ்ட வசமாக எமது சமூகம் குறுகிய தனிநபர் நலன்களாலும், குறுகிய அமைப்பு நலன்களாலும் சீரழிக்கப்படும் அபாயத்தில் உள்ளோம்.

சிறந்த சிந்தனையுடன், ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க இனியாகிலும் வன்முறை கலாச்சாரத்திற்கு எதிராக கைகோர்க்க அனைவரையும் வேண்டுகிறோம். இதனை இப்பொழுதாயினும் நாம் செய்யத் தவறுவோமாயின் புலம்பெயர்ந்த மண்ணில் இரத்த ஆறு ஓடுவதை தடுக்க முடியாதவர்களாவோம்!

☐ சுவடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எங்கள் எண்ணம்

## தெளிவு புரிந்த வேண்டும்

கடந்த இரண்டுவருடங்களிற்கு முன்னர் போலவே நோர்வே அரசு அரசியல் தஞ்சம் கோரிய தமிழர்களை திருப்பி அனுப்பும் முடிவை எடுத்துள்ளது. நோர்வே மட்டுமல்ல ஏனைய பல ஐரோப்பிய நாடுகளும் தமிழர்களை திருப்பி அனுப்பும் முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபட்டவண்ணம் உள்ளன. சில தமிழர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதும் பின்னர் இதனை இடைநிறுத்தி வைப்பதும் மீண்டும் திருப்பியனுப்ப முயல்வதுமாக கதை தொடர்கின்றது.

நோர்வே அரவு கடந்த காலங்கள் போலவே ஐநா சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகத்தினுல் தயாரிக்கப்பட்ட முடிவை அடிப்படையாக வைத்தே தாங்களும் திருப்பியனுப்புவதாக காரணம் கூறுகின்றது. ஐநா அகதிகள் உயர் ஸ்தானிகத்தின் அறிக்கையின் பின்னால் பல ஐரோப்பிய நாடுகள் ஒளிந்து கொண்டு இவ்வாறான நடவடிக்கையில் இறங்கு கின்றன. இது அப்பட்டமாக மனிதத்துவத்துக்கு எதிரானதும், மனித உரிமைகள் பற்றி இவர்கள் போடும் வாய்ச்சவடால்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. இச்செயல் மனித உரிமைகளை மீறுவது மட்டுமல்ல, இலங்கையில் தொடர்ச்சியாக சிங்கள இனவாதம் பாரிய அளவில் அப்பட்டமாக மீறிவரும் மனித உரிமை மீறல்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் துணைபோகும் செயலாகும்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்படவோ அன்றேல் முன்னைய அரசாங்கங்களை விட எந்தவகையிலோ மேம்பட்ட நிலையில் நிலமைகள் இல்லை. அமைதி நிலையோ, சமாதானமோ வந்துவிடவும் இல்லை. இதுபற்றி ஐரோப்பிய அரசுகளுக்கு தொயாமலுமல்ல. இத்தகைய நிலையில் இவ்வாறு ஏன் தமிழர்களை திருப்பி அனுப்புகின்றன?

அதில் நாம் புரிந்து கொள்ள வேண்டிய பல விடயங்கள் உண்டு. ஐரோப்பிய நாடுகள் தமது நலன்களை முதன்மையாகக் கருதி பாதுகாப்புக்களைத் தேடம் நிலையே முதன்மையானதாகும். அடுத்து கட்சி நலன்கள். எழுந்து வரும் நிறவாத பூதத்திற்கு தீனியிடுவதற்காக கட்சிகள் வெளிநாட்டவருக்கு எதிரான கடும் போக்கை எடுப்பதோடு, எடுப்பதாக காட்டிக்கொள்கின்றன. இதன் மூலம் தமது கட்சியின் செல்வாக்கை நிலை நறுத்திக் கொள்கின்றன.

ஐநா அகதிகள் உயர் ஸ்தானிகமும் ஐநாசபையும் ஐரோப்பிய, அமெரிக்க நலன்களுக்காக செயற்படும் கைப்பொம்மை எனும் குற்றச்சாட்டு இதன் மூலம் உண்மையென்று நிரூபனமாகிறது. ஐரோப்பிய பிராந்தியம் சார்ந்ததாக பொஸ்னியா இருப்பதால் பொஸ்னிய அகதிகளுக்கு ஒரு நிலைப்பாடும், தமிழ் அகதிகளுக்கு வேறு ஒரு நிலைப்பாடும் எடுக்கப்படுவது இரட்டை நிலையையே காட்டுவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தனது கண்டனத்தில் தெரிவித்துள்ளது. நாம் வேண்டுவது ஈழத்தமிழ் அகதிகள் ஒருவரையும் இலங்யையில் தமிழர்களுக்கு உண்மையான அரசியல் தீர்வும், உண்மையான அமைதியும் வரும்வரை திருப்பி அனுப்பப்படக்கூடாது.

அடுத்து ஐரோப்பிய நாடுகள் தமது நாட்டிற்கு மனிதத்தன்மைக்கான விளம்பரமாக 'அகதிகள் அரசியல் தஞ்சம்' விடயமாக இல்லாமல் உண்மையான மனிதத்துவ நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். அல்லது போனால் அரசியல் தஞ்சம் கோருபவர்கள் பலத்த போர்த்துயரத்தம், பொருளாதார துயரத்திடையே இங்கு அரசியல் தஞ்சம் கோரி பின்னர் நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படும் போது கடுமையான உளவியல் ரீதியாகவும பாதிக்கப்படுகின்றனர். இத்தகைய நிலைப்பாட்டை தடுப்பதற்கு இந்நாடுகள் தமது விளம்பரத்துக்காகவல்லாது உண்மையான அரசியல் தஞ்ச நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டும்

அத்தோடு எமது தரப்பில் எமது போராட்டத்தின் நியாயப்பாட்டை வெளிப்படுத்தும் சரியான திசைவழியிலான அரசியல் போராட்டங்கள் ஈழத்தில் உருவாகாத வரையில் ஈழப்போராட்டத்திற்கும், அகதிகள் பிரச்சனைக்கும் போதிய வலுவையும் ஆதரவையும் எம்மால் திரட்டமுடியாது. இதுவே கசப்பான யதார்த்தமாகும்.

சுவடுகள் 77

6 5 1997





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தேசம் எது?


நான் எங்கெங்கு போனாலும்
அங்கங்கு கேட்கிறார்கள்
எனது தேசம் எது?


இடை நடுவே இழந்து போன
எனது ஞாபகத்தில், அதற்கு பெயரேதும் கிடையாது.
இருப்பினும் கட
அதற்கு ஒரு அர்த்தமும் கிடையாது தான்!
ஆயினும்
என்னால் அடையாளம் கூற முடியும்.

எந்தப்பள்ளி ஆசிரியனும்
மாணவரின் கண்களைத்தோண்டி
வாயில் போட்டு மென்று மகிழ்கின்றானோ,
எந்த வைத்திய நிபுணனும்
நோயாளியின்
பச்சை இரத்தத்தை குடித்து போதைகொள்கிறானோ,
எந்த கசாப்புக் கடைக்காரனும்
தன் குழந்தையின்
தொடையை அரிந்து புசித்து மகிழ்கின்றானோ,
எந்த பாதுகாப்பு தளபதியும்
தன் தோட்டாக்களை உடைத்து
கந்தகத்தூளை மூக்குப்பொடியாக்கி மகிழ்கின்றானோ,
எந்த மதத்துறவியும்
மெய்மறந்து தியானிக்கும் மக்கள் கூட்டத்துள்
வெடிகுண்டுகளை வெடிக்கப்பண்ணி
போதிநிலை அடையத்துடிக்கின்றானோ,
அதுவே எனது தேசம்!

இப்போது சொல்லும்
எனது தேசம் எது?

• சின்னா





## செத்து நடந்த நான்

வண்டிற்பாதையால்
வளைந்தோடும்
மழை நீரில்
அடையும் கஞ்சல்போல்
எனது கனவுகள்
அள்ளுண்டு சென்றன
ஒரு
இரவு வேளையில்.

வார்த்தைகள்
கசிந்தன, காய்ந்தன.
மாட்டுக் குளம்பின்

மிதிபாட்டில்
நொறுங்கிய மண்ணாங்கட்டிபோல்
வார்த்தைகளை
இழந்தவென் உணர்வுகள்
உதிர்ந்து சிதறின.

நான் மட்டும்
செத்துப்போன பின்னும்
சாகாதவனாய்
நடந்தேன்
ஈரத் தெரு நீளம்.

• தமயந்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழ்

# தேசிய விடுதலை யுத்தம்

## -ஒரு மீள்பார்வை

**தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தில் சித்திரை 19-1995, 96**

1995 சித்திரை 19-ல் யுத்த நிறுத்தம் உடைந்தது. புலிகளின் யுத்த வரலாற்றில் முதன் முதலாக தோற்றுவிக்கப்பட்ட கடற்புலிகள், திருகோணமலை துறைமுகத்தில் கடற்படைக் கப்பல்களை தகர்த்தனர். பேச்சு வார்த்தை ஊடாக புலிகளின் பங்கு வகித்தல் மூலம் யாழை சீரமைக்கும் எல்லா நடவடிக்கைகளும் அரசால் நிறுத்தப்பட்டது. அமுலுக்கு வர இருந்த பொருளாதார தடை, மீன் பிடித்தடை நீக்கம் வந்தது - போனது. அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் வேகமடைந்தன. அரசு யாழ்மீது பகுதி வாரியான இராணுவ நடவடிக்கையை தொடக்கியது. புலிகளை போர் வெறியர்கள் என்றது. ஒப்பரேசன் முன்னேறிப்பாய்தல் - சூரிய ஒளி மூலம் வலிகாமத்தையும், யாழ் நகரையும் கைப்பற்றியது. புலிகள் தென்மாராட்சிக்கும் பெருநிலப்பரப்புக்கும் பின் வாங்கினர். இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்தனர். 95 மார்கழி வரை புலிக் கொடி பறந்த யாழ் கோட்டையில், சிங்கக் கொடியை ஏற்றியது சிறீலங்கா இராணுவம். அரசும், இன மாதவாதிகளும் கூடிக் கொண்டாடினர்.

1996 சித்திரை 19-ல் ஒரு வருடப் போரின் நினைவு, புலிகளின் கடற்படை கரும்புலிகளின் ஓராண்டு நிறைவு. அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்ய 12.04-96-இல் கடற்புலிகளின் கொழும்பு துறைமுக தாக்குதல் பெருந்தோல்வியில் முடிந்தது. (துறைமுகத்தில் இஸ்ரேலில் இருந்து வாங்கப்பட்ட குண்டு வீச்சு விமானம் கப்பலில் இருந்தது. புலிகளுக்கு முன் கூட்டி தெரியுமா?) அரசு படைகள் 19-இல் தென்மாராட்சி மீதும், கிளாலியை கைப்பற்றும் சூரிய ஒளி 2 தொடக்கியது. புலிகள் சூரிய ஒளி 1-க்கு காட்டியளவு எதிர்ப்பு கூட காட்டாது பின் வாங்கினர். அரசு படைகள் தொடர்ந்து வடமாராட்சி மீது தாக்குலிலும், கைப்பற்றிய பகுதிகளில் தேடுதல் வேட்டையிலும் இறங்கியுள்ளனர்.

புலிகளுக்கு பொதுமன்னிப்பு அளிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சரண் அடைபவர்கள் முதலில் ஆயுதங்களை கீழே போட வேண்டும். 13 வருட யுத்த வாழ்வை துறக்க வேண்டும். பாதுகாப்பு படையின் சிறப்பு முகாம்களில் சில மாதங்கள் இருத்தல், கைத்தொழில் கல்வி பயிற்சிகளுக்கு அரசு ஊக்குவிக்கும் (மார்கழி 95-க்கு பின் 40-க்கும் மேலான புலிகள் சரண் அடைந்துள்ளதாகவும் அவர்கள் இப்போது யாழில் அரசபடை மேற் கொள்ளும் "சல்லடை போடும் தேடுதலில்" ஆள்காட்டிகளாக பயன்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது. சிறீலங்கா அரசு நேரடியாகவும், அரசு சாரா நிறுவனங்கள் மூலமும் யாழை மறுசீரமைக்க - புனரமைக்க தொடங்கியுள்ளது. பொருளாதார தடைகள் ஓரளவு நீக்கப்பட்டுள்ளது. 23 பஸ்களை (இ.போ.ச) யாழில் இயக்குகிறது. யாழ் பொது மருத்துவமனை 40 டொக்ரர்களின் உதவியுடன் இயக்கப்படுகிறது.

1995 சூரிய ஒளி 1 நடவடிக்கையின் போது யாழை விட்டு வெளியேறிய இலட்சக்கணக்கான அகதிகளையும், யாழை விட்டு செல்ல ஊக்குவிக்கப்பட்ட - அழைத்து செல்லப்பட்ட ஆயிரக்கணக்கான அகதிகளை காட்டி புலிகள், அரசு இராணுவரீதியில் யாழை வென்றது, அரசியல் ரீதியில் தோற்றது. மக்கள் எல்லாம் புலிகளின் பக்கம் இருப்பதாக பிரச்சாரப்படுத்தினர்.

1996- சூரிய ஒளி 2-க்கு பின் அகதிகளாக சென்ற மக்களில் ஒரு பகுதி மீண்டும் தமது வாழ்விடங்களுக்கு திரும்ப தொடங்கியுள்ளனர். (இதை தடுத்த புலிகளுக்கும் - மக்களுக்கும் கைகலப்பும் நடந்துள்ளது.) அகதிகள் தங்கியுள்ள இடங்களில் உணவு, இருப்பிட வசதி, மருத்துவம் போன்ற அடிப்படை தேவைகள் தீர்க்கப்படாததால்" உணவு இல்லை என்றாலும் பச்சை தண்ணீர் குடித்து விட்டு சொந்த வீட்டில் உறங்கலாம்" அகதிகளின் இந்த உளதிருப்தி விரைவாக யாழ்போக தூண்டுகிறது. அரசாங்கம் தனது இராணுவ நடவடிக்கையின் அழிவுகளை மறைக்கவும். புலிகள் வேறு - மக்கள் வேறு மக்கள் அரசு பக்கம் இருப்பதாக காட்டவும் புலிகளை அரசியல் ரீதியாகவும் தோற்கடித்து விட்டோம் என பிரச்சாரப்படுத்துகிறது. அகதிகள் யாழ் திரும்ப பல உதவித் திட்டங்களை அறிவித்துள்ளது. அரசு யாழில் சிவில் சமூக கட்டுப்பாட்டை தனதாக்குவதே உடனடி வேலையாக செய்கிறது. பழைய அரசுப் பணியாளர்களை (5 ஆண்டுகளாக புலிகளின் சிவில் சமூக நிறுவனங்களில் வேலை செய்து கொண்டு அரசிடம் சம்பளம் வாங்கியவர்கள் விமானம் மூலம் யாழ் கொண்டு வருகிறது.) முதல் கட்டமாக வவுனியாவில் அகதி நிலையில் இருந்த 100 பேரை தூக்கி வந்து நிறுத்தியுள்ளது. அரசும் சரி புலிகளும் சரி தங்களின் உண்மையான தோல்விகளை மறைக்க தாங்கள் தாங்களே வெற்றி பெற்றதாக உலகுக்கு காட்ட மக்களை மந்தைகளாக பாவிக்கின்றனர்.

புலிகள் தங்களின் பின்வாங்குதலுக்காக தந்திரோபாயமாக சில ஆயிரம் மக்களை கூட்டிச் சென்றிருந்தால், மீண்டும் யாழ் திரும்ப தயாரான மக்களை தடுத்திருக்கக்கூடாது. யாழில் மக்கள் பரந்து வாழ்வதே எதிரிக்கு எதிராக கொரில்லாக்கள் இயங்க நிபந்தனையாகவுள்ளது. 95-96 ஓர் ஆண்டில் எத்தனை மாற்றம், ஏமாற்றம்.


www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைக்கான ஆயுதப் போராட்டம். யுத்த
மாக மாறியது முதல் எதிரியின் தேசிய இன ஒடுக்கு முறையுத்தம் அதற்கு
எதிரான நமது தேசிய இன விடுதலை யுத்தம் 13 ஆண்டுகள் நடந்து கொண்டி
ருக்கிறது. இவ்விடுதலை யுத்தம் 1987கள் வரைU.N.P. தலைமையிலான அரசுக்
கும், படைகளுக்கும் எதிராக பிரதானமாக 5 போராளி இயக்கங்களின் இரா
ணுவ நடவடிக்கைகள் அடங்கிய விடுதலை யுத்தமாக இருந்தது.
1987-1990-க்கு இடைப்பட்ட காலம் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக புலிகள்
தலைமை தாங்கிய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தமாகவும், 91-94-ல் மீண்டும்
U.N.P. அரசுக்கும், பின்னர் 95 முதல் இன்று வரை S.L.F.P. தலைமையிலான
மக்கள் கூட்டணிக்கும், சிறீலங்கா படைகளுக்கும் எதிரான தேசிய விடுதலை
யுத்தமாகவும் நடக்கிறது. மூன்று தனித்தன்மை வாய்ந்த சட்டங்களை தமிழீழ
தேசிய விடுதலை யுத்தம் சந்தித்துள்ளது. கடைசி இரண்டு கட்டங்களிலும்
புலிகள் மட்டுமே யுத்தத்தின் தனிச் சக்தியாகவுள்ளனர்.

யாழ், தேசிய விடுதலை யுத்தத்தின் வளர்ச்சியில் கடந்த 5 ஆண்டுகளாக
புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியாக, எதிரியை முடமாக்கல் நிலைக்கு தள்ளிய
பிரதேசமாக இருந்தது. எதிரியின் ஒப்பறேசன் தண்டர் போல், முன்னேறிப்
பாய்தல், சூரிய ஒளி இராணுவ நடவடிக்கைக்கு பின் யாழ் மீண்டும் அரசின்
கட்டுப்பாட்டு பகுதியாக மாறியுள்ளது. புலிகளை தற்காப்பு கட்டத்துக்குதள்
விய பிரதேசமாகியுள்ளது. புலிகள் எதிரிக்கு எதிராக புலிப்பாய்ச்சல், தவ
ளைப்பாய்ச்சல் மீண்டும் தாக்கும். இராணுவ நடவடிக்கைகள் மூலம் எதி
ரியை ஓரளவு நிலை குலையச் செய்தனர். இராணுவ நடவடிக்கைகள் மூலம்
எதிரியை ஓரளவு நிலை குலையச் செய்தனர். இறுதியில் புலிகளே தமது
கட்டுப்பாட்டு பகுதியை விட்டு பின் வாங்கியுள்ளனர் என்பதே உண்மை.

அரசு தனது இராணுவ வெற்றிக்கு இராணுவத்தின் போர்த்திறமையை
யும் கூடவே, தமிழ் மக்கள் புலிப்பயங்கரவாதத்தை நிராகரித்து அமைதியை
- அரசியல் தீர்வை விரும்புகிறார்கள் என்கிறது. இனவாத படைகளின் இரா
ணுவ வெறியை மெச்சுவதுடன் ஊக்குவிக்கிறது. தேசிய இனப் பிரச்சனைக்கு
அரசியல் தீர்வு எனக்கூறி மோசடி அதிகார பரவலாக்க திட்டத்துள் புலிகளைக்
கூட முழ்கடிக்க முயலும் சர்வதேச பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இராணுவதளபதி ஜெரி. டி. சில்வாவுக்கு அடுத்து 14-வது இராணுவ
தளபதியாக இம்மாதம் பொறுப்பு ஏற்றுள்ள ஜெனரல் றோகான் தலுவத்தை
''புலிகளை பலவீனமடையச் செய்து அரசியல் தீர்வுக்கு அழைத்து வருவதே
எமது நோக்கம். படைத்தளபதி என்ற முறையில் நான் ஒரு பக்க கடமையை
நிறைவேற்றுவேன்'' என கூறியுள்ளார்.

புலிகள் பலவீனப்பட்டுள்ளதை கண்டு ஒரு புறம் உள்ளூர குதுகலிக்
கின்ற தமிழ்த்துரோக தலைமைகள் மறுபக்கம் புலிகள் மேலும் மேலும் பலவீ
னப்பட்டால் அரசு தங்களைக் கூட கண்டு கொள்ளாது போய்விடுமோ என்ற
அச்சத்தில் புலிகள் வரையறுக்கப்பட்டு பலவீனப்பட வேண்டும் எனவும்
அவர்களையும் அரசியல் பேச்சில் கலக்க வைக்க வேண்டும் என்றும் கருது
கின்றன. அரசு தன்னால் முடிந்த வரை புலிகளை பலவீனப்படுத்துகிறது
''மோசடி தீர்வு திட்டத்துள்'' புலிகளையும் கலக்க வைத்து தேசிய இனப்பிரச்ச
னையை 87-களில் திசை திருப்பியது போன்று 97-களில் முழுவதுமாக திசை
திருப்ப முயல்கின்றது.

புலிகள் தங்கள் பின் வாங்கலுக்கு - தோல்விக்கு காரணமாக அரசு படை
களை எதிர்த்து நின்று பிடிக்காததற்கு காரணமாக மீண்டும் யாழை கைப்பற்ற
தேவையாக கனரக ஆயுதங்கள் (Artillery) வேண்டும். அதற்கு பணம் வேண்
டும். போர் புரிய மனிதபலம் வேண்டும் என்று மட்டும் முன் வைக்கின்றனர்.

இன்று வரையிலான தேசிய விடுதலை யுத்தத்தில் புலிகளின் யுத்த பங்க
ளிப்பே பிரதானமானதும் தொடர்ச்சியானதும் ஆகும். இனியும் எவ்வளவு
தூரம்? எவ்வளவு காலம்? தமது யுத்த பங்களிப்பை தொடர்வர்? மீண்டும்
யாழைப் பிடிப்பார்களா? இல்லையா? கிளிநொச்சியை மையமாக கொண்டு
''தென் தமிழீழத்தை'' உருவாக்குவார்களா? முல்லைதீவில் தமிழீழ வைப்ப
கத்தை வங்கியை தொடக்கி விட்டார்களே!

தமிழீழ தேசம் சுதந்திரம் அடைய வேண்டும், மக்கள் விடுதலை பெற
வேண்டும். தேசிய விடுதலைப் போராட்டமும், போரும் முன்னேற வேண்
டும். இதற்கு தடையாகவுள்ள அரசியல் - இராணுவத்தடைகளை, பலவீனங்
களை கண்டு பிடித்து களைய விரும்புபவர்கள் முகங் கொடுக்க வேண்டிய
கேள்வி? யாழ்ப்பாணத்தை புலிகள் இழந்ததற்கான அடிப்படையான அரசி
யல்சார் இராணுவக் காரணிகள் என்ன? தேசிய விடுதலை யுத்தம் மூலோபாய
ரீதியாக எந்த கட்டத்தில் இருக்கிறது? தேசிய விடுதலை யுத்தம் வளர்ந்துள்
ளதா? வீழ்ச்சி நிலையில் உள்ளதா? என்பதே மையமான பிரச்சினை. யுத்தம்
வளர வேண்டும். இந்த யுத்தத்துக்காக இது நாள் வரை சிந்திய ரத்தமும், எல்லா
இழப்புகளும் வீண்போகக் கூடாது தேசிய விடுதலையும், யுத்தமும் காட்டிக்
கொடுக்கப்படுவதை, திசை திருப்பப்படுவதை அனுமதிக்கக் கூடாது என
விரும்பும் உண்மையான தமிழீழ தேசபக்தர்கள் புரட்சியாளர்கள் சனநாயவா
திகள், ஆதரவாளர்கள் எல்லாரும் சிந்திக்க வேண்டிய தருணம் இதுதான்.

## தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் மூலோபாய ரீதியில் எந்த கட்டத்திலுள்ளது. யாழ் தோல்வி யுத்தத்தின் வளர்ச்சியா? தேக்கமா?

தமிழீழ தேசிய விடுதலைப் போர், வழமையாக பலராலும் 1ம், 2ம், 3ம்,
4ம் கட்ட ஈழப் போர் என எழுதப்படுகிறது. தேசிய விடுதலை யுத்தம் இரா
ணுவ அர்த்தத்தில் எந்த கட்டம் என்பதை புரிய வேண்டுமானால் முதலில்
தேசிய விடுதலை யுத்தத்தின் மூலோபாய ரீதியான மூன்று கட்டங்களை
பார்ப்போம்.

1. எதிரியின் மூலோபாய ரீதியான தாக்குதலும், எமது மூலோபாய ரீதியான
தற்காப்பு கால கட்டம்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

2. எதிரியின் மூலோபாய ரீதியான பாதுகாப்பினதும், எமது எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பின் கால கட்டம்.

3. எமது மூலோபாய ரீதியான எதிர்த் தாக்குதலினதும், எதிரியின் மூலோபாய ரீதியான பின் வாங்குதல் கால கட்டம்.

(நீண்ட கால யுத்தம் - மா. சே.துங்)

தமிழீழ மக்களின் தேசிய விடுதலை யுத்தமானது. தமிழீழ பகுதியை ஒரு முழுமையான யுத்த நிலைமையாக எடுப்பதில் இருந்து உருவாகிறது... இதிலிருந்து நான் இராணுவ மூலோபாயம் வகுக்கப்பட வேண்டும். ஒரு முழுமையான யுத்த நிலைமை பற்றிய விஞ்ஞானமே இராணுவரீதியான மூலோபாயமாகும். 1984-கள் வரை சிறிலங்கா அரசுப்படைகள் (எதிரி) மூலோபாய ரீதியான தாக்குதலிலும், புலிகள் உட்பட போராளி இயக்கங்கள் எல்லாம் மூலோபாய ரீதியான தற்காப்பு நிலையும் என்ற முதலாவது கட்டத்தில் தேசிய விடுதலை யுத்தம் இருந்தது.

போராளிகள் தற்காப்பு நிலையில் இருந்து கொண்டே எதிரி மீது தந்திரோபாய ரீதியான தாக்குதல்களையும், போர் நடவடிக்கைகளும் செய்தனர். எதிரி தனது மூலோபாய ரீதியான தாக்குதல் நிலையில் இருந்து தேடுதல் வேட்டைகளை, சுற்றி வளைப்புக்களை நடத்தினான், காத்திருந்து சில போர் நடவடிக்கைகளை கூட செய்தான் ஆனால் போராளிகளின் மேலோங்கிய தற்பாதுகாப்பு நடவடிக்கைகளும் தந்திரோபாயமான பரந்தளவிலான கொரில்லா தாக்குதல்களும், பொலிஸ் நிலையங்கள் மேலான தாக்குதல் வெற்றிகளும் வளர்ந்தது. சில தாக்குதல்கள் தோல்வி கண்ட போதும், போராளிகளின் இராணுவ செயல்பாடுகள் கையோங்கி இருந்தது. இனக் கலவரங்களால், சிறைப்படுகொலைகளால், எதிரியின் இராணுவ நடவடிக்கைகளால் உள்நாட்டிலும் - வெளிநாட்டிலும் போராளிகளின் பக்கம் பலம் வளர்ந்து கொண்டிருந்தது. போராளிகளின் தொடர்ச்சியான கொரில்லா தாக்குதல்களால் எதிரி தனது எல்லா அன்றாட நடவடிக்கைகளிலும் அச்சத்துடன் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டான். (பொலிசு நிலையம், இராணுவ முகாம், ரெயில் போக்குவரத்து, நடமாட்டத்தில், உணவு குடிநீர் போக்குவரத்தில்... என கொரில்லா தாக்குதலை முகங்கொண்டான். தவிர்க்க முடியாது பின்வாங்குவதிலும், தற்காப்பு நடவடிக்கையிலும் இறங்கினான் முதல் கட்டத்தில் யுத்தத்தில் ஏற்பட்ட இவ் எதிர்மறை வளர்ச்சி 1985-களில் தமிழீழ விடுதலை யுத்தம், மூலோபாய ரீதியாக இரண்டாவது கட்டத்துள் காலடி எடுத்து வைத்தது.

எதிரி மூலோபாய ரீதியான பாதுகாப்பிற்கும், போராளிகள் எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பின் கால கட்டத்துள் நுழைந்தனர். முதலாவது கட்டத்தில் எதிரிக்கு எதிராக செய்த இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருந்தது. அதே வேளை 85-களில் போராளி இயக்கங்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல், இயக்க உள்மோதல், இந்தியாவின் இராணுவ ஊக்குவிப்பில் இந்திராகாந்தி இறப்புக்கு பின் ஏற்பட்ட மாற்றம். மற்ற இயக்கங்கள் மேல் புலிகளின் தடைவிதிப்பு. இவை போராளிகள் மத்தியில், உள்நாட்டு - வெளிநாட்டு மக்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கம், அனைத்தாலும் போராளிகளின் இராணுவ ரீதியான ஒட்டு மொத்த பலத்தில் ஏற்பட்ட சிதறல்களும் - வீழ்ச்சிகளும் (போராளி இயக்கங்கள் எதிரிக்கு எதிராக கூட்டு இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டதில்லை) யுத்தத்தின் வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆனால் இவற்றுக்கு மத்தியிலும் யாழில் எதிரி பெரிய முகாம்களை விட்டு வெளியில் வந்து நடமாடுவதை தடுப்பதில் எல்லாப் போராளி இயக்கங்களும் தமது கொரில்லாப் போர் முறையின் முழுச் சக்தியையும் பயன்படுத்தினார்கள்.

இராணுவரீதியில் நோக்குகையில் விடுதலை யுத்தத்துக்கு இரண்டு வடிவங்கள் உண்டு ஒன்று கொரில்லா யுத்தம். இரண்டாவது கிரமமான யுத்தம். இந்த இரண்டும் ஏக காலத்தில் உருவாகி வளர்வதில்லை. நீண்ட கால மக்கள் யுத்த பாதையின் ஆரம்ப வடிவம் கொரில்லா யுத்தம். ஆரம்ப வடிவமான கொரில்லா யுத்தம் தொடக்கத்தில் பிரதான போராட்ட வடிவமாகவும் இருக்கிறது. இது படிப்படியாக வளர்ந்து கிரமமான யுத்தமாக மாற்றமடைய வேண்டும் கிரமமான யுத்தம் போராட்டத்தின் யுத்தத்தின் பிரதான வடிவமாக மாறிய பின்னரும் கொரில்லா யுத்தம் அதன் துணை அம்சமாக தொடர்ந்து நீடிக்கும். இத்தகைய மாற்றம் யுத்தத்தின் மூலோபாய ரீதியான வளர்ச்சி கட்டங்களுடன் பிரிக்க முடியாதபடி ஒன்றை ஒன்று சார்ந்தும் யுத்தம் வளர்கின்றது. விடுதலை யுத்தத்தின் இந்த இரண்டு வடிவங்களும், இரண்டு விதமான படைவடிவங்களை ஆயுத வகைப்படுத்தல், படை வியூகங்கள்(Formation) யுத்த நடத்தைகள் என இன்ன பிற வேறுபாடுகளை கொண்டது.

தமிழீழ போராளிகள் கொரில்லா யுத்த முறையிலிருந்து கிரமமான யுத்த முறைக்கு வளரவில்லை. அல்லது அதன் ஆரம்ப வடிவங்களை மட்டும் தொட்டிருந்தனர். மூலோபாய ரீதியான எதிர் தாக்குதலுக்கான தமது தயாரிப்புக்கான 2-வது கட்டத்திலும் சிறு இராணுவ முகாம்கள், பெரிய பொலிஸ் நிலையங்கள் மீது போராளிகள் தாக்குதல்களை நடத்தினர். கிழக்கிலும், வடக்கின் எல்லை மாவட்டங்களிலும் கொரில்லா தாக்குதல்களை தற்காப்பில் இருந்து கொண்டு நடத்தினர். சிலதில் வென்றனர். எதிரி தான் தாக்குதல் கட்டத்தில் இருந்த போது உருவாக்கிய மினி முகாம்களை, பொலிஸ் நிலையங்களை தந்திரோபாய ரீதியாக பின் வாங்கினான். பெரிய இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்களுடன் அவற்றை இணைத்தான். போராளிகள் எதிரி மூலோபாய ரீதியாக பின் வாங்க தொடங்கி விட்டதாக கருதினர். தாங்கள் மூன்றாவது, கட்டத்தில் இருப்பதாக பெருமிதப்பட்டனர். அதனால் தான் வரும் 'தீபாவளிக்கு' - வரும் 'தைப் பொங்கலுக்கு' தமிழீழம் கிடைத்து விடும் என பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

இப்பெரிய இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் மீது தொடுத்த தாக்குதல்கள் எதுவும் வெற்றி பெறவில்லை என்பதும், சிறு அளவிலான தாக்கங்களை எதிரிக்கு ஏற்படுத்தினர் என்பதும் உண்மை. எதிரி தனது பெரிய முகாம்களின் கண்காணிப்பு பகுதியை சுருக்கி கொண்டான். ஒரு கிரமமான யுத்த முறைக்கு வளராமல், கிரமமானயுத்த (முறையில் யுத்த





www.tamilarangam.net

மல் இப் பெரிய முகாம்கள் மீதான தாக்குதலில் வெற்றி பெற முடியாது. போராளிகள் கிரமமான யுத்த வடிவ பயிற்சி கூட இல்லாமல் இருந்தனர். போராளிகள் யுத்த கல்வி ஊடாகவும், தோல்விகளின் அனுபவத்தின் வழியாக வும் கிரமமான யுத்த முறையின் தேவையை புரிந்து கொண்டனர் ஆனால் அவர்களது சொந்த வர்க்க அரசியல் அமைப்பு பலவீனங்கள் இவ் யுத்த முறைக்கு வளர அனுமதிக்கவில்லை - அவகாசம் கொடுக்கவில்லை.

பதிலுக்கு கொரில்லாயுத்த வடிவத்துள் நின்றபடியே கொரில்லா யுத்த முறையில் புதுப்புது தாக்குதல் முறைகளை நவீன ஆயுதங்களை தேடி ஓடச் செய்தனர். காவல் அரண்களை தாக்க தற்கொலைப் போராளிகள், வெடி நிரப் பிய லொறிகளை ஓட்டிச் சென்று மோத விடுவது. பெருஞ்சேதத்தை விளை வித்து கொரில்லா தாக்குதல் அணி உள்புகுவது என எதிரிக்கு எதிராக தமது இராணுவ நடவடிக்கைகளை எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பு கட்டத்தில் இருந்து கொண்டு தந்திரோபாய ரீதியான தாக்குதல்களுடன் நிறுத்திக் கொண் டனர். போராளிகளின் தாக்குதல்கள் எதுவும் எதிரியை மேலும் பலமான தற்காப்புக்குள் தள்ளிய போதும் எதிரியை சீர் குலைக்கவும், நிர்மூலமாக்கவும் முடியவில்லை. நாட்டை, யாழை யார் ஆழ்வது என்ற போட்டியில் ஒரு இயக்கம் மற்ற இயக்கத்தை எப்படி அழிப்பது. காட்டிக் கொடுப்பது என துடித்தனர். புலிகள் எதிரிக்கு எதிரான தமது இராணுவ நடவடிக்கைகளை செய்து கொண்டே மற்ற இயக்கங்களை முழுவதுமாக தடை செய்ததுடன், 1987 தையில் யாழ் மீதான சிவில் சமூக கட்டுப்பாடு புலிகளின் கட்டுக்குள் வருவதாக அறிவித்தனர்.

கொரில்லா யுத்தத்தின் நோக்கமும், அதன் சக்தியும் எதிரியின் சுதந்திர மன நடமாட்டங்களை கட்டுப்படுத்துவதும், எதிரிக்கு கிலியை ஏற்படுத்துவ தும், நடமாட்டத்திலுள்ள (வாகனம், நடை, ரோந்துப்படகு) சிறுபடைப்பிரி வுகளை (செக்சன், பிளட்டூன்) சீர்குலைத்து அழிப்பதும் ஆகும். கிரமமான யுத்த முறையால் மட்டுமே நடமாட்டத்திலுள்ள பெரிய படைப்பிரிவுகளை, எதிரியின் முகாம்களை எதிர் தாக்குதல் மூலம் அழித்தொழிக்கவும், நிர்மூல மாக்கி துரத்தவும், வேண்டுமானால் நமது கட்டுப்பாட்டுள் தற்காலிகமா கவோ - நிரந்தரமாகவோ அவ்முகாம்களை வைத்திருக்கவும் முடியும்.

போராளி இயக்கங்களின் இராணுவ ரீதியான பலவீனம். மற்றும் அரசி யல் அமைப்பு பலவீனங்களை எதிரி சரியாக ஆய்வு செய்தான் புலிகள் எல்லா இயக்கங்களையும் தடை செய்த வேளை (எதிரி செய்ய வேண்டிய வேலை களை புலிகளே செய்தனர்) எதிரி மூலோபாய ரீதியான பாதுகாப்பு நிலையில் இருந்தபடி, கிழக்கை தனது சுதந்திரமான - எச்சரிக்கையுடன் கூடிய நடமாட்ட பகுதியாக மாற்றுவதில் வெற்றி கண்டான். வடக்கில் எல்லை புறத்தில் தந்த ரோபாய ரீதியாக தாக்கவும் - தேவையானால் பின்வாங்கவும் செய்தான். போர் நடவடிக்கைகளிலும் கூட இறங்கினான். 87-களின் தொடக்கத்தில் பாதுகாப் பில் இருந்து கொண்டு எதிரியின் எதிர் தாக்குதல் தொடங்கியது. முகாமை விட்டு வெளியே வரும் நடவடிக்கைகள் வெற்றியளிப்பதை பார்த்தான். விமா னக் குண்டு வீச்சு, பீரங்கி தாக்குதல், செல் தாக்குதல் மூலம் பெரும் அழிவு இன்றி தரைப்படை முன்னேற முடியும் என்று கணிப்பு செய்தான். இலக்கற்ற மற்றும் இலக்குதவறும் குண்டு வீச்சால் மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டா லும் குறுகிய கால இராணுவ நடவடிக்கை மூலம் போராளிகளை துரத்திச் செல்ல முடிவு செய்தான். "ஒப்பரேசன் லிபரேசன்" வடமாராட்சி மீது தொடங்கியது. புலிகளின் கழுத்தை நெரிக்கும் அளவுக்கு எதிரி முன்னேறி னான்.

இராணுவ நடவடிக்கைக்கு எதிரான கண்டனக் குரல்கள் உலகளவில் வலுவடைந்தது. இந்தியாவின் இலங்கை மீதான தலையீட்டுக் கொள்கைக்கு, (தமிழீழ மக்களுக்கு உதவுவது என்ற பெயரில்) கடைசிச் சந்தர்ப்பம் என்ப தால் இந்திய விமானப்படையின் "ஒப்பரேசன் பூ மாலை" உணவுப் பொட் டல போடுகையுடன் யுத்தத்தின் மொத்த அரசியல் இராணுவ நிலமையும் மாறியது. தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் மூலோபாய ரீதியாக இரண்டாவது கட்டத்துள் நுழைந்தது. 85,86 இரண்டு ஆண்டுகளில் மீண்டும் முதலாவது கட்டத்துக்கு திரும்பியது. போராளிகள் மூலோபாய ரீதியான தற்காப்பு கட்டத்துக் கும் எதிரி மூலோபாய ரீதியான தாக்குதல் கட்டத்துக்கும் மீண்டும் வந்தனர். இந்திய தலையீடு மொத்த யுத்த சூழ்நிலையிலும் பெரிய மாற்றத்தை உண்டு பண்ணியது.

## இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தம்

1983-கறுப்பு யூலை நாட்டில் ஏற்படுத்திய மாற்றங்கள் போல் 1987 யூலை




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
www.tamilarangam.net

**இந்திய - இலங்கை ஒப்பந்தம், இந்திய ஆக்கிரமிப்பு படை வருகை, (IPKF) போராளிகளின் ஆயுத ஒப்படைப்பு, இடைக்கால அரசு உருவாக்கம் என பல நடந்தேறியது. இடைக்கால அரசு அதிகாரம் ஆயுத ஒப்படைப்பு இவற்றில் எழுந்த முரண்பாட்டால் இந்திய படைக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்தம் தொடங்கியது.**

தமிழீழ மக்கள் தமது தேசிய விடுதலைக்காக நடத்திக் கொண்டிருந்த யுத்தம் மூலோபாய ரீதியில் வளர்ந்ததா? வீழ்ந்ததா என்பதோ, அல்லது புலிகளின் அழிவை இந்தியரசின் தலையீடு தானே காப்பாற்றியது என்பதல்ல இங்கு பிரச்சினை. தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் வளர்வதும் - தேய்வதும், மீண்டும் வளர்வதும் ஏன் ஒரு வேளை யுத்தம் கைவிடப்பட்டு அரசுடன் சமரசம் அடைவதும் அல்லது இறுதி வெற்றி வரை யுத்தம் தொடர்வதும் தேசிய இன விடுதலை யுத்தத்துக்கு தலைமை தாங்கும் வர்க்கங்களின் அரசியல் இராணுவ கொள்கைகளை பொறுத்த விடயம். அது நம்மவர்களால் மட்டுமே தீர்மானிக்கப்பட வேண்டும்.

தேசிய இனப் பிரச்சனைக்கு முழுமையான அரசியல் தீர்வை முன் வைக்காத, திம்புக் கோரிக்கைகளை கூட ஏற்காத, போராளி இயக்கங்களை மதிக்காத இந்திய இலங்கை அரசுகள் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் பொறுப்பை இந்திய இராணுவம் எடுத்துக் கொண்டது.

தமிழீழ மக்கள் எந்த அரசியல் கோரிக்கைகளுக்காக போராடுகிறார்களோ. எதை அடைய யுத்தம் செய்கிறார்களோ. அவற்றை ஏற்காது மதிப்பளிக்காது. துரோகம் செய்யும் அரசியல் - இராணுவ தீர்வுகளை (போராளிகளில் பெரும் பகுதி ஏற்றுக் கொண்டாலும்) ஒப்பந்தங்களை நிராகரிக்கின்ற உரிமை தமிழீழ மக்களுக்கு, அவர்களது நலன்களுக்காக போராடுகின்ற இயக்கங்களுக்கு உண்டு. அதையும் மீறி ஏமாற்று அரசியல் தீர்வை, ஒப்பந்தத்தை பலாத்கார ரீதியில் அமுல்படுத்த வருகின்ற எந்த இராணுவத்தையும் (அன்று துரோக இயக்க இராணுவத்தையும், நாளை புலிகளாக இருந்தாலும் கூட) எதிர்த்து போரிடுவதும் தமிழீழ மக்களின் முழு அரசியல் உரிமையே". இந்திய இராணுவத்துக்கு எதிரான யுத்தம் என்பது அடிப்படையில் இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிரான தமிழீழ மக்களின் அரசியல் யுத்தமேயாகும்.

தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தை நசுக்குகின்ற ஒரு மூன்றாவது நாட்டின் இராணுவத்துக்கு எதிரான யுத்தமாக மாறியது. இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தம். கூடவே அவ் ஒப்பந்தம் சிறீலங்கா மக்களின் தேசத்தின் உரிமைகளுக்கும் எதிராக இருந்தது. ஆனால் இந்தியப் படைகள் நேரடியாக சிறீலங்காவில் இறங்காததால் அதில் கைச்சாத்திட்ட சிறீலங்கா அரசுக்கும் படைகளுக்கும் எதிரான சிங்களமக்களின் போராட்டம் J.V.P. யால் தலைமை தாங்கப்பட்டது. இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு போராட்டம் யுத்தம் இலங்கை மக்களின் கூட்டு போராட்டமாக யுத்தமாக மாற வேண்டியிருந்தது. இந்திய இலங்கைப் படைகளுக்கு எதிரான யுத்தமாக மாறியிருக்க வேண்டும். மாற்றப்பட்டிருக்க வேண்டும். புலிகளும் - J.V.P. யும் அவர்களின் குட்டி முதலாளிய

**அரசியலும் இராணுவ மூலோபாயமும் யுத்த முறையும் அவ்வாறு மாற விடவில்லை. மாறவும் அனுமதிக்காது.**

இந்திய ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கு எதிரான தமிழீழ மக்களின் ஆக்கிரமிப்பு எதிர்ப்பு தேசிய விடுதலை யுத்தம். 1987-கள் வரை சிறீலங்கா அரசுக்கு எதிரான தேசிய விடுதலை யுத்த சூழ்நிலமைகளில் இருந்து கீழ்வருமாறு வேறுபட்டிருந்தது.

- தேசிய இன ஒடுக்குமுறை யுத்தம் ஒரு உள்நாட்டு யுத்தமாக இருந்தது.

  இந்திய ஆக்கிரமிப்பு யுத்தம் ஒரு அன்னிய நாட்டின் தலையீட்டு யுத்தம்.

- உள்நாட்டு தமிழ் 'பயங்கரவாதத்துக்கு' எதிரானது என இன ஒடுக்கு முறை யுத்தத்தை சிறீலங்கா அரசு கூறியது.

  இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவது, தமிழர்களுக்கு உதவுவது எனக் கூறி 'சமாதானப்படை என்ற பெயரில் இந்தியரசு ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்த வேண்டியிருந்தது.

- சிறீலங்கா அரசுக்கும் - படைகளுக்கும் எதிரான உணர்வு, தமிழீழ மக்களிடம் நீண்ட காலமாக, பரவலான எதிர்ப்பு இருந்து வந்தது.

  இந்தியரசு - படைகள் மேல் தமிழ் மக்கள் மத்தியில் நீண்ட காலமாக பரவலான நம்பிக்கை தமிழ்த்தலைமைகளால் ஊட்டப்பட்டிருந்தது இயக்கங்களுக்கு இந்தியா இராணுவ பயிற்சி, பின் தள உதவி, பணம் என பலவும் செய்து வந்தது. இந்தியப் படைகள் தொடக்கத்தில் தமக்கு எதிரான மக்களின் உணர்வுகள் வேகமாக வளரவிடாது பார்க்க வேண்டியிருந்தது.

- சிறீலங்கா படைகளுக்கு தமிழீழத்தின் தரை - கடல் - ஆகாய வழியிலான யுத்த அனுபவம் இருந்தது.

  இந்திய படைகளுக்கு இங்கு பிரதானமாக தரை கடல் வழியிலான யுத்த நடவடிக்கைகள் முதல் அனுபவமாக இருந்தது. சிறீலங்கா இராணுவத்துடன் கூட்டு நேரடி இராணுவ நடவடிக்கை இருக்கவில்லை.

- சிறீலங்கா படைகள் பெருமளவு தெற்க்குக்கு மாற்றப்பட்டிருந்தது. இராணுவ தலைமைக்கு J.V.P. யை நசுக்குவது பிரதான வேலையாக இருந்தது. இந்தியப் படைகளின் நுழைவுக்கும், இராணுவ நடவடிக்கைக்கும் எதிராக சிறீலங்காவிலும், தமிழீழத்திலும் வெகுசன கொந்தளிப்பு போராட்டங்கள் வளர்ந்தது, தமிழ் நாட்டிலும், அய்ரோப்பிய நாடுகளிலும் இந்தியப் படை பின் வாங்க கோரும் போராட்டங்கள், எதிர்ப்பு போராட்டங்கள் தொடக்கத்திலேயே உருவாகின.

- இந்தியப் படைகள் பஞ்சாப், காஷ்மீர், அசாம், நாகலாந்து, திரிபுரா - எனப் பல தேசிய இன விடுதலை இயக்கங்களுக்கு எதிராக யுத்தம் புரிந்த அனுபவம் இருந்தது. பாகிஸ்தான், சீனாவுடன் எல்லை யுத்தங்களை நடத்திய அனுபவமும் இருந்தது. தெற்காசியாவில் அன்னிய நாட்டில் நுழைந்து



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தேசிய இன விடுதலை இயக்கத்தை ஒடுக்க யுத்தம் புரிவது முதல் அனுபவம்.

'அய்நா சமாதானப் படையில், இந்திய இராணுவம் பங்கு வகிக்கிறது. இந்தியப் படைகள் மட்டும் தனியாக 'சமாதானப் படையாக' வேடமிட்டு தெற்காசியாவில் செயல்படுவது முதல் முறை. இத்தகைய யுத்த சூழ்நிலைமையின் வேறுபாடுகள் சிறீலங்கா இராணுவத்தை விட, இந்திய இராணுவம் (எதிரி) தனது மூலோபாய ரீதியான தாக்குதல் கால கட்டத்தில் கூட, புலிகள் மேல் யுத்த ரீதியாக ஈவிரக்கமற்று யுத்த வினையாற்றுவதற்கு எல்லைப்படுத்தம் அம்சங்களாக இருந்தன. புலிகளின் பக்கம் இவ் அம்சங்கள் மூலோபாய ரீதியான தற்காப்பில் இருந்தும், இந்திய இராணுவத்தின் மேல் கொரில்லா யுத்த முறையை சிறப்பாக பிரயோகிக்க வாய்ப்பளித்தது. முக்கியமான பாதக அம்சம் ஒன்றும் இருந்தது. சிறீலங்கா படைகளை எதிர்த்து யுத்தம் புரிகையில் தமிழீழ மக்களின் பக்கம் இருந்து எதிரிக்கு சேவகம் செய்யும் ஒரு துரோக காக்கை வன்னிய படைக் கூட்டம் இருக்கவில்லை, இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தில் Telo, Plot, Eprlf, Epdp, Endlf, Tulf என்பன காக்கை வன்னிய கூட்டமாக செயல்பட்டனர். இந்திய இராணுவத்துக்கு எல்லா நிலைகளிலும் உதவினர் - இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு தேசிய விடுதலை யுத்தத்தில், துரோகிகளாக செயற்பட்டன இத்தலமைகள்.

புலிகளுக்கும் - இந்திய இராணுவத்துக்கும் இடையில் யுத்தம் தொடங்கிய பின்னர் யாழ்ப்பாணத்தை கைப்பற்ற இந்திய இராணுவம் "ஒப்பரேசன் பவான்" நடவடிக்கையை தொடக்கினான். (சூரிய ஒளி -1-ல் சிறீலங்கா இராணுவம் 'பவான்' இராணுவ நடவடிக்கையில் கடைப்பிடித்த படை முன்னேறுதல் வியூகத்தையே பின்பற்றியது). புலிகள் அப்போதும் தமது தலைமையை, பின்வாங்குதலை பெரு நிலப்பரப்பை நோக்கியே நகர்த்தினர். வவுனியாவும், கிளிநொச்சியும், முல்லைத்தீவும் வட எல்லைப்புற காடுகளும் புலிகளின் பிரதான இராணுவ செயற்படுகளமாக மாறியது. புலிகள் எதிரிக்கு எதிராக பல எதிர் தாக்குதல்களையும், போர் நடவடிக்கைகளையும் செய்தனர். கண்ணிவெடித் தாக்குதல்களை மிகக் கச்சிதமாக நடத்தினர். எதிரியை அசைய வைக்கும் கொரில்லாயுத்த முறையை பயன்படுத்தி (அலைந்து திரியும் கொரில்லா நடவடிக்கையில் புலிகளுக்கு தேர்ச்சியுண்டு) எதிரியை சிறுமுகாம்களில் இருந்து வெளியே கொண்டு வந்து தாக்கினர். அதே போல் நடமாட்டத்தில் இருந்த சிறுபடைப் பிரிவுகள் மீது (செக்சன், பிளட்டுன்) பலபக்க கொரில்லா தாக்குதல்களை நடத்தி வியூகங்களை விட்டு வெளியே வந்த இராணுவத்தை அழித்தனர். இராணுவத்தை பிணைக்கைதிகளாக பிடித்தனர் பீரங்கி வண்டிகளை, கவசவாகனங்களை தற்கொலைப் போராளிகள் மூலம் தகர்த்தனர். புலிகளின் பெண் பிரிவு கொரில்லாப் படைகளும் இவ் யுத்த நடவடிக்கையில் சிறப்பான பங்கு வகித்தனர். எதிரி யாழ் நகரை பிடிக்க நிறைய அழிவுகளை சுமக்க நேர்ந்தது. கண்ணி வெடியில் சிக்கி இறந்தவர்கள், கை, கால் இழந்து ஊனமானவர்கள் பெரும் எண்ணிக்கையை தொட்டது. நிறைய நாட்களின் பின் யாழ் எதிரியின் கைவசமானது.

இந்தக் கால கட்டத்திலும் புலிகளால் கிரமமான யுத்த முறைக்கு முன்னேற முடியவில்லை. சிறீலங்கா படைகளால் கழுத்து நெரிக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்ட புலிகள் அவ்வளவு விரைவாக வளர்வது கடினமானதும் கூட. இந்திய ஆக்கிரமிப்பு படைக்கு எதிராக நடந்த எழுச்சிகரமான வெகுசன போராட்டங்கள்,' (திலீபனின், அன்னை பூபதியின் சாகும் வரை உண்ணாவிரத போராட்டம்) கொரில்லா யுத்த முறையைக் கொண்டே தினமும் எதிரிக்கு எதிராக நடத்திய தாக்குதல்களும், எதிரியின் அழிவுகளும் புலிகளை உச்சி குளிர செய்து கொண்டிருந்தது. எதிரி இராணுவ ரீதியிலும் - அரசியல் ரீதியிலும் எவ்வாறு செயல்படுவது என்பதில் குழம்பிக் கொண்டிருந்தான்.

மூலோபாய ரீதியான தாக்குதல் கட்டத்தில் இருந்தபடி தேடுதல் நடவடிக்கையிலும், போர் நடவடிக்கையிலும், சுற்றி வளைப்புக்கான முன்னேறுதலிலும், எதிர் தாக்குதல்களிலும் எதிரி முதலில் இருந்த வேகத்தை குறைத்தான். மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையில் நின்றான். தந்திரோபாய ரீதியான தற்காப்பு நடவடிக்கையில் அதிக கவனம் செலுத்தினான். புலிகளின் 'எதிரியை அசைய வைக்கும்.' 'உள் இழுத்து செல்லும்' கொரில்லா நடவடிக்கைக்கு பலியாவதை திட்டமிட்டு நிறுத்தினான். தனது முகாம்கள் மீதான புலிகளின் தாக்குதலுக்கு மட்டும் உறுதியாக பதிலடி கொடுத்தான். அரசியல், மனோவியல் காரணங்களை முன்னிட்டு சமாதான படைக்குள் முதல் கட்டமாக முன்னிலை பெற்றிருந்த தமிழ்நாட்டு இராணுவப் படைப்பிரிவுகளை, தமிழ் பேசத் தெரிந்தவர்களை, நடமாட்ட படைகளில் - வெகுசன தொடர்பு அலுவலகம், தொலைத் தொடர்பு, போக்குவரத்து பிரிவு இவற்றில் இருந்து தந்திரமாக நிறுத்தி முகாமுக்குள் பணியாற்ற வைத்தான். யுத்த முனைகளில் அவ்விடங்களுக்கு பஞ்சாப், கூர்க்கா றெஜிமெண்டை முன்தள்ளினான். புலிகளும் அதற்கு மேல் முகாம்களை தாக்கி அழிக்கும் அளவுக்கு வளரவில்லை. எதிரியின் கண்களுக்கு இப்போ புலிகளும்-மக்களும் ஒன்றாக தெரியத் தொடங்கினர். இராணுவ காடைத் தனங்கள் அரங்கேற்றம் பெற்றது.

புலிகள், எதிரிக்கு சேவகம் செய்து கொண்டிருந்த துரோக இயக்க படைகளையும், அவர்களின் தற்காலிக-நிரந்தர முகாம்களையும் தாக்குவதில், அழித்தொழிப்பதில் யாழுக்கு வெளியே மும்முரமாக ஈடுபட்டனர். புலிகளின் புதிய கொரில்லாப் படையினர்கான யுத்த பயிற்சியாகவும் இவை இருந்தது. துரோகிகளின் இராணுவ கூட்டான 'மூன்று நட்சத்திர' செயல்பாடுகள் மேல் குறி வைத்து புலிகள் தாக்குதல்களை தேடுதல் வேட்டைகளை செய்தனர். இதில் துரோக இயக்கங்களின் உறுப்பினர்களது, படையினரது உற்றார், உறவினர், நண்பர்கள், உணவு கொடுத்தவர்கள் என பலர் கடும் சித்திரவதைக்கும் - அழித்தொழிப்புக்கும் உள்ளாகினர் (இதே போல் இத்துரோக இயக்கங்கள் கையோங்கியிருந்த காலங்களில், இடங்களில் அதே போன்று பதில்நடவடிக்கைகள் செய்தனர்) பல அப்பாவிகள் இரண்டு பக்கத்தாலும் பலியாக்கப்பட்டனர். இயக்கங்கள் மேல் மக்களுக்கு வெறுப்பும் வளர்ந்தது. துரோக இயக்கங்க-

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வின் சிறிய - பெரிய முகாம்கள் மீதான புலிகளின் தாக்குதல் வெற்றிக்கு, வவுனியாவில் 'முயல் குத்தி' பகுதியிலிருந்தPLOT இயக்க பிரதான இராணுவ முகாம் மீதான தாக்குதல் உதாரணமாக பார்க்கப்படுகிறது.

எதிரியின் 'ஒப்பரேசன் பவான்' இராணுவ நடவடிக்கை வெற்றிக்கு பின் புலிகள் பெருமளவில் காட்டுப்பகுதியை தளமாக்கினர். மூலோபாய ரீதியான தற்காப்பு கட்டத்தின் தோல்வியாக யாழ் தோல்வி இருக்கவில்லை புலிகள் செயற்படா கொரில்லாயுத்த முறைக்கு பின் வாங்கவில்லை. மனிதபலமும், ஆயுதமும் தொடர்ந்து கிடைத்தது. இந்திய ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கு எதிரான வெகுசன கிளர்ச்சி மனித பலத்தை வழங்கியது. துரோக இயக்க படைகள் மீதான வெற்றிகள், எதிரி மீதான கொரில்லாத் தாக்குதலில் கைப் பற்றப்பட்டவை என நேரடியாகவும் - மறைமுகமாகவும் இந்தியாவின் ஆயுதங்கள், வெடி பொருள்கள், தொலைத் தொடர்பு சாதனங்கள் - மற்றும் இராணுவ உபகரணங்கள் கிடைத்தது. சிறீலங்கா அரசாங்கம் கோடிக்கணக்கில் (10 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.) ஆயுதங்களை அள்ளி கொடுத்தது இந்திய சார்பு இயக்கங்கள் ( துரோக படைகள்) மீதான புலிகளின் இராணுவதாக்குதலுக்கு சிறீலங்கா இராணுவம் நேரடியான உதவிகளைக் கூட செய்தது. இன்று சிறீலங்கா அரசுக்கு எதிராக புலிகளுக்கு மனித பலம், ஆயுத உதவி அள்ளி வழங்கும் அரசியல் - இராணுவ சூழ்நிலமை சாதகமாக இல்லை.

போராளி இயக்கங்களுக்கு இடையிலான அரசியல், அமைப்பு முரண்பாட்டை, பிளவுகளை, பழைய ஆயுத மோதல்களை மறக்க முடியாத யுத்த பிளவுகளாக மாற்றியதிலும்,.போராளிகளின் ஒட்டு மொத்த இராணுவ-அரசியல் பலத்தை சிதைக்கும் மக்களை நம்பிக்கை இழக்க வைக்கும் மாபெரும் தூரநோக்குள்ள அரசியல் - இராணுவ யுக்தியை இந்தியரசும், சிறீலங்கா அரசும் திட்டமிட்டு செய்தன. தமிழ்த் துரோக தலைமைகளின் உதவியை சில சமயங்களில் புலிகளையும் இந்த சதிதிட்டத்துக்கு எதிரி கச்சிதமாக பயன்படுத்தினான்.

அதே வேளை இந்தியரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான முரண்பாட்டையும், தமிழீழ மக்களுக்கும் - சிறீலங்கா மக்களுக்கும் இடையில் ஏற்படக் கூடிய, இரண்டு அரசுகளுக்கும் எதிரான போராட்ட அய்க்கியந்தை - யுத்த ரீதியான கூட்டை தற்காலிகமாகவேனும் தடுத்து விட்டதில் சிறீலங்கா அரசு. இந்திய அரசை விட திறமையாக நடந்து கொண்டது இதற்கு புலிகளின் தலைமையை நன்றாக சரியான தருணத்தில் யுத்த ரீதியிலும் பயன்படுத்தி கொண்டது. சிறீலங்கா மக்களுக்கு இந்திய எதிர்ப்பாளனாக பிரேமதாச அரசு நடித்தது. மக்களின் இந்திய விரிவாக்க எதிர்ப்பை அரசு எதிர்ப்பை ஆயுதப் போராட்டமாக மாற்றிய J.V.P. -இன் தலைமையை கழுத்தை நெரித்து கொன்றது, புலிகளுடன் ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்த கூட்டை இரகசியமாக நிதி, ஆயுதம் வழங்கி கட்டி காத்தது. இலங்கை மக்களுக்கு கூட இந்திய எதிர்ப்பாளனாக சிறீலங்கா அரசு நடித்து காட்ட முடிந்தது.

இந்திய ஆக்கிரமிப்பு படையின் பின் வாங்கலை பின்வருவன விரைவுபடுத்தியது.

1. இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தை புலிகள் தொடர்ந்தும் நடத்தியது தமிழ்த் துரோக படைகளை முன்னால் நிறுத்தி, பின்னால் இருந்து ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்துவதில் ஏற்பட்ட தோல்வி.
2. சிறீலங்காவிலும் இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு வெகுசன போராட்டங்கள் வளர்ந்தது. இதனால் சிறீலங்கா அரசு கூட இந்தியப் படை பின் வாங்க கால வரம்பு விதித்தது.
3. தமிழ் நாட்டிலும் உலகளவிலும் இந்தியப்படை பின் வாங்க கோரிய வெகுசன போராட்ட வளர்ச்சி.
4. புலிகளுக்கும் - சிறீலங்கா அரசுக்கும் இடையில் ஏற்பட்ட அரசியல் இராணுவ ஒத்துழைப்பு கூட்டு.
5. இந்திய இராணுவத்தின் வரலாற்றில் குறுகிய காலத்தில் சந்தித்த பெருமளவு படையினரின் உடல் - ஊன இழப்பும், அழிவும்.
6. உலகளவில் இந்திய இராணுவத்துக்கும் - அரசுக்கும் ஏற்பட்ட அவமானம்.
7. இந்திய மத்திய அரசு தலைமையில் ஏற்பட்ட மாற்றம். மாநில அரசின் நிர்ப்பந்தம்.

இவை எல்லாம் சேர்ந்து இந்திய இராணுவத்தை தமிழீழத்தை விட்டு படிப்படியாக பின் வாங்க வைத்தது.IPKF -ஆல் துரோக தலைமைகளின் உதவியுடன் துப்பாக்கி முனையில் நடந்த தேர்தலும், பொம்மை அரசும், அதனால் உருவாக்கப்பட்ட "தமிழ்த்தேசிய மீட்புபடையும்" தின்று பிடிக்க முடியவில்லை. புலிகளின் உக்கிரமான அழித்தொழிப்புக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில், சிறீலங்கா படைகளும் புலிகளுக்கு உதவிக் கொண்டிருந்ததால், "19-அம்ச கோரிக்கைகளை" "மீண்டும் தமிழீழத்தை" திருகோணமலையில் அறிவித்தனர். வரதராஜ பெருமாளும், துரோக படைகளின் தலைமைகளும், பாதுகாவலர்களும் மீண்டும், ஒரு துரோகப் படை தயாரிப்புக்காக இந்தியப் படைகளுடன் இந்தியாவுக்கு பின் வாங்கினர்.

இங்கும் புலிகள், வடக்கு - கிழக்குமாகான 'தற்காலிக அரசை' நிலை குலையச் செய்வதற்கும், துரோக இயக்கங்களை இந்தியாவுக்கு ஓட விரட்டியதிலும், சிறீலங்கா அரசின் உதவியை இராணுவ ரீதியில் பயன்படுத்தினர். இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தை நடத்தவும், துரோக தமிழ்ப் படைகளை அழிக்கவும் புலிகள் சிறீலங்கா அரசுடன் செய்திருந்த அரசியல் இராணுவ கூட்டு உலகின் மிகச் சிறந்த இராஜதந்திரமாக, அய்க்கிய முன்னணி நடைமுறையாக பார்ப்பவர்களே!

இன்று சிறீலங்கா அரசு, புலிகளை தமிழீழ மக்களின் போராட்டத்தை போரை நசுக்க, அதே தமிழீழ துரோக இயக்க படைகளையும், இந்தியாவின் அரசியல் இராணுவ உதவிகளையும் எப்படி பயன்படுத்துகிறது? புலிகளை விட சிறீலங்கா அரசு மிகச் சிறந்த உலக இராஜ தந்திரி - அய்க்கிய முன்னணி

www.tamilarangam.net

நடைமுறையாளன் என ஏற்றுக் கொள்வோமா?

இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தை தமிழீழத்தில் மேலும் வளர்த்தெடுப்பதிலும், துரோக தமிழ் தலைமைகளை திட்டமிட்டு அன்னியப்படுத்தி தேவையான போது அழித்தும் அவ் இயக்கங்களில் இருந்த ஆயிரக்கணக்கான போராளிகளை தேசிய விடுதலை யுத்தத்தின் பக்கம் வென்று எடுப்பதிலும், துரோகிகளை தேடும் வேட்டையில் அப்பாவி மக்கள் மீது நடந்து கொண்ட முறையிலும் புலிகள் இழைத்த தவறுகள் கொஞ்ச நஞ்சமல்ல. இந்திய ஆக்கிரமிப்புக்கும் சிறீலங்கா அரசுக்கும் எதிராக, பொது எதிரிக்கு எதிராக சிறிலங்காவின் மக்கள் போராட்டங்களை திட்டமிட்டு நீண்டகால நோக்கில் ஆதரவளிப்பதற்கும் அவற்றுடன் ஒன்றுபடுவதற்கும் எதிராக புலிகளின் தலைமை நடந்து கொண்ட அரசியல் இராணுவ தவறும் சிறியதல்லவே. இவற்றுக்கு காரணம் புலிகளின் குட்டி முதலாளிவர்க்க அரசியலும், குறுகிய கால இராணுவ வெற்றி கண்ணோட்டமுமே தான்.

புலிகள் அன்று இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தை இறுதி வரை நடத்தினார்கள். கொரில்லா யுத்தத்தில் அன்று தமக்கு தெரிந்த அத்தனை திறமைகளையும் பயன்படுத்தி யுத்தத்தின் மூலம் இந்திய ஆக்கிரமிப்பாளனை தமிழீழ மக்களுக்கு அடையாளம் காட்டினர்.

யாழ்ப்பாணத்தை மீண்டும் தமது கட்டுப்பாட்டுள் கொண்டு வருவதற்
கான இராணுவ ரீதியான இராஜதந்திரங்களை புலிகள் கடைப்பிடித்தனர்.
மூலோபாய ரீதியாக தற்காப்பு கட்டத்தில் இருந்து கொண்டே IPKF இன் பின்
வாங்குதலையும் சிறீலங்கா இராணுவத்தின் எல்லைப்படுத்தப்பட் . சக்தியை
யும் சரியாக பயன்படுத்தி யாழ்ப்பாணத்தை எதிரி முடமாக்கப்ப
மாக மாற்றினர் புலிகளின் இந்த இராணுவ தந்திரத்தை அதற்கு
ஓராண்டு நடத்திய பேச்சு வார்த்தையை, தேனிலவை மெச்சுவே

இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு தேசிய விடுதலை யுத்தம் [illegible]
யாக எதிரி தனது [illegible]

வாங்கினான். புலிகளும் தமது மூலோபாய ரீதியான முதலாவது ட்டத்தில் இருந்
தபடியே எதிரியை பின் வாங்க வைத்ததுடன், யாழில் மட்டும் சிறீலங்கா படை
களை முகாமுக்குள் நேரடியாக முடமாக்கி தமது கட்டுப்பாட்டு பிரதேசமாக,
எதிரி முடமாக்கப்பட்ட பிரதேசமாக மாற்றினர். இத்தகைய ஒரு அரசியல் -
இராணுவ யுத்த நிலமை விதிவிலக்காக நடக்கக் கூடியதே என்பதற்கு இந்திய
ஆக்கிரமிப்புக்கு எதிரான புலிகளின் யுத்தம் ஒரு எடுத்துக் காட்டு.

அடுத்த இதழில் தொடரும்


Tollvesenet informerer

# Tolldistriktene Oslo og Akershus er slått sammen

Oslo tolldistrikt og Akershus tolldistrikt er fra 1. januar 1997 slått sammen til ett tolldistrikt.
Nytt navn og ny postadresse er:

**Oslo og Akershus tolldistrikt**
**Postboks 8122 Dep**
**0032 OSLO**

**Telefon 22 86 09 99**

Åpningstiden er fra klokken 08.00 til 15.30.

Besøksadresse:
**Tollbugt. 1 A**
Tolldistriktssjefen
Administrasjonsavdelingen
Driftsavdelingen
Kontrollavdelingen

**Schweigaardsgt. 15**
Tollkassereravdelingen

**INFORMASJON**

Oslo og Akershus tolldistrikt har opprettet et eget kontor som besvarer forespørsler av generell karakter. Åpningstiden er fra klokken 08.00 til 15.30.

**Infosenteret**
Tollbugt. 1 A (inngang fra Prinsens gate)
Postboks 8122 Dep
0032 OSLO
**Telefon 22 86 08 50**
**Telefaks 22 33 72 99**

**TOLL- OG AVGIFTSDIREKTORATET**

Innrykket av Statens informasjonstjeneste

A-4/97


www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# Endringer i dagpengene til arbeidsløse

## fra 1. januar 1997




Retten til dagpenger under arbeidsløshet blir endret fra 1. januar 1997.

**De viktigste endringene er:**

1. Krav til høyere inntekt for å få rett til dagpenger.
2. Inntektens størrelse bestemmer hvor lenge du har rett til dagpenger.

For å få rett til dagpenger i 1997 må du i 1996 ha hatt en inntekt på minst kr 51 250,– (eller kr 41 000,– i gjennomsnitt per år i 1994, 1995 og 1996). Da kan du få dagpenger i inntil 78 uker.

Hvis du hadde en inntekt på minst kr 82 000,– i 1996 (eller i gjennomsnitt per år i 1994, 1995 og 1996). kan du få rett til dagpenger i inntil 156 uker.

Overgangsregler som sikrer fortsatt stønad for personer som har dagpenger ved årsskiftet, gjelder ut året 1998.

Heftet «Dagpenger» og nærmere informasjon får du på ditt lokale arbeidskontor.

Innrykket av Statens informasjonstjeneste A-35/96

**Arbeidsmarkedsetaten**

# Opplysningstjenesten i bydelene

**Alle bydelene i Oslo har opprettet lokale opplysningstjenester. I opplysningstjenestene kan *du* spørre – vi svarer på det meste:**

- Barnehageplass
- Ungdomstiltak
- Helse- og sosialtjenester
- Foreninger i bydelen
- Skolefritidsordninger
- Støtteordninger
- Miljøspørsmål
- Vei- og trafikksaker

---- **og mye, mye mer**

**Opplysningstjenesten i bydelene:**

| | |
|---|---|
| 1 Bygdøy Frogner | 23 01 47 37 |
| 2 Uranienborg Majorstuen | 22 56 56 01 |
| 3 St. Hanshaugen Ullevål | 22 69 37 03 |
| 4 Sagene Torshov | 22 15 22 40 |
| 5 Grünerløkka Sofienberg | 22 36 02 60 |
| 6 Gamle Oslo | 22 08 21 10 |
| 7 Ekeberg Bekkelaget | 22 18 06 00 |
| 8 Nordstrand | 22 74 09 07 |
| 9 Søndre Nordstrand | 22 76 50 50 |
| 10 Lambertseter | 22 74 62 45 |
| 11 Bøler | 23 12 52 00 |
| 12 Manglerud | 22 08 71 00 |
| 13 Østensjø | 22 78 65 30 |
| 14 Helsfyr Sinsen | 22 57 94 50 |
| 15 Hellerud | 22 82 01 10 |
| 16 Furuset | 22 30 00 26 |
| 17 Stovner | 22 21 85 40 |
| 18 Romsås | 22 82 10 96 |
| 19 Grorud | 22 16 60 02 |
| 20 Bjerke | 23 03 99 00 |
| 21 Grefen Kjelsås | 22 71 03 80 |
| 22 Sogn | 22 02 66 02 |
| 23 Vinderen | 22 92 16 23 |
| 24 Røa | 22 50 66 30 |
| 25 Ullern | 22 06 30 10 |

**Vi hjelper deg med å finne frem i det offentlige**

*Byrådslederens avdeling og Rådhusets forvaltningstjeneste, Informasjonsavdelingen*

SI-A-31/96

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# FNs standardregler for funksjonshemmede

## Kjenner du FNs 22 standardregler?

Reglene gjelder like muligheter for mennesker med funksjonshemming. Mennesker med funksjonshemming skal ha tilgang til samfunnets tiltak og tjenester på lik linje med andre. Reglene omfatter mål, krav og virkemidler for å oppnå full deltakelse og likestilling. Norge og andre land har godkjent standardreglene.

**Regjeringens handlingsplan for funksjonshemmede** bidrar til å gjennomføre standardreglene i Norge.

Ønsker du mer informasjon, kan du bestille disse dokumentene:

**FNs standardregler for like muligheter for mennesker med funksjonshemming**

Bestillingsnr. I-0802/B
Bestillingsnr. I-0804/lydkassett

**Regjeringens handlingsplan for funksjonshemmede 1994–1997**

Bestillingsnr. I-0721/B
Bestillingsnr. I-0722/punktskrift
Bestillingsnr. I-0723/lydkassett
Bestillingsnr. I-0724/storskrift
Bestillingsnr. I-0767/B/Lettlest kortversjon (ny i 1996)

## Standardreglene og handlingsplanen kan bestilles gratis fra:

Sosial- og helsedepartementet, Sosialavdeling II, Postboks 8011 Dep, 0030 Oslo. Telefaks 22 24 27 66.

Offentlige etater bestiller på vanlig måte fra Statens trykksakekspedisjon, Postboks 8169 Dep, 0032 Oslo. Telefaks 22 24 27 86, ODIN. E-post:x.400: S=ste-bestilling;O=ft;P=dep;A=telemax;C=no. Internett: ste-bestilling@ft.dep.telemax.no.

**Sosial- og helsedepartementet**

Innrykket av Statens informasjonstjeneste

A-32/96

Annonsen er 3-sp. 151 mm bredde

Rammestrek oppe/nede *kuttes til avisens 3-sp. br.* 146 mm

Rammestrek oppe/nede *kuttes til avisens 3-sp. br.* 137 mm

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## Statens vegvesen

# Nye førerkortregler 1997

**Fra 1. januar 1997 utsteder vi norske førerkort i følgende klasser:**

Klasse A motorsykkel
Klasse A1 lett motorsykkel
Klasse B personbil, varebil
Klasse C lastebil
Klasse C1 liten lastebil (ved fornyelse)

Klasse D buss
Klasse D1 minibuss
Klasse E tilhenger/tilhengerredskap til B, C, D eller D1
Klasse S beltemotorsykkel
Klasse T traktor

Følgende endringer i førerkortforskriftene bør du spesielt merke deg:

**Førerkort for motorsykkel klasse A1 og A**
Førerkortet for lett motorsykkel heter nå klasse A1. I klasse A skilles det mellom tung og mellomtung motorsykkel hvis du er under 21 år. Tar du klasse A når du er mellom 18 og 21 år, må du ha hatt førerkortet i to år før du får lov å kjøre tung motorsykkel. Når du fyller 21 år, kan du kjøre tung motorsykkel uten hensyn til når du tok førerkortet. (Førerkort i klasse A1 teller ikke i denne sammenheng.)

**Førerkort klasse B og trekking av tilhenger**
Hvis du skal kjøre med tilhenger, kan tilhengeren ikke ha en totalvekt som overstiger bilens egenvekt. Bil og tilhenger kan til sammen ikke ha en totalvekt over 3500 kg. Du må undersøke i bilens vognkort om det er gitt ytterligere begrensninger for hvor tung tilhenger bilen kan trekke.

**Ny førerkortklasse C1 - liten lastebil**
Personer som har rett til å kjøre bil med maksimal totalvekt 7500 kg og høyst 8 passasjerplasser (stempelordning), vil kunne få klasse C1.
Det gjelder samme helsekrav som for klasse C.
Førerkortet gis 10 års gyldighet.

**Nedre aldersgrense for å ta førerkort klasse CE (vogntog) blir 18 år**
Nedre aldersgrense for å få klasse CE blir generelt 18 år. Dersom kjøringen omfattes av kjøre- og hviletidsbestemmelsene, avgjør disse om en 18-åring kan kjøre tunge vogntog.

**Førerkort klasse D2 (minibuss) blir D1**
Klasse D1 gjelder for:
Minibuss med høyst 16 passasjerplasser, uten lengdebegrensning for kjøretøyet.
Kombinert bil med over 8, men høyst 16 passasjerplasser og maks. 6 m lengde.
Klasse D2 gir rett til klasse D1 og C1 ved fornyelse.

**Ny førerkortklasse S - beltemotorsykkel (snøscooter)**
Det skal ikke lenger utstedes førerkort klasse A begrenset til beltemotorsykkel. I stedet innføres førerkortklasse S som gjelder beltemotorsykkel.

**Førerkortkravet gjelder også kjøring uten last eller passasjerer**
Tidligere kunne den som hadde førerkort for lastebil også kjøre buss uten passasjerer. Dette gjelder ikke lenger. Du kan heller ikke kjøre tom lastebil med bussførerkort eller tom minibuss uten å ha førerkort for minibuss.

**Egen førerprøve for hver førerkortklasse**
Du må avlegge førerprøve for hver førerkortklasse du vil ha. Unntak:
Førerkort i klasse CE, DE eller D1E gir rett til klasse BE.
Klasse CE gir rett til klasse DE når du har klasse D.

Hvis du ønsker førerkort for klasse CE, må du først ha bestått førerprøven som gjelder for lastebil (kl. C), og deretter prøven med tilhenger (C)E. Forskriften gir adgang til at begge prøvene kan avlegges samme dag. De nye reglene gjelder også for den som ikke har bestått prøven i 1996, og må kjøre opp på ny i 1997.

**Synstest ved førerprøven**
Hvis du ikke legger fram legeattest/synstest ved førerprøven, må vi teste synet ditt. Du må da kunne lese et bilkjennemerke på 20 meters avstand.

**Førerkortets gyldighetstid når mørkekjøringskurs ikke er gjennomført**
De som fikk førerkort utstedt i perioden 1. februar 1995 til 1. juli 1996, får utsettelse til å ta mørkekjøringskurset innen 1. mars 1997.

**Nærmere opplysninger får du ved Statens vegvesens lokale trafikkstasjoner (tidl. Biltilsynet). Telefonnummer til disse er oppført under Statens vegvesen.**

Innrykket av Statens informasjonstjeneste

A-38/96

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

13. UTGÅVE

Statens informasjonsteneste

# "Hvem svarer på Hva i staten 1996"

Dette er ei oppslagsbok for tilselte i næringsliv, offentleg forvaltning og andre som er i kontakt med statsadministrasjonen.

I boka finn du ei oversikt over alle departementa, med adresser, telefon- og telefaksnummer. Dei største underliggjande etatane er også tekne med. I tillegg finn du adresseregister over statlege etatar sentralt og regionalt.




Slår du opp på eit bestemt emne i stikkordregisteret, blir du vist til ansvarleg avdeling i departementet med vidare opplysningar om lokale instansar og andre relevante institusjonar.

Denne utgåva inneheld utvida adresseinformasjon, blant anna for politiske parti, institusjonar på fylkesnivå og Noregs utanriksstasjonar.

"Hvem svarer på Hva i staten" er til sals i bokhandelen, og boka kostar kr

**198,-**

SI-A-34/96

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

From/
Avsender

"SUVADUGAL"
Herslebs gt-43,
0578 Oslo,
Norway

BLAD

JANUAR 97

To/
Mottaker

அழைப்பு மடல்கள், வாழ்த்து மடல்கள், புத்தகங்கள், வர்ணப்படங்கள்,
நினைவுமலர்கள், விளம்பரப் பலகைகள், சுவரொட்டிகள்,
துண்டுப்பிரசுரங்கள், கடித உறைகள், கடிதத்தாள்கள், ரசீதுப் புத்தகங்க
மற்றும் எவையாயினும், குறைந்த நேரத்தில் நவீன தொழில் நுட்ப
இயந்திரங்கள் மூலம் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்



# ARTISTIC

Hausmanns gt-6 0186 Oslo, Norway

22 36 20 26/ 92 03 02 53

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்